DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

உதயம் 1412 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 28, 2023

# எமது எதிர்காலச் சந்ததிகளுக்காக சுற்றுச்சூழலை மேம்படுத்த மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களின் பாவனை அதிகரிக்க வேண்டும்

## மின்சார வாகன பற்றறி உற்பத்தித் தொழிற்சாலைக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்வில் கனடிய பிரதமர்

"எரிபொருள் பாவனையால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டநிலையில் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள் எமது வீதிகளில் அதிகமாக பயன்படுத்தப்பட வேண்டும். அந்த வகையில் தற்போது ஒன்றாரியோ மாகாணத்தில் சென் தோமஸ் ங்கநகரில் இயங்கத் தொடங்கியுள்ள மின்சார வாகனங்களுக்கு தேவை-யான பெற்றரிகளை தயாரிக்கும் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் பெற்றரிகள் எமது எதிர்கால சந்ததியின் சுற்றுச் சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்"

இவ்வாறு கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் தெரிவித்துள்ளார். ஒன்றாரழரியோ மாகாணத்தில் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களுக்கு பயன்படுத்தும் பெற்றரிகள் தயாரிக்கும் தொழிற்சாலையில் நடைபெற்ற நிதிஒதுக்கீடு தொடர்பான நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பிர-தமர் தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து உரையாற்றும் போது "நாங்கள் கனடாவில் தயாரிக்கப்படும் திட்டத்தைப் பற்றி பேசும்போது, இப்போதும் எதிர்காலத்திலும் நல்ல நடுத்தர தொழில்களை உருவாக்குவது பற்றி பேசுகிறோம், நாங்கள் எங்கள் குழந்தைகள் மற்றும் பேரக் குழந்தைகளுக்கு சுத்தமான காற்று பற்றி பேசுகிறோம். வலுவான பொருளாதாரம் பற்றி நாங்கள் பேசுகிறோம். இன்று செனட் தாமஸில் வோக்ஸ்வாகனின் புதிய மின்சார வாகன பெற்றரி தொழிற்சாலை எமது தேசத்தின் தொழிலாளர்களுக்கும், சமூகத்திற்கும், பொருளாதாரத்திற்கும் கிடைத்த வெற்றி" என்றார்.

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் இவ்வருடத்திற்கான வெற்றியாளர் விருதுகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது



கனடாவில் மிக நீண்டகாலமாக இயங்கிவரும் கனடிய தமி-ழர் வர்த்தக சம்மேளனத்தின் இவ்வருடத்திற்-கான வெற்றியாளர் விருதுகள் வழங்கும் விழா கடந்த சனிக்கிழமையன்று மாலை மார்க்கம் நகரில் உள்ள ஹில்ரன் ஐந்து நட்சத்திர ஹோட்டல் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வழமை போல கனடாவின் மத்திய மாகாண மற்றும் உள்ளாட்சி அமைப்புக்களில் அரசியல் பதவிகளை வகிக்கும் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகி-யோர் கலந்து சிறப்பித்தனர். மண்டபம் நிறைந்த விழாவாக அமைந்த இந்த விருது வழங்கும் விழாவிற்கு கனடிய தமிழர் சமூகத்தில் பல்வேறு துறைகளில் பிரகாசிக்கும முக்கியமான பிரமுகர்கள் அழைக்கப்பெற்றவர்களாக அந்த பிரமாண்டமான மண்டபத்தை அலங்கரித்து அழகு செய்தார்கள். (உள்ளே தொடர்ச்சி 12ம் பக்கத்தில்)

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI

# Fare Change

PRESTO Adult fares are increasing **May 1, 2023**

| Fare Type | Current | May 1 |
|---|---|---|
| Cash Fare | $4.00 | $4.50 |
| Contactless Credit Card | $4.00 | $4.50 |
| **Adult** | (Ages 20-64) | |
| PRESTO e-Purse | $3.10 | $3.40 |
| PRESTO Weekly Pass | $34.00 | $37.50 |
| PRESTO Monthly Pass | $128.00 | $141.25 |
| **Youth** | (Ages 13-19 years old) | |
| PRESTO e-Purse | $2.55 | $2.80 |
| PRESTO Weekly Pass | $27.50 | $30.25 |
| PRESTO Monthly Pass | $107 | $118 |
| **Senior** | (Ages 65 years of age and over) | |
| PRESTO e-Purse Non-Brampton Resident | $1.60 | $1.75 |

For more information, visit **bramptontransit.com**

Brampton Transit züm

உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?

Coverall Group Inc

- Painting
- Bathrooms
- Kitchens
- Decks
- Flooring
- Basements
- Pot lights
- Accent Walls

Contact us 416.706.8160

MILA

AT MIDLAND AVE & LAWRENCE AVE E, SCARBOROUGH

UNITS IN HAND ACT NOW BEFORE SOLD OUT

FREEHOLD TOWNS FROM ONLY $1.29M

ஸ்காபுறோ நகரின் மையப்பகுதியில் Lawrence Avenue East & Midland Avenue சந்திப்புக்கு அருகில் உங்களுக்கான அழகிய இல்லங்களை விரைவில் பெற்றுக்கொள்ளுங்கள்

FREEHOLD TOWN இல்லம் ஒன்றின் ஆரம்ப விலை $1.29 மில்லியன்



EXTENDED DEPOSIT STRUCTURE:
- TOTAL $150,000 FOR TOWNHOMES

CAPPED DEVELOPMENT CHARGES
- $8,000 PLUS HST FOR TOWNHOMES

ASSIGNMENT AVAILABLE*

$5,000 DECOR CREDIT & KITHEN APPLIANCE PACKAGE FOR TOWNHOMES







ஒவ்வொரு இல்லத்தையும் வாங்கும்போது 1 அவுன்ஸ் தங்கக் கட்டி பரிசாக வழங்கப்படும்



KESHAV GOYAL. BROKER OF RECORD
CONTACT SALES : 647-901-3800 | 647-262-9264
SALES@MILATOWNSVIPACCESS.CA

LOMBARD GROUP REAL ESTATE INC., BROKERAGE

Canada
We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# பொருளாதாரப் பிரச்சனையை மறைக்க இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் தென்னிலங்கை அரசுகள்

இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழ் சிங்கள மக்கள் இனரீதியான மற்றும் மதரீதியான வேறுபாடுகளை ஒரு புறத்தே தள்ளிவைத்து விட்டு அநீதியை ஏற்படுத்தும் அரசுகளுக்கு எதிராக போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்தி வந்தார்கள். இலங்கை மக்கள் ஒன்றிணைந்து உணர்வுபூர்வமாக நடத்தும் போராட்டங்களை எதிர்கொள்ள முடியாத முதலாளித்து அரசுகள் தமிழ் சிங்கள மக்களை அதுவும் குறிப்பாக தொழிலாளர் விவசாய மக்களை பிரித்தாளும் தந்திரத்தை பயன்படுத்தத் தொடங்கின.

தொழிற்சங்கங்களில் இணைந்து ஒற்றுமையாக போராட்டங்களை நடத்திய தொழிலாளர்களை பிரித்து அவர்களுடைய போராட்ட பலத்தை குறைப்பதற்காக பல தந்திரங்களை அரசியல் தலைவர்கள் துணிந்து செய்யத் தொடங்கினார்கள். இவ்வாறான முரண்பாடுகளை ஏற்படுத்த சிங்கள அரசியல்வாதிகள் மேற்கொண்ட பிற்போக்குத் தனமான நடவடிக்கைகளுக்கு அப்போதைய தமிழ் அரசியல்வாதிகளும் உடந்தையாக இருந்தார்கள் என்பதையும் நாம் இங்கே பதிவு செய்யலாம். தமிழ்-சிங்கள தொழிலாளர்களின் ஒற்றுமை சிதைக்கப்பட வேண்டும் என்ற சிங்கள அரசியல்வாதிகளின் எண்ணங்களுக்கு தூபமிடுவது போன்று தமிழ் பேசும் தொழிலாளிகளுக்காக மொழி வழித் தொழிற்சங்கங்களை ஆரம்பித்து மேலும் முரண்பாடுகள் ஏற்பட அத்திவாரமிட்டார்கள்.

இவ்வாறான தவறான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் தற்காலத்தில் தமிழ் சிங்கள மக்கள் மத்தியில் தவிர்க்க முடியாத குரோதத்தை ஏற்படுத்தின. இவ்வாறான முரண்பாடுகளுக்கிடையில் தற்போது ஏற்பட்டுள்ள கலாச்சார ரீதியான முரண்பாடுகளும் தோன்றின. அவற்றில் ஒன்று தான் மத ரீதியான தாக்குதல்கள் மற்றும் குரோதங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவை இன அழிப்புடன் பின்னிப்பிணைந்த செயற்பாடுகளாகும்.தனியான தொடர்ச்சியான நிலப்பரப்பினை கொண்ட தனியான மொழி,கலாசார பண்பாடுகளை கொண்ட தமிழ் தேசிய இனத்தின் தொன்மைமிக்க வாழ்வியல் வரலாற்றை அழிப்பதனூடாக அவர்களின் தனித்துவம்,அடையாளத்தை அழித்து சிங்கள-பௌத்தத்திற்குள் கலந்து விடுவதன் மூலம் கலாசார படுகொலையீனூடாக இன அழிப்பு செய்யும் செயற்பாடே முன்னெடுக்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியே சைவ ஆலயங்களை இடித்து அல்ல சைவத்தின் அடையாளமாகத் திகழும் சிலைகளை பிடுங்கி எறிதல் போன்றவை.

இவற்றை முழுமையாக தடுத்து நிறுத்தி தமிழர் தாயகத்தையும் தமிழ் மக்களின் தொன்மையையும் தனித்துவத்தையும் நிலைபேறாக பாதுகாக்க வேண்டியது அவசியமும் அவசரமுமான தேவையாகிறது. ”வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடம்” என்பது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.இவ்வொப்பந்தம் ஓர் சர்வதேச ஆவணமாகும்.இதனை இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக மீறுதல் என்பது சர்வதேச ஒப்பந்தத்தை மீறும் செயலாகும்.இவ்விடயத்தில் இந்தியா தலையிடுவதற்கான சட்ட உரித்தும் தமிழ் மக்கள் சார்பில் இந்தியா கையெழுத்திட்டிருப்பதால் அதனை பாதுகாக்கும் தார்மீக பொறுப்பையும் இந்தியா கொண்டுள்ளது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு-கிழக்கை நிரந்தரமாக இணைப்பதை உத்தரவாதம் செய்யவேண்டிய பொறுப்பும் சட்ட உரித்தும் இந்தியாவுக்குண்டு.இந்தியா இதனை நிறைவேற்ற செய்யும் கடமை தமிழ் தலைமகளுக்குரியது.இந் நகர்வானது வடக்கு கிழக்கில் குறைந்தபட்ச அதிகாரமேனும் உள்ள ஆட்சிக்கு வழிவகுக்கும்.

கலாசார அழிப்பினூடாக இன அழிப்புத்திட்டம் தொடர்பில் தமிழ் தலைமைகள் நுண்ணறிவுடனும் ராஜதந்திர ரீதியிலும் சர்வதேச சமூகத்தின் ஆதரவை திரட்ட தொடர்ச்சியான முன்முயற்சிகள் எடுக்கவேண்டும்.தமிழ்த் தலைமை எப்போதுமே அரசின் அடக்குமுறைக்கு எதிர்ப்பை பதிவு செய்யும் அணுகுமுறையே மேற்கொள்கின்றனர்.மாறாக இவ் அடக்குமுறைகள் தொடர்பில் இலங்கை அரசின் கைகளை கட்டிப்போடும் வகையில் முன்னெடுப்புகள் ஏற்படுத்த வேண்டும்.

சர்வதேச சமூகத்தை கையாளுதல் என்பது அவர்கள் இலங்கைக்கு வரும்போது சந்தித்து கதை சொல்லிவிட்டு வருவதாக அன்றி அனைத்து ஆதாரங்களும் திரட்டப்பட்டு வகைப்படுத்தப்பட்டு கலாசார உரிமைகளை பாதுகாக்க உலக அளவில் இயங்கும் ஐ.நா.மற்றும் அதனோடிணைந்த நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதும் சர்வதேச நடவடிக்கை நோக்கி நகர்த்துவதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படவேண்டும்.

ஆதாரங்களை திரட்டுவதற்கும் வகைப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொருத்தமான சர்வதேச தளங்களில் அவற்றை சமர்ப்பித்து நிலைபேறான தீர்வு காண செயற்படும் வகையில் ஓர் சர்வதேச தலைமையகம் செயற்படவேண்டும்.அது ஓர் உயர்ஸ்தானிகரகத்துக்குரிய தரத்துடன் செயற்படும் வகையில் அமைய வேண்டும்.

இவற்றுக்கு சமாந்தரமாகவும் விரைவாகவும் இந்திய-இலங்கை ஒப்பந்த அடிப்படையில் வட-கிழக்கு இணைப்பை உத்தரவாதப்படுத்துவதற்கு உரிய நகர்வுகளும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் நகர்வுகளும் மேற்கொள்ளப்படவேண்டும்.தேவை அறிவுபூர்வமான,சாமர்த்தியமான ராஜதந்திர நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே எமது எண்ணமாகும்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## பொதுச்சபைக் கூட்டம், General Meeting- 2023.

V United Care For Kids Inc Ontario அமைப்பினது வருடாந்த பொதுக் கூட்டமானது எதிர்வரும் வைகாசி மாதம் 27ந் திகதி 2023ம் ஆண்டு நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து அங்கீரிக்கப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களும் தவறாது சமூகந் தரும்படி அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்: 635 Middlefield Rd, Scarborough (ONT). காலம்: வைகாசி 27, 2023. பிற்பகல் 1.00 மணி (சனிக்கிழமை).

The Annual General Meeting of V United Care For Kids Inc Ontario is scheduled to be held on the 27th of May in the year 2023. All authorized members of the General Assembly are therefore requested to attend this meeting.

Location: 635 Middlefield Rd, Scarborough (ONT). Date: May 27, 2023, 1.00 PM (Saturday).

Thank you.

### நிகழ்ச்சிநிரல். Agenda.

1. மௌன வணக்கம். Silent salutation.
2. தலைவர் உரை. Chairman's Speech.
3. செயலாளர் அறிக்கையும், செயற்திட்ட அறிக்கையும். Secretary's Report and Project Report.
4. பொருளாளர் அறிக்கை. Treasurer's Report.
5. சமர்ப்பிக்கப்பட்டஉபவிதித் திருத்தங்கள். Amemdments to the bill submitted.
6. இயக்குனர்சபை உறுப்பினருக்கான தேர்வு. Selection for a member of the Board of Directors
7. பிறவிடயங்கள். Other matters.
8. கூட்ட நிறைவு. Closure of meeting.

BASEMENT FOR RENT

Whitby நகரில் Dryden / Thickson சந்திப்பிற்கு அருகில்
3 bedroom basement with washroom வாடகைக்கு உண்டு.
10 mins from Durham College.
Close near to NoFrills, bus stop, & Whitby Go Station.
Available from May 1st onwards.

Call:
(647) 608-7448

House Cleaning Staff Wanted

House Cleaning Staff Wanted.
Day Shift Only.
( No Evenings Or Weekends)

Please Call
905 472 6042

யாழ்ப்பாணத்தில் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் ஏ9 வீதியில் இருந்து 1.6 கிலோமீற்றர் தூரத்தில் புத்தூர் - மீசாலை AB 32 வீதியில் 19.5 பரப்பு காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 778 883-9894 / 604-767-9549
மின்னஞ்சல் - kirupakarankathiravelu@gmail.com

இயக்கச்சியில் காணி விற்பனைக்கு உண்டு (40 ஏக்கர்)

கிளிநொச்சி கச்சேரியில் பதியப்பட்ட, பச்சிலைப்பள்ளி பளை பிரதேச சபை பிரிவில் இயக்கச்சியில் A9 வீதியில் இருந்து 3 கி.மீ தொலைவில் ஆளியவளை வீதியில் 40 ஏக்கர் பிரயோசனங்கள் கொண்ட காணி சிறிய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு (25 ஏக்கர் உறுதி, 15 ஏக்கர் Permit).

தொடர்புகளுக்கு: 1-519-222-5191 அல்லது 94-777750308



# பணம் தேவை என்பதனாலேயே கொலை செய்தேன்! நெடுந்தீவு கொலையாளி வாக்குமூலம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

(23-04-2023)

நெடுந்தீவில் வயோதிபர்கள் ஐவரை கொடூரமாகக் கொலை செய்துவிட்டு தப்பி புங்குடுதீவில் தலைமறைவாகியிருந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

"அவர்களின் வீட்டில் தங்கியிருந்தேன். எனக்கு பணம் தேவை என்பதனால் அவர்கள் அணிந்திருந்த நகைளை அபகரிக்க முடிவெடுத்தேன். தனியாக நகைகளை கொள்ளையிட்டால் பிடித்துவிடுவார்கள், சம்பவத்தை திசை திருப்பவே அனைவரையும் கொலை செய்தேன்" என்று கைது செய்யப்பட்டவர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 26 தங்கப் பவுண் நகைகள், ஆடைகள் மற்றும் அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

நெடுந்தீவு மாவிலி இறங்குதுறையை அண்டிய 12ஆம் வட்டாரத்தில் கடற்படை முகாமுக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் இருந்து வெட்டுக்காயங்களுடன் சடலங்கள் மீட்கப்பட்டன.

100 வயது மூதாட்டி ஒருவர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுல செனரத்தின் கட்டளையில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் விஷாந்தின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பொலிஸ் குழுவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நெடுந்தீவில் நடமாடிவிட்டு நேற்றுக் காலை அங்கிருந்து வெளியேறிச் சென்ற நபரை புங்குடுதீவில் வைத்து கைது செய்தனர்.

ஜேர்மனியில் கொலை முயற்சி வழக்கொன்றில் குற்றவாளியாகக் கண்டறிந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 51 வயது நபரே கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து அதிகளவு தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன.

அது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட போதே சந்தேக நபர் தானே கொலை செய்ததாக ஒப்புக் கொண்டார்.

"நான் நெடுந்தீவு வந்தால் குறித்த வயோதிபர்களின் வீட்டில்தான் தங்கிச் செல்வேன். அதுபோன்று கடந்த சில தினங்களுக்கு முன் வந்து தங்கியிருந்தேன்.

அங்கு வெளிநாட்டிலிருந்து வந்திருந்தவர்கள் நகைகள் அணிந்திருந்தனர். அனைவரது நகைகளையும் அபகரித்து விற்பனை செய்து வரும் பணத்தில் கடவுச்சீட்டு பெற்று நான் மீளவும் ஜேர்மனிக்கு செல்ல திட்டமிட்டேன்.

அதனால் நேற்று அதிகாலை 4.30 பின்னர் நித்திரையில் இருந்த அனைவரையும் கொலை செய்துவிட்டு நகைகளை எடுத்துக்கொண்டு தப்பிக்க எண்ணினேன்.

நகைகளை மட்டும் அபகரித்துச் சென்றால் பொலிஸார் எளிதில் பிடித்து விடுவார்கள், அதனால் பொலிஸ் விசாரணையை திசை திருப்ப அனைவரையும் கொலை செய்தேன்" என்று சந்தேக நபர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரை நெடுந்தீவுக்கு அழைத்துச் சென்று ஏனைய சான்று பொருட்களை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

சந்தேக நபர் இன்று மாலை ஊர்காவற்றுறை நீதிவானிடம் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளார்.

# வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் எதிர்வரும் 25ஆம் திகதி நிர்வாக முடக்கல் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்து மன்னாரில் விசேட ஊடக சந்திப்பு



- மன்னார் நிருபர் (23-04-2023

வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பொது நிர்வாக முடக்கல் போராட்டத்திற்கு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

இந்த நிலையில் குறித்த நிர்வாக முடக்கல் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) மற்றும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) ஆகியவை இணைந்து ஞாயிற்றுக்கிழமை (23) காலை 11 மணியளவில் தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் விசேட ஊடக சந்திப்பு ஏற்பாடு செய்தனர்.

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) கட்சி சார்பாக கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளருமான டானியல் வசந்,ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) கட்சி சார்பாக கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும், மன்னார் நகர சபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.ஆர். குமரேஸ், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) கட்சி சார்பாக கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் அ.ஜேம்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில், குறிப்பாக வடக்கு கிழக்கில் பௌத்த, சிங்கள இராணுவ மயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராகவும், புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராகவும் இந்த நிர்வாக முடக்கல் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கை அரசாங்கமானது எமது மக்களுக்கு எதிராக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஒன்றை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி ஏற்கனவே அடக்குமுறைக்கு உள்ளாக்கி இருக்கின்ற எமது மக்களை மீண்டும் மீண்டும் அடக்கி ஆழ் வதற்கான ஒரு புதிய சட்டத்தை உருவாக்குகின்றது.

இதற்கு எதிராக நாங்கள் அனைவரும் கிளர்ந்து எழுந்து இந்த சட்டத்தை இந்த நாட்டிலிருந்து துடைத்து எடுப்பதற்கான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்ள வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறோம்.

இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினூடாக அரசாங்கத்துக்கு எதிராக சமூக ஊடகங்களில் சிறிய கருத்தை பதிவிட்டாலே அவர்களை கைது செய்து சிறை படுத்துவதற்கான அதிகாரம் இந்த ஆயுதப் படைகளுக்கு வழங்கப்படுகின்றது.

ஏற்கனவே இந்த ஆயுதப் படைகளுக்கு இலங்கையில் உள்ள பயங்கரவாத தடுப்பு சட்டம் அதே போன்று அவசர கால தடைச் சட்டம் ஊடாக பல அடக்குமுறை அதிகாரங்கள் வழங்கி இருக்கிறது.

உதாரணத்திற்கு எமது கலாச்சார விழுமியங்களை அழிப்பதற்கான அதிகாரம் எமது நிலங்களை கைப்பற்றுவதற்கான அதிகாரம் மற்றும் கேள்வி கணக்கின்றி எமது இளைஞர்கள் யுவதிகளை சிறை படுத்துவதற்கான அதிகாரம் ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதற்கான அதிகாரம் என்று பல அதிகாரங்களை வழங்கி இந்த நாடு எமது மக்களை அடக்கி ஆள்கிறது.

மீண்டும் மீண்டும் எமது மக்களை ஒரு திறந்தவெளி சிறைச்சாலைக்குள் வைப்பதற்கான புதிய சட்டத்தை நாட்டிலே இந்த அரசாங்கம் உருவாக்குகின்றது.

அது தான்சட்டம் எனவே இந்த தருணத்தில் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை இந்த நாட்டில் கொண்டு வராத வகையில் போராட வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

இந்த சட்டமானது தமிழர்களுக்கு மட்டும் பாதிப்பு இல்லை. முஸ்லிம் மற்றும் சிங்கள இளைஞர் யுவதிகளுக்கும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். எனவே இந்த விடயத்தில் முஸ்லிம் சிங்கள மக்களின் பிரதிநிதிகளாக உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் 25ம் திகதி பாராளுமன்றத்தில் இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கட்டாயம் எதிர்க்க வேண்டும் என்பதுடன் எதிர் வரும் 25ஆம் தேதி வடக்கு கிழக்கு தழுவிய அனைத்து மாவட்டங்களிலும் முழு அடைப்பு போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

அன்றைய தருணம் வர்த்தக நிலையங்களை மூடி அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் முச்சக்கர வண்டிகள் அரச தனியார் பேருந்துகள் இயங்காமல் நிறுத்தி போராட்டத்திற்கு வலுச் சேர்ப்பதோடு இளைஞர், யுவதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், மனித நேயச் செயற்பாட்டாளர்கள் என்று பலரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டு அரசாங்கத்திற்கு பாரிய எதிர்ப்பை காட்டுமாறு கோரிக்கை விடுத்தனர்.

# மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலில் இடம் பெற்ற புனித நோன்பு பெருநாள் தொழுகை



- மன்னார் நிருபர் (22-04-2023

இஸ்லாமிய மக்கள் சனிக்கிழமை (22-04-2023) புனித நோன்பு பெருநாளை கொண்டாடுகின்றனர்.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள இஸ்லாமிய மக்களும் இன்றைய தினம் புனித நோன்புப் பெருநாளை கொண்டாடுகின்றனர்.

மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலில் சனிக்கிழமை (22) நோன்பு பெருநாள் தொழுகைகள் இடம் பெற்றது.காலை 6.45 மணிக்கு பெண்களுக்கும் காலை 7.30 மணியளவில் ஆண்களுக்கும் பெருநாள் தொழுகை இடம் பெற்றது.

இவ் தொழுகை மூர்வீதி ஜும்மா பள்ளிவாசலின் மௌலவி எம்.அஸீம் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது நோன்பு பெருநாள் முக்கியத்துவம், அல்குர்ஆன் சமய நற்சிந்தனைகள், பற்றியும் இங்கு எடுத்து கூறப்பட்டது.

மேலும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் விசேடமாக துவா தொழுகைகள் இடம் பெற்றது.

மேலும் மாவட்டத்தில் உள்ள ஏனைய பள்ளிவாசல்களிலும் பெருநாள் தொழுகைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# மன்னார் மடுவில் மின்னல் தாக்கி வயோதிபப் பெண் பலி



- மன்னார் நிருபர் (25-04-2023

மன்னார் மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கீரிசுட்டான் பகுதியில் செவ்வாய்க்கிழமை (25) மாலை மின்னல் தாக்கி வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை (25) மாலை நிலவிய சீரற்ற காலநிலையின் போது தனது வீட்டு வளாகத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

பத்மநாதன் தெய்வானை (வயது-62) என்ற வயோதிப பெண்ணே உயிரிழந்துள்ளதாக தெரிய வருகிறது.

சம்பவ இடத்திற்கு சென்ற மடு பொலிஸார் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் யாழ்.மரியன்னை தேவாலயத்தில்



(21-04-2023)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது, குண்டு வெடித்த நேரமான 8.42 மணிக்கு தேவாலய மணி ஒலிக்கப்பட்டு உயிரிழந்தவர்களுக்காக இரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது டன் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.



நினைவேந்தலில் யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர், அருட்தந்தையர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

# பூமி தினத்தில் வெப்ப அலைகளின் மூலம் பூமி எமக்கான செய்தியை அனுப்பியுள்ளது



**- பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு**

பூமியின் வளங்களை வருங்காலச் சந்ததிகளுக்காகப் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஆண்டுதோறும் ஏப்ரல் 22ஆம் திகதி பூமி தினம் கொண்டாடப்படுகிறது. பூமி தினம் மட்டுமல்ல; சுற்றுச்சூழல் தினம், உயிர்ப்பல்வகைமை தினம், தண்ணீர் தினம், மண் தினம், சமுத்திரங்கள் தினம், வனவிலங்குகள் தினம், மலைகள் தினம், காடுகள் தினம், ஓசோன் பாதுகாப்புத் தினம் என்று சர்வதேச நாட்காட்டியில் ஏனைய விடயங்கள் தொடர்பான தினங்களைவிடப் பூமியைப் பாதுகாப்பதற்கான தினங்களே அதிகம். எனினும் எமது தலைமுறைக்குக்கூட மிச்சம்மீதி எதையுமே விட்டுவைக்காத வேகத்தில் வளங்களை நாம் சுரண்டி வருகிறோம். இவற்றுக்கான எதிர்வினைகளைப் பூமி அவ்வப்போது ஆற்றிவருகின்றபோதும் நாம் கண்டுகொள்வதாக இல்லை. இந்தப் பூமி தினத்திலும் வெப்ப அலைகளின் மூலம் பூமி "இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய்" என்று எமக்கான வலுவான செய்தியை அனுப்பியுள்ளது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பூமி தினம் தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், பூமியின் மத்திய கோட்டுப் பகுதியில் அமைந்துள்ள தென்னாசிய நாடுகளில் கோடைகாலமான மார்ச்-ஏப்ரல் மாதங்களில் அதிக வெப்பநிலை நிலவுவது வழமை ஆனால், அண்மைய வருடங்களில் இக்காலப்பகுதியில் வழமைக்கு மாறாகத் தாங்கொணாத வெப்பம் உணரப்பட்டுள்ளது. இந்தியாவில் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் கடந்த ஒரு நூற்றாண்டின் மார்ச் மாதங்களில் நிலவிய வெப்பநிலையைவிட மிகக் கூடுதலான வெப்பநிலை பதிவாகியுள்ளது. மார்ச் தொடங்கி மே மாதம் வரையில் 280 தடவைகள் வெப்ப அலைகளின் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளது. இந்த ஆண்டும் சித்திரையில் கடந்த ஒரு நூற்றாண்டின் சித்திரை மாதங்களைவிட கூடுதலான வெப்பநிலை பதிவாகியுள்ளது. வெப்ப அலைகளின் தாக்குதலுக்கு இலங்கையும் தப்பவில்லை.

தாக்குகின்ற வெப்பஅலைகளின் எண்ணிக்கையும் அவற்றின் சூட்டுத்திறனும் அண்மைய வருடங்களில் அதிகரித்து வருவதற்குப் பூமியின் வெப்பநிலை அதிகரித்து வருவதே பிரதான காரணமாகும். நாம் பெற்றோலியப் பொருட்களை அளவுகணக்கின்றி எரித்துத்தள்ளுவதும், கரிக்காற்றை உறிஞ்சவேண்டிய காடுகளை வரம்பின்றி அழித்துத்தள்ளுவதுமே பூமி சூடாகி வருவதற்கான காரணங்களாகும். காலநிலை மாற்றம் குறித்த அரசாங்கங்களுக்கிடையேயான குழு இன்னும் இருபது வருடங்களில் பூமியின் சராசரி வெப்பநிலை 1.5பாகை செல்சியஸ் அளவால் அதிகரிக்கும் என்று எச்சரித்திருக்கிறது. இது வருங்காலங்களில் நாம் வெப்ப அலைகளின் தாக்குதல்களுக்கு மேலும் மிகமோசமாக ஆளாகவுள்ளோம் என்பதற்கான எச்சரிக்கையாகும்.

வெப்ப அலைகள் எமது இதயம், நுரையீரல், சிறுநீரகங்களின் ஆரோக்கியத்தைப் பாதிப்பதோடு, வெப்பவாதத்துக்கு ஆட்படுத்தி மரணத்துக்கும் இட்டுச்செல்கிறது. பூமியை வெப்பப்படுத்தி எம்மில் நாமே எரிதணலைக் கொட்டுகிறோம் என்பதற்கும் அப்பால், பூமியின் ஆரோக்கியத்திலும் பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறோம். பூமி சூடாகுவதால் பனி மலைகள் உருகிக் கடல் மட்டம் உயரத்தொடங்கியுள்ளது. சூறாவளிகளின் தாக்குதிறன் மூர்க்கமாகி வருகிறது. ஒருபுறம் வறட்சி வாட்ட இன்னொருபுறம் வெள்ளம் பெருக்கெடுக்கிறது. உயிர்ப்பல்வகைமை அழிய ஆரம்பித்துள்ளது. பூமி வெப்பஅலைகளின் மூலம் விடுத்திருக்கும் செய்தியை நாம் உணர்ந்து இயற்கையோடு இசைந்து வாழ இப்புவி தினத்திலாவது உறுதியேற்போம் தவறின், ஒட்டுமொத்தப் பூமியின் அழிவுக்கும் நாமே காரணமாகி விடுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgagecliniccanada.com

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகளின் செயல் — திடீர் சுகயீனமடைந்த பாடசாலை அதிபர் வைத்தியசாலையில் அனுமதி

இலங்கை செய்திகள் Sri Lanka News




(26-04-2023)

மன்னார் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு செவ்வாய்க்கிழமை (25) விஜயம் செய்த மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள் 03 பேர் குறித்த பாடசாலை அதிபருடன் வாய் தர்க்கத்தில் ஈடுபட்ட நிலையில் குறித்த அதிபருக்கு திடீரென உடல் ரீதியாக உபாதை ஏற்பட்ட நிலையில் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சென்ற நிலையில், குறித்த அதிபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள் மூன்று பேர் செவ்வாய்க்கிழமை (25) மன்னார் எழுத்தூர் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு விஜயம் செய்துள்ளனர்.

அங்கு சென்ற குறித்த மூன்று அதிகாரிகளும் இவ்வருடம் சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராய உள்ளதாக தெரிவித்த நிலையில் தரம் 11 வகுப்பறைக்குச் சென்றுள்ளனர்.

பின்னர் குறித்த வகுப்பறையில் கல்வி கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவரை வெளியேற்றியுள்ளனர். பின் அங்கு சென்ற குறித்த அதிபரையும், அவர்கள் அங்கிருந்து வெளியேற கூறியுள்ளனர்.

இதனால் அதிபருக்கும், குறித்த அதிகாரிகள் மூவருக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டுள்ளது என தெரிய வருகிறது.

பின்னர் அதிபர் அங்கிருந்து சென்று அதிபர் அலுவலகத்தில் தனது கடமைகளை மேற்கொண்டுள்ளார்.

இதன் போது குறித்த மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள் அதிபர் அலுவலகத்திற்குச் சென்று பல்வேறு ஆவணங்களை கோரி அவருக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர். இதனால் அதிபர் உள ரீதியாக பாதிப் படைந்துள்ளார்.

உடனடியாக தனக்கு உடல் ரீதியாக உபாதை ஏற்படுவதை அறிந்து கொண்ட அதிபர் பாடசாலை லொக்கு புத்தகத்தில் பதில் அதிபருக்கு கடமையை தற்காலிக பொறுப்பு கொடுத்து எழுதி விட்டு பாடசாலைக்கு வெளியில் வந்து முச்சக்கர வண்டி ஒன்றை பிடித்து மன்னார் வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

பின்னர் குறித்த அதிபர் விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த பாடசாலைக்குச் சென்ற மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகள் மூவரில் ஒருவரின் மனைவியை குறித்த பாடசாலைக்கு அதிபராக நியமனம் செய்ய முயற்சிகள் இடம்பெற்று வருவதாகவும், அதன் காரணமாகவே தொடர்ச்சியாக குறித்த அதிபருக்கு மன்னார் வலயக்கல்வி பணிமனை அதிகாரிகளினால் தொடர்ச்சியாக பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் தெரிய வருகிறது.

இவ் விடயம் குறித்து மாகாண ரீதியில் உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற உள்நாட்டு, வெளிநாட்டு தொழிற்சந்தை

## ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் பங்கேற்பு

- மன்னார் நிருபர் (26-04-2023)

மன்னார் மாவட்ட செயலக ஏற்பாட்டில் மாபெரும் தொழிற் சந்தை நிகழ்வு புதன்கிழமை (26) மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம் பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்கள் மற்றும் பாடசாலையிலிருந்து இடை விலகியவர்கள் தமது திறன்களை அடையாளம் கண்டு அதனூடாக தமக்கு பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த நிகழ்வில் உதவி மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளடங்களாக அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் குறித்த நிகழ்வில் மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளையும் உள்ளடக்கி ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.



தொழிற் சந்தையின் முக்கிய விடயமாக பயிற்றுவிக்கப்பட்ட வளவாளர்கள் ஊடாக திறன்களை அடையாளம் காணப்பட்டு அதற்கான வழி காட்டலினூடாக ஒவ்வொருவரும் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.





அது மட்டுமன்றி உயர் கல்வியினூடாக தமது எதிர்காலத்தை வளப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள இளைஞர் யுவதிகள் தமது உயர் கல்வியை பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் சுமார் 40க்கும் அதிகமான உள்நாட்டு வெளிநாட்டு மற்றும் உயர் கல்வி வழங்கும் நிறுவனங்கள், பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் ,வியாபார ஊக்குவிப்பு செயற்பாடுகள் உடன் தொடர்புடைய நிறுவனங்கள் என பல தரப்பட்ட நிறுவனங்கள் கலந்து கொண்டது.மேலும் வேலை வாய்ப்பு குறித்து வீதியோர நாடகம் அரங்கேற்றப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# முழுமையாக முடங்கியது மன்னார் — பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு கிழக்கில் ஹர்த்தால்



- மன்னார் நிருபர் (25-04-2023)

வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் செவ்வாய்க்கிழமை (25) பொது நிர்வாக முடக்கல் போராட்டத்திற்கு தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து அழைப்பு விடுத்துள்ள நிலையில் மன்னார் மாவட்ட வர்த்தக சங்கங்கள், மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், பொதுமக்கள் உட்பட அனைவரும் பூரண ஆதரவு வழங்கியுள்ளது டன் மன்னார் மாவட்டம் முழுவதும் முற்றாக முடங்கியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் பயங்கர வாத சட்டத்திற்கு மாற்றாக புதிதாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும், முப்படையினரின் காணி அபகரிப்பு உட்பட வனவள திணைக்களம், தமிழ் முஸ்லிம் மக்களின் காணிகளை கபளீகரம் செய்கின்ற மை, கிழக்கில் மேய்ச்சல் தரைகளில் சிங்கள குடியேற்றங்கள் இடம் பெறுவதையும் நிறுத்தக் கோரியும், மதஸ்தலங்கள் தாக்கப் படுகின்றமை தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பகுதியில் திட்டமிட்டு இடம்பெறும் சிங்கள குடியேற்றங்களை தடுக்க கோரியும் செவ்வாய்கிழமை (25) வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.



இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ள துடன் தனியார் போக்குவரத்து சேவையும் முடக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் தொழிலுக்கு செல்லவில்லை.

அதே நேரம் பாடசாலைக்கு மாணவர்களின் வருகையும் குறைவாக காணப்பட்டமையை அவதானிக்க கூடியதாக இருந்தது.

அதே நேரம் அரச திணைக்களங்கள் மற்றும் அரச போக்குவரத்து சேவைகளும் வழமைபோல் இடம் பெற்ற போதும் மக்களின் நடமாட்டம் வெகுவாக குறைந்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# "இவர் உங்கள் தந்தையாக இருந்தால் ஒரு துளி குப்பையை கூட சாலையில் போட மாட்டீர்கள்" மாணவர்கள் மத்தியில் சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருப்பது குறித்து விழிப்புணர்வு நிகழ்வு ஆரம்பித்து வைப்பு

- மன்னால் நிருபர் (27-04-2023)

பாடசாலை மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருப்பது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் மெசிடோ நிறுவனம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நிகழ்வை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ. ஸ்ரான்லி டிமெல் வியாழக்கிழமை (27) மாலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.







“இவர் உங்கள் தந்தையாக இருந்தால் ஒரு துளி குப்பையை கூட சாலையில் போட மாட்டீர்கள்” என்ற வசனம் எழுதப்பட்ட பதாகைகள் வீதியோரங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வு மன்னார் பிரதான பாலத்தடி யில் வியாழக்கிழமை (27) மாலை இடம்பெற்றது.

இதன் போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் மற்றும் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ ஆகியோர் இணைந்து விழிப்புணர்வு பதாதையை வைபவ ரீதியாக காட்சிப்படுத்தி விழிப்புணர்வு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் மெசிடோ நிறுவன பணியாளர்களினால் மன்னார் நகர பகுதியில் உள்ள பாடசாலை மற்றும் பொது இடங்களில் குறித்த பதாகைகளை முதல் கட்டமாக காட்சிப்படுத்தினர்.

# சிறப்பாக இடம்பெற்ற மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் புதிய அதிபர் பொறுப்பேற்கும் நிகழ்வு

இலங்கை செய்திகள் Sri Lanka News



- மன்னார் நிருபர் (21.04.2023)

மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் புதிய அதிபர் பதவியேற்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (21) காலை 9 மணியளவில் பாடசாலை பிரதி அதிபர் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கடந்த 7 வருடங்களாக அதிபராக கடமையாற்றிய அருட்சகோதரர் ரெஜினோல்ட் கல்முனை கார்மேல் பற்றிமா பாடசாலை அதிபராக நியமனம் பெற்று சென்ற நிலையில் கல்முனை கார்மேல் பற்றிமா பாடசாலையில் கடந்த 5 வருடங்களாக கடமையாற்றிய அருட்சகோதரர் சந்தியாகு மன்/புனித சவேரியார் ஆண்கள் பாடசாலை அதிபராக வெள்ளிக்கிழமை (21) கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

குறித்த கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர், அருட்சகோதரர் ரெஜினோல்ட் டிலாசால் சபை அருட்ச கோதரர்கள், அருட்சகோதரிகள், கல்முனை கார்மேல் பற்றிமா பாடசாலை உதவி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவ சங்க உறுப்பினர்கள் மற்றும் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை பழைய மாணவர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் மட்டக்களப்பில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு சீயோன் தேவாலயத்தில் அஞ்சலி




- மன்னார் நிருபர் (21-04-2023)

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த வெள்ளிக்கிழமை (21) தற்கொலை தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 4ம் ஆண்டு நினைவேந்தல் சீயோன் தேவாலயத்தில் விசேட ஆராதனையும் கல்லடி பாலத்திற்கு அருகே உள்ள நினைவு தூபி மற்றும் காந்தி பூங்காவிலுள்ள நினைவு தூபியிலும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில், விசேட ஆராதனையும் உயிர் நீத்தவர்களுக்கு மலர்தூவி மெழுகுவத்தி ஏற்றி ஒரு நிமிட அஞ்சலியும் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2019ம் ஆண்டு ஏப்ரல் 21ம் திகதி சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலில் சிறுவர்கள் 14 பேர் உட்பட 31 பேர் உயிரிழந்ததுடன் 30 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 4ம் ஆண்டு நினைவேந்தல் தினமான வெள்ளிக்கிழமை (21) சியோன் தேவாலயத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் விசேட ஆராதனைகள் போதகர் மகேசன் ரொஷான் தலைமையில் இடம்பெற்றது.





ஆராதனையில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், படு காயமடைந்தோர் உட்பட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டதுடன் அங்கு மலர் வளையம் வைத்து குண்டு தாக்குதல் இடம்பெற்ற 9.02 மணிக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து கல்லடி பாலத்துக்கு அருகில், உயிரிழந்தவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவு தூபியில் கிழக்கு சமூக அபிவிருத்தி அமையத்தின் பெண்கள் வலையமைப்பு ஒன்றிணைந்து மலர் வைத்து மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்திய பின்னர் இந்த மனித படுகொலைக்கு நீதி கோரி அந்த பகுதியில் வீதியில் சங்கிலி தொடராக நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை நகர் காந்தி பூங்காவில் அமைக்கப்பட்ட நினைவு தூபியில் முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள் ஒன்றிணைந்து மலர் வைத்து மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# பொருளாதார நெருக்கடியால் கேள்விக்குள்ளாகி உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் கல்வி நிலை

(மன்னார் எஸ்.றொசேரியன் லெம்பேட்)

நாட்டின் சமகால பொருளாதார நெருக்கடி நலிவடைந்த மக்கள் பலரின் வாழ்க்கையிலும் வெகுவாகத் தாக்கம் செலுத்தியுள்ள நிலையில், பாடசாலை செல்கின்ற பிள்ளைகளின் கல்விச் செலவை ஈடு செய்ய முடியாத நிலையில் திண்டாடும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி குறித்து ஆராய்ந்தோம்.

எவ்வளவு தடைகள் ஏற்பட்டாலும் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எதிர் காலத்தில் தமது பிள்ளைகள் எதிர்கொள்ளக் கூடாது என்ற மனப்பாங்குடன் பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் உள்ள பெண்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைக்கின்றனர்.

வடக்கு கிழக்கில் பல்வேறு விதங்களில் பெண்கள் பலரும் பெண் தலைமைத்துவ குடும்பங்களாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு போர் காரணமாக அதிக பாதிப்புகளையும், பொருளாதார நெருக்குதல்களையும் எதிர் கொண்ட சமூகமாகவும் பெண் தலைமைத்துவ குடும்பங்களே காணப்படுகின்றன.

தமிழர்கள், முஸ்லிம்கள் சிங்களவர்கள் என அனைவரும் இதில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான பாதிப்புகளில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் அவர்களைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் சுமார் 54 ஆயிரத்து 532 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளதாக வடமாகாண மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

நாடு முழுவதிலுமுள்ள ஏனைய மாகாணங்களிலும் பாதிப்புக்கள் வடக்கு, கிழக்கை விடக் குறைந்தளவானதே.




"நான் கணவனை பிரிந்து வாழ்ந்து வருகின்றேன். எனக்கு பாடசாலைக்குச் செல்லும் 4 பிள்ளைகள் உள்ளனர். பிள்ளைகளுக்கு நாள் ஒன்றுக்கு குறைந்தது 800 ரூபாய் வரை தேவைப்படுகிறது என்கிறார் முல்லைத்தீவு முள்ளியவளை யைச் சேர்ந்த வினோதா. அவருக்கு வயது 46.



"பிள்ளைகளின் கல்விக்காகவும், குடும்ப செலவீனங்களுக்காகவும் கூலி வேலை செய்து வருகிறேன். கிடைக்கிற நாளாந்த வருமானம் பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதல்ல. வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டால், பிள்ளைகளின் கல்விச் செலவையும் இதர தேவைகளையும் ஈடு செய்து கொள்வேன். இதன் மூலம் பாடசாலை செல்லும் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை தங்கு தடைகள் இன்றி முன்னெடுக்க என்னால் முடியும். நாங்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை எமது பிள்ளைகள் எதிர் நோக்கக் கூடாது. அதற்காக அவர்கள் சிறப்பாக கற்க வேண்டும்" என்று வினோதா எதிர்பார்ப்புக்களை பகிர்கிறார்.

முல்லைத்தீவு கரும் புள்ளியானில் வாழும் மூன்று பிள்ளைகளின் தாயான கோகுலன் சுகந்திக்கு மூன்று பிள்ளைகள்.

மூவரும் பாண்டியன்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கின்றனர்.



"அப்பியாசக் கொப்பிகளின் விலை ஏற்றத்தால் கொப்பிகளை வேண்ட சவால்களை சந்தித்தோம். கடந்த காலங்களில் குறைந்த விலையில் தேவையான அப்பியாச கொப்பிகளை வேண்ட முடிந்தது. தற்போதைய சூழ்நிலையில் ஒரு அப்பியாசக் கொப்பியை வேண்ட 200 ரூபாய் தேவைப்படுகிறது. ஒரு பிள்ளைக்கு ஒரு தவணைக்கு அப்பியாசக் கொப்பியை கொள்வனவு செய்ய சுமார் 6500 ரூபாய் வரை தேவைப்படுகிறது என கூறினார் கோகுலன் சுகந்தி.

விவசாய நடவடிக்கையில் ஈடுபடுகிறேன். பிள்ளைகளின் கல்விச் செலவு, குடும்ப செலவு என்பவற்றை ஈடு செய்ய முடியாத நிலையில் நாளாந்த பொழுதை கழிக்கின்றோம்" என விரக்தியோடு கூறினாள் அனுதீபா.



கால்நடை வளர்ப்பை வாழ்வாதாரமாகக் கொண்டு, தனது மகளின் கற்றல் செயற்பாடுகளையும் குடும்ப செலவினங்களையும் கட்டிக்காத்து வந்த கரும்புள்ளி யானைச் சேர்ந்த அனுதீபா, தனது கால்நடைகளில் 4 மாடுகள் நோயால் இறந்து விட்ட நிலையில், 3 மாடுகளை மாத்திரம் தற்போது வளர்த்தவாறு, குடும்ப செலவுக்கும் பிள்ளையின் கல்வி செலவுக்கும் இடையே போராடி வருகின்றார்.

தலை மீது சுமத்தப்பட்ட குடும்ப பாரத்தை தணிப்பதற்காக கிராமத்தில் கிடைக்கும் கூலி வேலைகளுக்கும் அனுதீபா செல்கின்றபோது, வாழ்க்கைச் செலவு மும்மடங்காக அதிகரித்ததால், கூலியாகக் கிடைக்கும் வருமானத்தில் குடும்ப செலவுகளை ஈடுகட்ட முடியாதவளாக, சுயதொழில் வாய்ப்பொன்று அமையப்பெற்றால், பிள்ளையின் கல்வி செலவுகளையும் ஈடு செய்து முன்னேற முடியும் என்பது அவளது எதிர்பார்ப்பாக உள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் 2 ஆம் வகுப்பில் கல்வி கற்று வரும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த தீபனுக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர்.




ஒரு சகோதரி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வருகிறார். இன்னும் ஒரு சகோதரி சாதாரண தரம் படித்து வருகிறார். மூவரது கல்விச் செலவும் கால் நடையை மையப்படுத்தியே அமைந்துள்ளது. அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை வைத்தே படிப்பு உள்ளடங்களாக இதர தேவைகளையும் ஓரளவேனும் பூர்த்தி செய்து கொள்கின்றனர். தனது தாயினால் குடும்பச் செலவை சமாளிக்க முடியாத நிலை காணப்படுவதாகவும், சகோதரி உயர் கல்வியை கைவிட நேரும் நிலையில் உள்ளதாக தமது குடும்பத்தின் எதிர்காலத்தை நினைத்து விரக்தி அடைகின்றார்.

வவுனியா சலலீகம பகுதியைச் சேர்ந்த எச்.எம்.சோபாலிக,



கணவனை இழந்த நிலையில், 3 பிள்ளைகளோடு வறுமையில் வாடுகிறார். "வயல் மற்றும் தோட்ட வேலைக்கு சென்று பணம் சம்பாதிக்கிறேன். தற்போது மின்சார கட்டணம் அதிகரித்துள்ளது. தோட்டத்திற்கு கிணற்றில் இருந்து தண்ணீர் இறைக்க வேண்டும். இதனால் அதிக மின்சாரம் விரயமாகிறது. அதிக மின் கட்டணத்தை செலுத்த வேண்டும். தோட்டச் செய்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. மூன்று பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கான உணவு, பாடசாலைக்கான செலவீனங்களை செய்ய முடியாத நிலையில் நிக்கின்றேன், என கவலை கொள்கிறார்.



எனது கணவர் யுத்தத்தின் போது மரணித்து விட்டார். எனக்கு 5 பிள்ளைகள் உள்ளனர். 4 பிள்ளைகள் திருமணம் முடித்து விட்டனர். நானும் எனது கடைசி பிள்ளையும் உள்ளோம். தற்போதைய பொருளாதார நிலை காரணமாக நான் பல கஸ்டங்களை அனுபவிக்கின்றேன். திருமணம் முடித்த பிள்ளைகளுக்கு உரிய தொழில் வாய்ப்பு இல்லை. இதனால் எனது கடைசி பிள்ளையின் பாடசாலை செலவு மற்றும் குடும்பச் செலவை ஈடு செய்ய முடியாத நிலையில் உள்ளேன். எனக்கு சிறு வயதில் காலில் ஏற்பட்ட காயம் தற்போது பாதிப்பை ஏற்படுத்துகின்றது. தொடர்ந்தும் என்னால் கூலி வேலை செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது என அடுத்த கட்டம் நோக்கிய பயத்தை வெளிப்படுத்தினார் வவுனியா குடா கட்டி குடிய பகுதியைச் சேர்ந்த யூ.சுவரன லதா.




மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட 345 கிராம அலுவலர் பிரிவுகளில்,

யுத்தத்தினால் கணவனை இழந்த, அங்கவீனமுற்ற கணவர், கணவனை பிரிந்து வாழ்தல், கணவன் தடுப்பில் இருத்தல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் பெண் தலைமைத்துவ குடும்பங்களாக 34 ஆயிரத்து 155 குடும்பங்கள் காணப்படுவதாக மட்டக்களப்பு மாவட்டச் செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

"மூத்த பிள்ளை உயர் தரத்திலும், 2வது பிள்ளை தரம் 7 இலும், மூன்றாவது பிள்ளை தரம் 5 இலும் நான்காவது பிள்ளை தரம் 2 இலும் கல்வி கற்கின்றனர். கல்விச் செலவு உட்பட குடும்பச் செலவை ஈடு செய்ய கூலி வேலைக்குச் செல்கின்றேன் என்றார் 45 வயதான கணவர் இல்லாத நிலையில் நான் கூலி வேலை செய்கின்றேன் என்றார் காத்தான்குடியை சேர்ந்த பாத்திமா பர்வீன்.



வீட்டில் கோழியும் வளர்த்து அதில் கிடைக்கிற மேலதிக வருமானத்தை வைத்து அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவை ஈடுகட்ட முயற்சி எடுத்தாலும், மருத்துவ மற்றும் உணவு போன்ற செலவுகளை தன்னால் சமாளிக்க முடியவில்லை என தனது சுய தொழில் முயற்சியும் செலவுகளை ஈடு செய்ய உதவவில்லை என ஏக்கம் கொண்டார் பாத்திமா பர்வீன்.

தாயின் துன்பங்களை பகிர்ந்த தரம் 7 இல் கல்வி கற்கும் பாத்திமா அஸீனா (பெயர் மாற்றப்பட்டது).



"எனக்கு வாப்பா இல்லை. உம்மா தான் எங்களை எல்லாம் வைத்து பார்க்கிறார். உணவு மற்றும் படிப்பிற்கான அனைத்து விடயங்களையும் உம்மாவே பார்க்கின்றார். பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் கூலி வேலை செய்து எங்களை பார்க்கிறார் என கூறினாள்.

மட்டக்களப்பு வவுணதீவு பகுதியை சேர்ந்த மாணவனான றொசாந்தன் கூறுகையில்,



"எனது அம்மா ஒரு முன்னாள் போராளி. அவர் இயலாத நிலையிலும் வீட்டு வேலைக்கு போய் உழைக்கின்றார். நாங்கள் மிகவும் கஷ்ட நிலையில் இருக்கிறோம். நான் தரம் 10 இல் கல்வி கற்று வருகிறேன். எனக்கு பாடசாலைக்கான புத்தக பை கூட இல்லை. உரிய அப்பியாசக் கொப்பிகள் கூட இல்லை. பாடசாலைக்கு அல்லது தனியார் வகுப்புகளுக்கு செல்ல துவிச்சக்கர வண்டி இல்லை. இவ்வாறான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாங்கள் பல்வேறு இடர்களை நாங்கள் சந்தித்து வருகிறோம்.

அம்மாவினால் தொடர்ந்தும் வேலைக்கு செல்ல முடியாது. ஒரு பொருளாதார நெருக்கடியின் மத்தியில் நான் அம்மாவின் உதவியுடன் கல்வி கற்று வருகிறேன். நான் நாளாந்தம் 5 கிலோ மீற்றர் தூரம் நடந்து பாடசாலை சென்று வருகின்றேன். அவ்வளவு தூரம் நடந்து செல்வது என்பது எனக்கு சரியான கஷ்டமாக உள்ளது.இந்த நிலை தொடருமாக இருந்தால் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்படும் என விரக்கி நிலையை சுட்டிக்காட்டினான்.

(தொடர்ச்சி 20 பக்கம்)

# ரணில் – ராஜபக்ஷ அரசியல் இருப்புக்காக தனி மனித சுதந்திரம் பலியாவதா?



வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

- சாதாரண மக்களின் கிளர்ச்சிகளை எதிர்கொள்வதற்கே பயங்கரவாத தடுப்புச் சட்டம்.
- "கருத்து வேறுபாடு" பயங்கரவாதம் அல்ல!

கடந்த ஒரு வருடமாக நாட்டில் பேசப்பட்டு வந்த "சிஸ்டம் சேன்ஜ்" கருத்தியலை பின் தள்ளி தற்போது ரணில் ராஜபக்ஷ அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தலைப்புச் செய்திகளில் ஆதிக்கம் செலுத்துகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, "அரகலயா" மற்றும் அதைத் தொடர்ந்து ராஜபக்சே அரசாங்கத்தின் வெளியேற்றம், இது போன்ற அடக்குமுறையில் இருந்து தென்னிலங்கை விலகிச் செல்ல எதிர்பார்த்தது. ஆனால் ரணில் - ராஜபக்ஷ ஆட்சியானது விளைவுகளைப் பொருட்படுத்தாமல், தமது அதிகாரத்தை உறுதிப்படுத்த முடிந்த அனைத்தையும் செய்து வருகிறது. இதன் விளைவுகளில் ஒன்றே பயங்கரவாதத் தடுப்புச் சட்டமூலமாகும்.

எவ்வாறாயினும், அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டமூலம் மற்றும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட பிற சர்வாதிகார நடவடிக்கைகளுக்குமத்தியில், அரகலயாகருத்தியல்பின் தள்ளப்பட்டுள்ளது. பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற நிலைமைக்கு ரணில் - ராஜபக்ஷ அரசாங்கம் நாட்டு மக்களைத் தள்ளியுள்ளது.

- ரணில்-ராஜபக்ஷ ஆட்சியை நோக்கி மக்கள் கேள்வி

அந்தவகையில் ரணில் - ராஜபக்ஷ ஆளும்தரப்பினர் தமது அரசியல் இருப்பினைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, பொருளாதார செழுமைக்காக அல்லது நாட்டின் பொருளாதார மீட்சிக்காக என்ற போர்வையில் மக்களின் தனிமனித சுதந்திரம் பறிக்கப்பட வேண்டுமா? என்பதே இன்று ஒட்டு மொத்த இலங்கை மக்களின் கேள்வியாக உள்ளது.

- தமிழ் பேசும் மக்களின் அனுபவம்.

வடக்குக் கிழக்கு தமிழ் முஸ்லிம் மற்றும் மலையக மக்களைப் பொருத்து அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டமூலம் சட்டமாக்கப்படுமயின் பௌத்த மேலாதிக்கமும் அரச பயங்கரவாதமும் இணைந்து தெற்கைவிட மிக மோசமாகத் தம்மை கபளீகாரம் செய்யும் என்பதை அறிந்து வைத்துள்ளனர். இரட்டை பிறவிகளாக 1979 இல் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டமும் {PTA}, அதனுடன் இணைந்த அரச பயங்கரவாதத்தின் கொடூரத்தையும் அனுபவித்தவர்கள்.

- பயங்கரவாதத் தடைச் சட்டம் {PTA}

1979ல், பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) முதன்முதலில் ஒரு தற்காலிகச் சட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் 1982ல் அது நிரந்தரமாக்கப்பட்டது.

சித்திரவதை, தன்னிச்சையான கைது, தடுப்புக்காவல் மற்றும் தண்டனை மற்றும் நியாயமான விசாரணைக்கான உரிமை உட்பட, அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள உரிமைகளை இச்சட்டம் மீறுகிறது.

- இன்று எமக்கு நாளை உங்களுக்கு!

PTA கொண்டுவரப்பட்டபோது பெரும்பான்மை இனத்தவர்களில் பெரும்பாலானவர்கள் இச்சட்டம் தனி நாடு கோரிப் போராடும் தமிழர்களுக்கு எதிரானது என்பதினால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஆதரித்தனர்.

புயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடூரம்குறித்து சிறுபான்மையினம் பெரும்பான்மை இனத்தினரை எச்சரித்தனர். எமக்கு எதிராகக் கொண்டு வரப்படும் இச்சட்டம் நாளை பெரும்பான்மை இனத்துக்கு எதிராகவும் பாயும் என்றும் தமிழர்தரப்பு அப்போது எச்சரித்தது. இதனை கணக்கில் எடுத்ததாகவோ காதில் வாங்கிக் கொண்டதாகவோ அவ்வேளையில் பெரும்பான்மை சிங்கள இனம் இருக்கவில்லை. இன்று எமக்கு நாளை உங்களை நோக்கித் திரும்பும் என்றும் தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

ஆனால் பெரும்பான்மை இனத்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழர்களுக்கு எதிரானது என்பதால் கண்ணை மூடிக்கொண்டு தொடர்ந்தும் ஆதரித்தனர்.

கடந்த 44 வருடங்களாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்மூலம் இலங்கை அரசு தமிழ் மக்களை மிகக் கொடூரமாக அடக்கி பந்தாடியது.

- "அரகலயா"க்களை நோக்கி திரும்பியது.

நான்கு தசாப்தங்களுக்கு மேல் தமிழ் மக்கள் மீது பாய்ந்த பயங்கரவாதத் தடைச் சட்டம் கடந்த ஆண்டில்தான் "அரகலயா"க்களை நசுக்க ஆளும் தரப்பினர் பயன்படுத்தினர். அவ்வேளையில்தான் பெரும்பாலான தென்னிலங்கை மக்கள் தங்கள் ஆட்சியாளர்களுக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் வழங்கிய கொடூர முகத்தைக் கண்டனர்.

- PTA க்கு எதிராக தென்னிலங்கை.

"அரகலயா" மீதான ஒடுக்குமுறைக்குப் பின்னர், தென்னிலங்கை மக்கள், அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகள் விரைவில் பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிக்க வேண்டுமென குரல் எழுப்பத் தொடங்கினர்.

2023 இல் நடந்த சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சகம் PTA இல் குறைபாடுகள் இருப்பதை ஒப்புக்கொண்டது; இது அரசியலமைப்பு ரீதியாக அளிக்கப்பட்ட உரிமைகளை மீறியது மற்றும் சட்டம் மறுபரிசீலனை செய்ய வேண்டிய பாரபட்சமான விதிகளைக் கொண்டுள்ளது என்றும் பரிந்துரைத்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கொடூரத்தை 44 வருடங்களாக தமிழ் மக்கள் அனுபவித்தபோது கண்டு கொள்ளாத தென்னிலங்கையின் பெரும்பாலான மக்களும் பாதுகாப்பு அமைச்சும் தென்னிலங்கை சிங்கள மக்கள் மீது பாய்ந்தபோது விழித்தெழுகின்றனர்.

ஆனால் "தாச்சியில் இருந்து அடுப்பில் விழுந்த" கதையாக தென்னிலங்கை மக்களை மாத்திரமல்ல ஒட்டு மொத்த இலங்கை மக்களையும் "திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள்" தள்ளும் பயங்கரவாதத் தடுப்புச் சட்ட முன்மொழிவை ரணில் - ராஜபக்ஷ அரசாங்கம் முன்வைத்துள்ளது என்று முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்ட முன்மொழிவுக்கமைய

- ஒரு நபர் அல்லது குழு, உண்மையான பயங்கரவாதச் செயல்களைத் தவிர, "அத்தியாவசிய சேவைகள் அல்லது பொருட்கள் அல்லது ஏதேனும் அத்தியாவசியமான உள்கட்டமைப்பு அல்லது தளவாட வசதிகளுக்கு கடுமையான இடையூறு அல்லது சேதத்தை ஏற்படுத்தினால்.
- சேவை அல்லது வழங்கல்", "தவறாக அல்லது சட்டவிரோதமாக, இலங்கை அரசாங்கத்தையோ அல்லது வேறு எந்த அரசாங்கத்தையோ அல்லது ஒரு சர்வதேச நிறுவனத்தையோ. எந்த ஒரு செயலையும் செய்யவோ அல்லது செய்வதிலிருந்து விலகியிருக்கவோ" கட்டாயப்படுத்துவது பயங்கரவாத குற்றமாகும்.
- அதாவது, ஒரு தொழிற்சங்கம் வேலைநிறுத்தம் செய்தாலும் அல்லது தெருவில் போராட்டம் நடத்தினாலும், "அத்தியாவசிய சேவைகள் அல்லது பொருட்களுக்கு கடுமையான இடையூறு விளைவித்தாலும்",
- "அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் நோக்கத்துடன்" அதன் உறுப்பினர்களுக்கு வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை வழங்க வேண்டும். மசோதாவின்படி அது பயங்கரவாதச் செயலாக இருக்கலாம்.

எனவே, உண்மையான பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்குப் பதிலாக,


- கடுமையான பொருளாதார நெருக்கடியில் இன்னும் தத்தளிக்கும் சாதாரண மக்களின் கிளர்ச்சிகளை எதிர்கொள்வதே இந்த மசோதாவின் நோக்கம் என்று ஒருவர் யூகிப்பது நியாயமானது.
- கருத்து வேறுபாடு பயங்கரவாதம் அல்ல என்பதில் அதிகாரிகள் தெளிவாக இருக்க வேண்டும்.

கடந்த ஆண்டு மே மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோதும், ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் உள்ள போராட்ட களமான "கோட்டகோகம" விற்கு ஆதரவு தெரிவித்ததையும், போராட்ட இடத்திற்கு உதவிகளை வழங்குவதற்காக குழுவொன்றை அவர் நியமித்ததாக ஊடக அறிக்கைகள் தெரிவித்ததையும் நினைவுகூர வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு தென்னிலங்கை நினைவறுத்துகின்றது.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)



# செவ்வாய்க்கிழமை நடந்த கடையடைப்பு



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ்ப் பகுதிகளில் நடந்த கடையடைப்பு வெற்றி பெற்றிருக்கிறது. கிழக்கில் அம்பாறையில் அது ஒப்பீட்டளவில் வெற்றி பெறவில்லை என்ற போதிலும், வடக்கில் பெருமளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது. முக்கியமாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும் அண்மைக் காலங்களில் தீவிரப்படுத்தப்பட்டிருக்கும் மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் மேற்படி கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர ஏனைய பெரும்பாலான தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து அந்த அழைப்பை விடுத்திருந்தன. தமிழ்ப் பகுதிகளில் உள்ள பெரும்பாலான மதத் தலைவர்கள் அதற்கு ஆதரவு தெரிவித்திருந்தார்கள். அது ஒரு குறியீட்டு எதிர்ப்புத்தான். தொடர்ச்சியான எதிர்ப்பு அல்ல. எனினும் அரசாங்கத்துக்கு எதிராக ஏதோ ஒரு அளவுக்கு தமிழ் மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டியிருக்கிறார்கள்.

அந்த கடையடைப்பை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடக்கத்தில் இருந்தே எதிர்த்தது. அதை விமர்சித்தது. அதை ஒழுங்குபடுத்தும் கட்சிகளையும் விமர்சித்தது. அதன் வளமையான வாய்ப்பாட்டுக் காரணங்களைச் சொல்லி ஏனைய கட்சிகளோடு இணைந்து கடையடைப்புக்கு அழைப்புவிட மறுத்துவிட்டது.

போராடத் தயாரற்ற தமிழ்த் தலைமைகள் கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கின்றார்கள் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் சமூக வலைத்தளங்களில் எழுதினார்கள். அதில் உண்மை உண்டு. ஆனால் அக் குற்றச்சாட்டு அக்கட்சிக்கும் பொருந்தும். போராட்டம் என்றால் என்ன? ஒரு நாள் எதிர்ப்பை காட்டுவது மட்டுமல்ல. நாடாளுமன்றத்தில் முழங்குவது மட்டுமல்ல. போராட்டம் எதிர்த் தரப்புக்கு வலியை உண்டாக்க வேண்டும். அனைத்துலக சமூகத்தை தமிழ் மக்களை நோக்கி ஈர்க்க வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட போராட்டத்தை தமிழ் அரங்கில் எந்த ஒரு கட்சியும் முன்னெடுப்பதாகத் தெரியவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தன்னை ஏனைய கட்சிகளை விடத் தீவிரமானதாகக் காட்டிக் கொள்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மெய்யான வாரிசாகவும் காட்டிக் கொள்கின்றது. விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்தவர்களின் நினைவு நாட்களை அனுஷ்டிப்பதற்கு தன்னைவிட வேறு யாருக்கும் தகுதி இல்லை என்று அக்கட்சி நம்புகின்றது. எனவே அந்த நினைவு நாட்களை எப்படி எனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம் என்றும் அக்கட்சி சிந்திக்கின்றது.

கடந்த வாரம் கூட அன்னை பூபதியின் நினைவிடத்தில் அக்கட்சிக்கும் கிழக்கில் உள்ள சிவில் அமைப்புகளுக்கும் இடையே அருவருப்பான ஒரு மோதல் நிகழ்ந்தது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அன்னை பூபதியை நினைவு கூர்ந்து ஒரு வாகன ஊர்தியை வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி கொண்டு போனது. அதே சமயம் கிழக்கில் உள்ள செயற்பாட்டாளர்களும் குடிமக்கள் சமூகங்களும் அன்னை பூபதியின் குடும்பத்தவர்களும் இணைந்து அன்னையை நினைவு கூர்வதற்கு ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருந்தார்கள். ஏறக்குறைய திலீபனை நினைவு கூர்வதற்கு உருவாக்கப்பட்ட ஒரு கட்டமைப்பைப் போல. ஆனால் திலீபனை நினைவு கூர்வதற்கான கட்டமைப்பை மணிவண்ணன்தான் உருவாக்கியதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றம் சாட்டியது. அதே குற்றச்சாட்டை கிழக்கில் அவர்களால் வைக்க முடியவில்லை. ஏனென்றால் அங்கு குடிமக்கள் சமூகங்களும் அன்னை பூபதியின் உறவினர்களும் இணைந்து ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருந்தார்கள்.

குடிமக்கள் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் ஏனைய கட்சிகளுக்கு ஆதரவாளர்களாக இருக்க முடியும். ஆனால் அங்கு ஏதோ ஒரு பொதுக்கூட்டமைப்பு இயங்கத் தொடங்கிவிட்டது. அதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால்தான் அந்த முரண்பாடு.

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நினைவு நாட்களை தத்தெடுக்க முற்படுவதன்மூலம் அக்கட்சியானது தன்னை விடுதலைப் புலிகளின் மெய்யான, தொடர்ச்சியாக வாரிசாக நிலைநிறுத்த முயற்சிக்கின்றது. அதன் மூலம் ஏனைய கட்சிகளிடமிருந்தும்செயற்பாட்டு அமைப்புகளிடமிருந்தும் தன்னை வேறுபடுத்திக் காட்டவும் முயற்சிக்கின்றது. ஆனால் இங்குள்ள பிரச்சினை என்னவென்றால், அன்னை பூபதியை அல்லது திலீபனை நினைவு கூர்வது என்பது வெறுமனே அவர்களுடைய ஒளிப்படங்களை வாகனங்களில் வைத்து வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி அல்லது கிழக்கில் இருந்து வடக்கு நோக்கி ஓர் ஊர்தியை நகர்த்துவது மட்டும் அல்ல.

ஊர்தியை நகர்த்துவது நல்லது. அது மக்கள் மத்தியில் விழிப்பை ஏற்படுத்தும். அது மக்களைத் திரட்டும். ஆனால் நினைவுகூர்தல் என்பது அதைவிட ஆழமானது. படம் தாங்கிய ஊர்தியை நகர்த்துவதன்மூலம் மக்களை ஓரளவுக்குத்தான் திரட்டலாம். அதைவிட ஆழமான விதங்களில் நினைவு கூர்தலை ஒழுங்குபடுத்தலாம். குறிப்பாக தன்னை விடுதலைப் புலிகளின் மெய்யான வாரிசாகக் காட்டிக்கொள்ளும் ஒரு கட்சிக்கு அதில் பொறுப்பு அதிகம்.

அன்னை பூபதி இயக்க உறுப்பினர் அல்ல. எனினும் அவர் இந்திய அமைதிகாக்கும் படைக்கு எதிராக தனி ஒரு பெண்ணாக 30 நாட்கள் உண்ணாமல் இருந்தார். ஒரு குடும்பத் தலைவி அவ்வாறு 30 நாட்கள் உண்ணாவிரதம் இருக்கலாம் என்றால், தமிழ் அரசியல்வாதிகளால் ஏன் அது முடியாமல் இருக்கிறது? நாடாளுமன்ற சுகபோகங்களையும் சலுகைகளையும் அனுபவித்துக் கொண்டு, புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து வரும் உதவிகளை செமித்துக் கொண்டு, நினைவு நாட்களை அனுஷ்டிப்பதை விடவும் அதிகம் பொருத்தமானது அந்த தியாகிகளைப்போல தங்களை ஒறுத்துப் போராடத் தயாராக இருப்பதுதான்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்கள் தாங்கள் தியாகம் செய்யத் தயார் என்பதனை நிரூபிக்க வேண்டும். அதிரடிப் படையோடும் ராணுவத்தோடும் போலீசோடும் நெத்திக்கு நேரே எதிர்ப்பை காட்டுவதில் ஒருவித சாகசம் உண்டு. ஆனால் அது மட்டும் வீரம் அல்ல, தியாகம் அல்ல. அவ்வாறு மோதி ஒரு நாள் சிறையில் இருப்பது மட்டும் தியாகம் அல்ல. அதைவிட அற்புதமான, நிகரற்ற தியாகங்களை தமிழ் மக்கள் கண்டிருக்கிறார்கள்.

எனவே விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மெய்யான வாரிசாகத் தன்னைக் காட்ட முற்படும் ஒரு கட்சியானது அந்த இயக்கத்தைப் போல தியாகம் செய்யவும் தயாராக இருக்கவேண்டும். ஆனால் அதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் உட்பட ஏனைய கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் யாருமே தயாரில்லை. இந்த வெற்றிடத்தில்தான் நினைவு நாட்களை உரிமை கோரியும் நினைவுத் தூபிகளை உரிமை கோரியும் அருவருப்பான மோதல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஏனைய கட்சிகள் அழைப்பு விடுத்த கடையடைப்பு போலியானது பொருத்தமற்றது அல்லது பெரிய விளைவுகளை ஏற்படுத்தாது என்று கருதும் தமிழ் அரசியல்வாதிகள் அதைவிட ஆழமான விசுவாசமான தொடர்ச்சியான போராட்டங்களை நடத்திக் காட்டவேண்டும். கடந்த 13 ஆண்டுகளாக அவ்வாறான போராட்டங்களை எந்த ஒரு கட்சியும் ஒழுங்குபடுத்தவில்லை.

கட்சிகளுக்கு வெளியே குடிமக்கள் சமூகங்களை சேர்ந்தவர்களும் புலம்பெயர்ந்த தமிழ் தரப்பைச் சேர்ந்தவர்களும் இணைந்து முன்னெடுத்த போராட்டங்கள்தான் ஒப்பீட்டளவில் பிரமாண்டமானவை, தொடர்ச்சியானவை என்பதை இங்கே தொகுத்துக் கூற வேண்டும். அதாவது கட்சி சாராத மக்கள் அமைப்புகள்தான் கடந்த 13 ஆண்டுகளாக மக்கள் போராட்டங்களை பெருமெடுப்பில் முன்னெடுத்திருக்கின்றன. எனவே கட்சி சாராத குடிமக்கள் அமைப்புகளாலும் மக்கள் இயக்கங்களாலும் ஒழுங்குபடுத்தப்படும் போராட்டங்கள்தான் பிரம்மாண்டமானவைகளாக இருக்கும். அவற்றுக்குத்தான் உலகம் செவி சாய்க்கும். அரசாங்கமும் செவி சாய்க்கும்.

இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால், கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த பணி முடக்கம் குறிப்பிடத்தக்க அளவுக்கு வெற்றி பெற்றுள்ளது. அது அரசாங்கத்துக்கும் உலக சமூகத்துக்கும் ஏதோ ஒரு செய்தியை கூறும். ஆனால் அது போதாது. தென்னிலங்கையில் தன்னெழுச்சியாக ஏற்பட்ட போராட்டங்களோடு ஒப்பிடுகையில் இது மகத்தானது அல்ல. தமிழ் மக்கள் தென்னிலங்கையில் ஏற்பட்ட தன்னெழுச்சிப் போராட்டங்களில் இருந்து எதையுமே கற்றுக் கொள்ளவில்லை என்பதை அது நமக்கு உணர்த்துகின்றது.

அது மட்டுமல்ல புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக தமிழ்த் தரப்பு ஒன்று திரள முடியவில்லை என்பதையும் அது காட்டியது. மேலும், மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் தமிழ்த் தரப்பு ஒன்று திரளாது என்பதையும் அது நிரூபித்தது. எனவே செவ்வாய்க்கிழமை நடந்த கடையடைப்பு ஒரு விதத்தில் வெற்றி. இன்னொரு விதத்தில் தோல்வி.

கடையடைப்புகளின் மூலம் அன்றாடங் காய்ச்சிகளின் ஒரு நாள் உழைப்பு பாதிக்கப்படும் என்ற ஒரு விளக்கம் கடையடைப்புகளை விமர்சிப்பவர்களால் சுட்டிக்காட்டப்படுவது உண்டு. ஆனால் ஒரு போராடும் மக்களைப் பொறுத்தவரை ஒரு பொது இலக்குக்காக அவர்கள் செய்யும் தியாகங்களில் அந்த ஒரு நாள் உழைப்பும் அடங்கும். தமிழ் மக்கள் அதைவிட உன்னதமான தியாகங்களை செய்தவர்கள். எனவே ஒரு நாள் உழைப்பைச் சுட்டிக்காட்டி கடையடைப்புக்களை, பணிமுடக்கங்களை கொச்சைப்படுத்த முடியாது. ஆனால் எங்கே அதை விமர்சிக்கலாம் என்றால், தொடர்ச்சியாகப் போராட முடியாத அல்லது குறைந்தபட்சம் தென்னிலங்கையில் ஏற்பட்ட தன்னெழுச்சிப் போராட்டங்களைப் போலாவது போராட முடியாத தமிழ்க் கட்சிகள் ஒருநாள் கடையடைப்புக்கு அல்லது பணி முடக்கத்துக்கு அழைப்பு விடுக்கின்றன என்பதுதான். அதாவது தமிழ்க் கட்சிகளால் பொருத்தமான விதங்களில், கூர்மையான விதங்களில் போராட முடியவில்லை என்றுதான் விமர்சிக்க வேண்டும். ஆனால் இந்த விமர்சனம் கடையடைப்புக்கு அழைப்பு விடுத்த கட்சிகளுக்கு மட்டுமல்ல,அதில் விலகி நின்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் பொருந்தும்.

## வீணாவின் கவிக்கணை

வயல்வெளிஎங்கே?
அதில் வாழ்ந்திடும்
மீன்கள் எங்கே?
அதைக்
கொத்தி தின்ன காத்திருக்கும்
செங்கால் நாரைகள் எங்கே?
ஓடி விளையாடும் நண்டுக்
கூட்டங்கள் எங்கே?
நம்மை பயமுறுத்தும் சாரைப்
பாம்பினங்களும் எங்கே?
விவசாயத்தை இழந்தது
நாம் மட்டுமல்ல
அவைகளும் தான்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ். நெடுந்தீவில் மக்கள் போராட்டம் — பாதுகாப்பை உறுதிப்படுதவும் கோரிக்கை

(24-04-2023

யாழ். நெடுந்தீவில் பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று திங்கட்கிழமை (24) நெடுந்தீவு பிரதேச செயலகம் முன்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தின் போது நெடுந்தீவு பிரதேச செயலாளர் ஊடாக நெடுந்தீவு பொலிஸாருக்கு மனுவொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவை, நெடுந்தீவு மக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தால் ஒவ்வொரு சமூகத்திடமும் பொலிஸ் நிலைய சட்டத்தின் ஊடாக விழிப்புக் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தெரிவிக்கையில், நெடுந்தீவின் பொது இடங்கள் இறங்குதுறை மற்றும் மனித நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்கள், சுற்றுலா தளங்கள் அனைத்திற்கும் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட வேண்டும்.

நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் வரையறுக்கப்பட்ட நெடுந்தீவு இடங்களை ரோந்து பணியினூடாக கண்காணிப்பதற்கு இடைவிடாது ஒவ்வொரு நாளும் பொலிஸ் நிலையத்தால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நெடுந்தீவின் சுற்றுலா தளங்களுக்கு ஒவ்வொரு நாளும் சென்று நெடுந்தீவு பொலிஸ் நிலைய அதிகாரிகளால் கண்காணிக்கப்பட வேண்டும்.

வெளியூர்களில் இருந்து வந்து நெடுந்தீவின் விடுதிகளில் தங்குபவர்கள் விடுதி உரிமையாளர்களால் பூரண ஆள் அடையாளத்திற்கு உட்படுத்தல் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நெடுந்தீவுக்கு உள்ளே வரும் வெளியே செல்லும் மக்களின் தரவுகளை நவீன தொழில்நுட்பத்துடன் கொண்டு பயணிகளை சிரமப் படுத்தாது அதிவிரைவாக தரவுகளை இறங்கு துறையில் வைத்து சேமித்து கொள்ளும் நடைமுறையை கொண்டுவர வேண்டும் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# யாழ் பல்கலைக் கழகத்தில் சிவாஜி கணேசன் வரலாற்று நூல் வெளியீட்டு விழா மேடையில் கனடா "வீணைமைந்தன்" எழுதிய "சிவாஜி கணேசனும் சினிமாவும்" நூல் சிவாஜி கணேசனின் மூத்த மகன் ராம்குமாருக்கு வழங்கப்பெற்றது



கடந்த ஞாயிற்றுக்கிழமை 23ம் திகதி யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற சிவாஜி கணேசன் வரலாற்று நூல் வெளியீட்டு விழா மேடையில் கனடா எழுத்தாளர் வீணைமைந்தன் எழுதிய "சிவாஜி கணேசனும் சினிமாவும்" என்னும் நூல் சிவாஜி கணேசனின் மூத்த மகன் ராம்குமாருக்கு வழங்கப்பெற்றது.

மேற்படி விழாவிற்கு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் உயர்திரு ஸ்ரீசற்குணராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அதில் கலந்து கொள்வதற்காக விசேடமாக யாழ்ப்பாணத்திற்கு அழைக்கப்பெற்ற சிவாஜி கணேசனின் மூத்த மகன் ராம்குமாருக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பெற்றது.

தமிழ்நாட்டு அறிஞர் ஒருவர் எழுதிய "சிவாஜி கணேசன்" என்னும் வரலாற்று நூல் வெளியீட்டு விழாவிற்கு சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக கனடா வாழ் வீணைமைந்தன் மற்றும் "ரொறன்ரோ மனித நேயக் குரல்" அமைப்பின் பொருளாளர் மரியாம்பிள்ளை மரியராசா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அப்போது அந்த வரலாற்று நூலைப் பெற்றுக்கொள்வதற்காக மேடைக்கு அழைக்கப்பெற்ற கனடா எழுத்தாளர் வீணை மைந்தன் அவர்கள் தான் எழுதிய "சிவாஜி கணேசனும் சினிமாவும்" என்னும் நூலின் பிரதியை மிகுந்த மரியாதையுடன் அவரிடம் கையளித்தார்.

இந்த நூலானது கனடா உதயன் பத்திரிகையில் வாரா வாரம் ஒரு வருடத்திற்கு மேலாக பிரசுரமாகிய கட்டுரைகளின் தொகுப்பு என்பதும் விரைவில் இந்த நூல் கனடாவில் வெளியிடப்படும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.










Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900



# கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் இவ்வருடத்திற்கான வெற்றியாளர் விருதுகள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது

கனடிய செய்திகள் Canadian News












கனடாவில் மிக நீண்டகாலமாக இயங்கிவரும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் இவ்வருடத்திற்கான வெற்றியாளர் விருதுகள் வழங்கும் விழா கடந்த சனிக்கிழமையன்று மாலை மார்க்கம் நகரில் உள்ள ஹில்ரன் ஐந்து நட்சத்திர ஹோட்டல் மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

வழமை போல கனடாவின் மத்திய மாகாண மற்றும் உள்ளாட்சி அமைப்புக்களில் அரசியல் பதவிகளை வகிக்கும் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மண்டபம் நிறைந்த விழாவாக அமைந்த இந்த விருது வழங்கும் விழாவிற்கு கனடிய தமிழர் சமூகத்தில் பல்வேறு துறைகளில் பிரகாசிக்கும முக்கியமான பிரமுகர்கள் அழைக்கப்பெற்றவர்களாக அந்த பிரமாண்டமான மண்டபத்தை அலங்கரித்து அழகு செய்தார்கள்.

கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தற்போதைய தலைவர் திரு. தேவதாஸ் தலைமையுரையாற்றினார்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் அரசியல் தலைவர்களின் உரைகளும் இடம்பெற்றன.

இவ்வருடத்திற்குரிய விருதுகளைப் பெற்றவர்கள் மேடைக்கு அழைக்கப்பெற்று கௌரவிக்கப்பட்டார்கள். அவர்களை கௌரவம் செய்தவர்கள் கூடு எமது தமிழர் சமூகத்தின் முக்கிய "தூண்களாக" கருதப்படுகின்றவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அன்றைய விழாவில் முக்கிய நிகழ்வாக உரைகள் இடம்பபெற்றன. அத்துடன் சம்மேளனத்தின் முன்னாள் தலைவர்கள் அங்கு மேடைக்கு அழைக்கப்பெற்று சபையோருக்கு அறிமுகம் செய்து வைக்கப்பெற்றனர்.

விருது பெற்றவர்கள் விபரம் பின்வருமாறு;

1. Best Entrepreneur Award
   Puvirajah Rajaradnam and Thavaraja Rajarathnam of Eraa Super Market
2. Best Women Entrepreneur Award
   Dr. Subashini Sivakumar of Van Luyk Greenhouses and Garden Centre
3. Best Young Entrepreneur Award
   Ajay Thavam of Pro-Life Wellness Centre
4. Best Marketing Award
   Vithu Ramachandran of Ramachandran Law PC
5. Community Services Award
   Navajeevan Anantharaj of Puthiya Velichcham and eKuruvi

# "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன் அவர்களின் அகவை எழுபது பெருவிழாவில் மண்டபத்தை நிறைந்து மகிழ்வித்தபல்துறை சார்ந்த தமிழன்பர்கள்











தாயகத்தில் எழுத்தாளனாகவும் ஊடகவியலாளராகவும் பணியாற்ற ஆரம்பித்து கனடாவிலும் பத்திரிகை. வானொலி. தொலைக் காட்சி மற்றும் நாடகம் எழுத்து கவிதை என பல துறைகளில் கால்பதித்து தன் கலைப் பணியைத் தொடர்பவர் "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன் ஆவார். அன்னாரின் அகவை எழுபது பெருவிழா கடந்த சனிக்கிழமையன்று ஸ்காபுறோ ஜேசி விழா மண்பத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மொன்றியால் வாழ் கலைஞரும் அறிவிப்பாளருமான அர்யுன் அவர்கள் நிகழ்ச்சிகள் அனைத்தையும் அழகாகத் தொகுத்து வழங்கினார். அன்றைய தினம் மண்டபத்தை நிறைந்து விழாவை அழகுறச் செய்த பல்துறை சார்ந்த தமிழன்பர்கள் நண்பர்கள் மற்றும் யுகம் வானொலி நிலையத்தின் அறிவிப்பாளர்கள் மற்றும் கலைஞர்கள் மிகுந்த உற்சாகத்தோடு விழா நாயகனான கணபதி ரவீந்திரன் அவர்களை வாழ்த்தியும் போற்றியும் சென்றார்கள்.

ஆரம்பத்தில் மலர் மாலை அணிவிக்கப்பெற்ற "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன் அவர்களின் நண்பர்கள் புடைசூழ மேடைக்கு அழைத்து வரப்பெற்றார். தொடர்ந்து மேடைக்கு அழைக்கப்பெற்ற திருவாளர்கள் சாமி அப்பாத்துரை. "உதயன்" லோகேந்திரலிங்கம். வானொலி நிலையங்களின் அதிபர்கள் இளையபாரதி. நடா ராஜ்குமார். வர்த்தகப் பிரமுகர் கிருஸ்ணகோபால். கலாநிதி பார்வதி கந்தசாமி உட்பட சில பிரமுகர்களின் உரை இடம்பெற்றது. "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன் அவர்களின் பல்வேறு துறைகள் சார்ந்த ஆற்றலையும் சாதனைகளையும் எடுத்துரைத்து புகழாரம் சூட்டினர்.

தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் மற்றும் வாழ்த்துக்கள் ஆகியனவும் இடம்பெற்றன.

யுகம் வானொலிக் கலைஞர்கள் மற்றும் அறிவிப்பாளர்கள் ஊடகவியலாளர்கள் ஆகியோர் "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன் அவர்களை கௌரவித்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

கனடா உதயன் சார்பிலும் "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன் அவர்களின் சேவைகள் தொடர்பாக பிரதம ஆசிரியர் உரையாற்றி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

# ரணில் – ராஜபக்ஷ அரசியல் இருப்புக்காக தனி மனித சுதந்திரம் பலியாவதா?

(9ம் பக்கத் தொடர்ச்சி)

- எதிரியை குறிவைக்கும் "பயங்கரவாதம்"

"பயங்கரவாதம்" என்ற சொல்லுக்கு எப்போதும் அரசியல் அர்த்தம் உண்டு. அது எப்போதுமே அதைப் பயன்படுத்தும் நபரின் எதிரியை குறிவைக்கிறது. எனவே, "ஒரு மனிதனின் பயங்கரவாதி மற்றொரு மனிதனின்
சுதந்திரப் போராளி" என்ற பழமொழி அர்த்தமுள்ளதாக இருக்கிறது.

அரசுக்கும் அரச எதிர்ப்புக் குழுவுக்கும் இடையிலான மோதலில், அரசாங்கம் சில சமயங்களில் அந்தக் குழு பயங்கரவாதத்தைச் செய்வதாகக் குற்றம் சாட்டுகிறது.

அதே நேரத்தில் அந்தக் குழு அரசாங்கத்தை அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்டதாக குற்றம் சாட்டும்.

- பயங்கரவாதத்திற்குவரையறை இல்லை.

பயங்கரவாதத்திற்கு சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறை இல்லை.

ஆயினும்கூட, நீங்கள் விரும்பாத அல்லது உங்கள் நலன்களுக்கு எதிராக சட்டப்பூர்வமாக செயல்படும் ஒவ்வொரு மனிதனையும் நீங்கள் பயங்கரவாதி என்று அழைக்கலாம் என்று அர்த்தமல்ல.

ஆனால் மார்ச் 22 அன்று அரசாங்கம் முன்வைத்த புதிய பயங்கரவாத எதிர்ப்பு மசோதாவில் அப்படித்தான் தெரிகிறது என்றும் தென்னிலங்கை ரணில் - ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு சுட்டிக் காட்டுகின்றது.

"சண்டே டைம்ஸ்" கட்டுரையாளர் கிஷாலி பின்டோ-ஜெயவர்தன, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் {ATA} அதன் முன்னோடியான PTA ஐ விட மோசமான அம்சங்களைக் கொண்டுள்ளது. மேலும் ஜனாதிபதியின் கரங்களில் மேலும் அதிக அதிகாரங்களைக் குவிக்கின்றது என்று குறிப்பிடுகின்றார்.

- உரிமைகள் பறிபோவதை அனுமதிக்கக் கூடாது

இலங்கை மக்கள் தம்மால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளினாலோ அல்லது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளினாலோ தமது உரிமைகள் பறிபோவதை அனுமதிக்கக் கூடாது. அதேவேளையில் மக்கள் தமது உரிமைகள் பறிக்கப்படுவதை தடுத்து நிறுத்துவதில் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று தென்னிலங்கை தற்போது குரல் எழுப்பத் தொடங்கியுள்ளது. தென்னிலங்கையிலும் தென்னிலங்கை ஊடகங்களிலும் இதுவே பேசுபொருளாக உள்ளது. தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் இந்த விவகாரம் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது.

We, the citizens, need be alert to prevent an erosion of our rights
whether by our elected representatives or
those elected by our elected representatives.

தென்னிலங்கையின் இந்த சுலோகத்துடன் இலங்கை மக்கள் அனைத்து இன மக்களின் உரிமைகளையும் அரசியல் அபிலாஷைகளையும் அங்கீகரித்து பயணிக்க முன்வரவேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்வதன்மூலமே நாடும் மக்களும் மீட்சிபெற முடியும்.

மொத்தத்தில் தென்னிலங்கை மக்கள் சுதந்திர இலங்கையில் தாம் சுதந்திரம் இல்லாத "மாய சுதந்திர"த்திற்குள் வாழ்ந்தோம். அதற்காகவே "சிஸ்டம் சேன்ஜ்" கோரினோம். இன்று "சிஸ்டம் சேன்ஜ்" இல்லை.

ஆனால் இன்று இலங்கையில் நாம் ஜனநாயகத்தின் முடிவை காண்கிறோமா? என்று தென்னிலங்கை மக்கள் குரல் எழுப்பி நிற்பதை காணக் கூடியதாக இருக்கின்றது.

தமிழர் விவகாரத்தைக் காட்டி 75 வருடங்கள் தென்னிலங்கை மக்களை இருட்டுக்குள் தள்ளிய சிங்கள ஆளும் வர்க்கம் இன்று இணைந்து கைகோர்த்து நின்று தமிழ் மக்களைப் போன்று சிங்கள மக்களையும் நாதியற்ற மக்களாக ஆக்கியுள்ளது என்பதை உணர்ந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அங்கீகரித்து கைகோர்த்துப் பயணிக்க தென்னிலங்கை முன்வரவேண்டும்.

ஒட்டு மொத்த இலங்கையும் மீட்சிபெற இந்தப் பயணமே வழிவகுக்கும்.

Email : vathevaraj@gmail.com
25 April 2023

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

கனடிய செய்திகள்
Canadian News

# மொன்றியால் மாநகரிலும் சிறப்பாக நடைபெற்ற எழுத்தாளர் சபிதா செல்வராஜா கோகுலன் அவர்களின் "ஒருத்தி" ஆங்கில நூல் வெளியீட்டு விழா

## கனடா வாழ் எழுத்தாளர் சபிதா செல்வராஜா கோகுலன் அவர்களின் "ஒருத்தி" ஆங்கில நூல் வெளியீட்டு விழா மொன்றியால் மாநகரிலும் கடந்த வாரம் சிறப்பாக நடைபெற்றது






கனடா வாழ் எழுத்தாளர் சபிதா செல்வராஜா கோகுலன் அவர்களின் "ஒருத்தி" ஆங்கில நூல் வெளியீட்டு விழா மொன்றியால் மாநகரிலும் கடந்த வாரம் சிறப்பாக நடைபெற்றது அண்மையில் கனடாவிலும் எமது தாயகத்திலும் படமாக்கப்பெற்ற "ஒருத்தி" தமிழ்த் திரைப்படத்தை தயாரித்த பி.எஸ். சுதாகரன் அவர்களின் கதையைத் தழுவி ஆங்கிலத்தில் திரைப்படத்தின் கதை ஆக்கித் தந்த எழுத்தாளர் திருமதி. சபிதா செல்வராஜா கோகுலன் இந்த நூலைப் படைத்திருந்தார்.

மொன்றியால் மாநகரில் அழைக்கப்பெற்ற எழுத்தாளர்கள் கலைஞர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்ட இந்த விழாவில் கலை இலக்கியம் சார்ந்த துறைகளில் நன்கு அறியப்பெற்றவர்கள் உட்பட பலர் உரையாற்றினார்கள். இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக "ஒருத்தி" திரைப்படத்தின் தயாரிப்பாளரும் இயக்குனருமான கலைஞர் பி.எஸ். சுதாகரன் தனது குழுவினருடன் மொன்றியால் சென்றிருந்தார். தற்போது ரொறன்ரோ மாநகரில் வசிக்கும் ஒலிபரப்பாளர் கோகுலன் அவர்களும் தனது துணைவியார் சபிதாவுடன் அங்கு சென்றிருந்தார்.

விழாவில் கலந்து கொண்டகலை இலக்கிய மற்றும் ஊடக நண்பர்களுக்கு பிரதிகள் வழங்கப்பெற்றன. அங்கு எழுத்தாளர் சபிதா கோகுலன் அவர்களின் தந்தையார் செல்வராஜா தம்பதியினர் நூல் பிரதிகளை வழங்க அவற்றை பலர் பெற்றுக்கொண்டனர். இங்கு காணப்படும் படங்களில் எழுத்தாளர் சபிதா கோகுலன் அவர்களை கௌரவித்தவர்களில் கனடா உதயன் தொடர் எழுத்தாளர் திருமதி. உமா மோகன் தயாரிப்பாளரும் இயக்குனருமான கலைஞர் பி.எஸ். சுதாகரன் தனது குழுவினருடன் காணப்படுகின்றனர்.

இந்தியா செய்திகள்
India News

# "அனுமான் உப்புக்கொத்தி" புதிய பறவையின இனப்பெருக்க இடம் கண்டுபிடிப்பு

## தமிழக ஆய்வாளர்கள் முயற்சிக்கு பலன்

சமீபத்தில் புதிய பறவையினமாக அறிவிக்கப்பட்ட "அனுமான் உப்புக்கொத்தி", இந்தியாவின் தென்கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் இனப்பெருக்கம் செய்வதை தமிழக பறவை ஆய்வாளர்கள் தங்கள் 10 ஆண்டு தொடர் ஆய்வின் மூலம் கண்டறிந்து ஆவணப்படுத்தியுள்ளனர்.

மதுரை "இறகுகள் அம்ரிதா இயற்கை அறக்கட்டளை"யை சேர்ந்த பறவை ஆய்வாளர் என். ரவீந்திரன் நடராஜன், கோவையை சேர்ந்த பறவை ஆய்வாளர் எச். பைஜு ஆகியோர் இந்தியாவின் மன்னார் வளைகுடா பகுதியின் தென்கிழக்கு கடற்கரையில் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக கரையோரப் பறவைகள் பற்றிய ஆய்வுப் பணிகளை செய்து வருகின்றனர். தற்போது இவர்கள் இப்பகுதியில் வலசை மற்றும் வாழ்விட பறவைகள் பற்றிய ஆய்வுகளை தமிழக வனத்துறையுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஆய்வில், சமீபத்தில் உலக அளவில் புதிய பறவை இனமாக அறிவிக்கப்பட்ட அனுமான் உப்புக்கொத்தி பறவைகள், தென்னிந்திய கிழக்கு கடற்கரையில் இனப்பெருக்கம் செய்வதை கண்டறிந்துள்ளனர். இதை தகுந்த ஆதாரங்களுடன் பறவை ஆய்வாளர்கள் மதுரையைச் சேர்ந்த என். ரவீந்திரன், (இறகுகள் அம்ரிதா இயற்கை அறக்கட்டளை) மற்றும் எச். பைஜு, எஸ். ரவிச்சந்திரன் (கடல் உயிரியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம்), ஆவணப்படுத்தியுள்ளனர்.

இவர்களுடைய இந்த ஆய்வுக் கட்டுரையை சர்வதேச மதிப்பாய்வு செய்யப்பட்ட இதழான "ஜர்னல் ஆப் த்ரட்டன்ட் டாக்ஸா"வில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த புதிய பறவையின் நான்கு புதிய இனப்பெருக்கத் பகுதிகளை இவர்கள் தங்களுடைய நீண்ட தொடர் கள ஆய்வுகளின் மூலம் கண்டறிந்துள்ளனர்.





இதுகுறித்து பறவை ஆய்வாளர் ரவீந்திரன் நடராஜன் கூறியதாவது: இந்தப் பறவை முன்பு "கென்டிஷ் உப்புகொத்தி"யின் கிளையினமாகக் கருதப்பட்டது. இந்த பறவையினம் ஆங்கிலேயர்களால் கென்டிஷ் ப்ளவர் என்று முன்பு அறியப்பட்டது. இதன் உள்ளினமான பறவைகள் நமது தமிழகத்தின் கிழக்கு கடற்கரை பகுதியிலும், இலங்கையின் மேற்கு கடற்கரையோர பகுதியான மன்னார் வளைகுடா பகுதியில் காணப்பட்டது. சென்ற ஏப்ரல் 20ம் தேதி இலங்கை விஞ்சானிகள் இது கேன்டிஷ் உப்புக்கொத்தி அல்ல, இது ஒரு தனிப்பட்ட இனம் என உலக அளவில் அவற்றின் மரபணுவை வைத்து ஆய்வு செய்து இப்பறவைகளுக்கு அனுமன் உப்புக்கொத்தி என பெயர் இட்டு உள்ளார்கள்.

இந்த நேரத்தில் தமிழகத்தின் கிழக்கு கடற்கரையோரங்களில் இதன் இனப்பெருக்க தளங்கள்




# மூடப்படும் 500 அரசு மதுபான கடைகளை.. கணக்கெடுக்கும் பணி தொடக்கம்

தமிழ்நாட்டில் 500 சில்லறை மதுபான விற்பனை கடைகள் மூடப்படும் என அறிவிக்கப்பட்ட நிலையில், அதற்கான கணக்கெடுக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சட்டப்பேரவையில், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறைக்கான மானிய கோரிக்கை மீதான விவாதத்தின் போது, தமிழ்நாட்டில் 5,239 மதுபான சில்லறை விற்பனை கடைகள் செயல்பட்டு வரும் நிலையில், 500 கடைகள் மூடப்படும் என அமைச்சர் செந்தில்பாலாஜி அறிவித்திருந்தார். இந்த நிலையில், 500 கடைகளை தேர்வு செய்வதற்கான கணக்கெடுக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தொழில்முறை, 50 மீட்டருக்குள் உள்ள கடைகள், வருவாய் குறைந்த கடைகள், பள்ளி, கோயில்கள் அருகில் உள்ள கடைகள் ஆகிய காரணிகளின் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த ஆய்வின் அடிப்படையில், தேர்வு செய்யப்படும் கடைகளை மூட வாய்ப்பு உள்ளது.

# தொழிலாளர்கள் விரும்பினால் மட்டுமே 12 மணி நேர வேலை – அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்



தொழிலாளர்கள் விரும்பினால் மட்டுமே 12 மணி நேர வேலை முறை நடைமுறைப்படுத்தப்படும் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கமளித்துள்ளார். தொழிற்சாலைகள் திருத்த சட்ட மசோதாவால் தொழிலாளர்களுக்கான பணி நேரம், வார விடுமுறை உள்ளிட்டவைகளில் எந்த பாதிப்பும் இருக்காது. தொழிலாளர்களின் விருப்பத்தின் அடிப்படையிலேயே இது நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர்கள் சி.வி. கணேசன், தங்கம் தென்னரசு உள்ளிட்டோர் தெரிவித்தனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் தொழிற்சாலைகள் திருத்த சட்ட மசோதா-2023 பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவுக்கு விடுதலை சிறுத்தைகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தனர். மசோதா குறித்து தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு சி.வி. கணேசன் உள்ளிட்டோர் விளக்கம் அளித்தனர்.

அப்போது பேசிய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி. கணேசன், "தற்போது நடைமுறையில் உள்ள 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் தொடர்ந்து அமலில் இருக்கும். வாராந்திர மற்றும் தினசரி வேலை நேரம், வரம்புமுறைகள், ஓய்வு, இடைவேளை மிகை நேரம், பணிக்கான சம்பளம், வாராந்திர விடுமுறை உள்ளிட்டவைகள் எந்த மாற்றமும் இன்றி தற்போது நடைமுறையில் இருப்பது தொடர்ந்து நீடிக்கும். திருத்தி அமைக்கப்பட்டுள்ள 65 ஏ இன் கீழ் விதிவிலக்கு கோரும் நிறுவனங்கள் அல்லது கட்டுப்பாடுகளுடன் தொழிலாளர் நலன் பாதிக்காத வகையில் தொழிலாளர்களின் ஒப்புதலுடன் மட்டுமே நடைமுறைப்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த சட்டத்திருத்தம் என்னவென்றால் எந்தவித தொழிற்சாலையாக இருந்தாலும் நிறுவனமாக இருந்தாலும் அங்கு பணியாற்றக்கூடிய தொழிலாளர்களின் விருப்பத்தின் அடிப்படையிலேயே இது நடைமுறைப்படுத்தப்படும். தொழிலாளர்களுக்கு விருப்பம் இல்லை என்றால் நிச்சயமாக அரசு பரிசீலனை செய்து ஆய்வு செய்துதான் நடைமுறைப்படுத்தும். வாரத்தில் 48 மணி நேர வேலை நாட்கள் இதில் எந்த மாற்றமும் இல்லை. அது தொடர்ந்து நீடிக்கும். எல்லா நிறுவனங்களுக்கும் இந்த சட்ட திருத்தம் பொருந்தாது. எந்த நிறுவனம் எந்தத் தொழிற்சாலை விரும்புகிறதோ அந்த தொழிற்சாலையில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் விரும்பினால் மட்டுமே பொருந்தும். இது தொழிலாளர்களுக்கு விரோதமான சட்ட திருத்தம் அல்ல. எந்த ஒரு தொழிலாளர்களின் விருப்பத்திற்கு மாறாகவோ எதிர்பாவோ கொண்டுவரக்கூடிய சட்ட திருத்தம் அல்ல.


தொடர்ந்து வாரத்துக்கு 48 மணி நேரம் மட்டுமே வேலை செய்யக்கூடிய காலம் நீடிக்கும். அவர்களுக்கான பலன்களில் எந்த மாற்றமும் இல்லை. அரசாங்கம் பரிசீலனை செய்து தான் இதை நிறைவேற்றுமே தவிர எல்லா நிறுவனங்களிலும் இந்த முறை நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது. எந்த ஒரு தொழிலாளர்களின் எதிர்ப்பை மீறியும் கட்டாயப்படுத்தியோ நிச்சயமாக இது நடைமுறைப்படுத்த மாட்டோம். விரும்புகின்ற தொழிற்சாலையில் மட்டும் தொழிலாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்படும் என கூறினார்.

# New Housing Development IN Napanee Ontario

**Only 2hr Driving from Toronto !**

**Don't Miss This Opportunity**

## Town House Starting from $599,900
## Bungalow Starting from $699,900
## Semi-Detached Starting from $709,900
## Two Story Starting from $749,900







36 min to Kingston
37 min to Belleville
40 min to Prince Edward County

## An Easy Deposit Structure Is Also Available.
## Call Us For More Info



**SENTHURAN** VISUVALINGAM
Sales Representative
Cell: 416.843.2998
mithusha143@gmail.com

**KUGEENTHAN** KRISHNAMOORTHY
Real Estate Broker
Cell: 416.404-5555
RealtorKugeenthan@gmail.com



EXPERIENCE THE DIFFERENCE RE/MAX REALTY INC., BROKERAGE INDEPENDENTLY OWNED AND OPERATED

RE/MAX ACE Experts In The Local Market

3 - 1286 Kennedy Rd. Toronto M1P 2L5
416.270.1111 | 416.270.7000

# 38ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். சத்தியமூர்த்தி சத்தியசீலன்

(ஐயனார் கோவிலடி – சுருவில்)

(கொழும்பு ஸ்ரீ திருப்பதி ஏஜன்சி)



இன்றிலிருந்து முப்பத்தெட்டு வருடங்களுக்கு முன்னால் ஒரு சித்திரா பௌர்ணமி நாளில்
உன் இதயத்தை துளைத்துச் சென்ற அந்த சிங்களச் சிப்பாயின் சன்னங்கள்
இன்னும் இன்னும் எத்தனையோ ஆயிரம் உயிர்களை குடித்துக் கொண்டே இருக்கின்றன
ஆமாம் சகோதரனே, வற்றாத நிலாவரை ஊற்றைப் போல நம் அயல் நாட்டு அரசுகள்
ஆயுதங்களை அள்ளி அள்ளி இறைப்பதால் சிங்களச் சிப்பாயிகளின் துப்பாக்கிகள்
இன்னும் சீறிக்கொண்டு இருக்கின்றன
இத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் உன் சிதைத்த நெஞ்சிலிருந்து
சிந்திய குருதியின் கோரமும் முனகியபடி அடங்கிய உன் குரலும்
இன்னும் எங்களுக்கு கேட்டும் ஒலியாக சேர்ந்தே வருகின்றன...

05– 05– 2023 அன்று வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள அகிலாண்டேஸ்வரி அருளகத்தில் உள்ள சிறார்கள், பெரியவர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படும்.

என்றும் உன் நினைவுடன் வாழும் குடும்பத்தினர்.

**மலர்வு:** 25–12–1957

**உதிர்வு:** 05–05–1985

# மரண அறிவித்தல்

யாழ். சுருவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வதிவிடமாகவும், கனடா Newmarket ஐ வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி இரத்தினசபாபதி அவர்கள் 26-04-2023 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னை மடியில்: **01-05-1937**
இறைவன் அடியில்: **26-04-2023**



## திருமதி. மகேஸ்வரி இரத்தினசபாபதி

(Vahini Textiles Jaffna, Vahini Stores Colombo)
(சுருவில்)

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற இரத்தினசபாபதி அவர்களின் பாசமிகு மனைவியும்,

லீலாவதி, ஜெயநாயகி, காலஞ்சென்றவர்களான ராசநாயகம், தவபாலசிங்கம் ஆகியோரின் அருமை சகோதரியும்,

ரஜனி, விஜயசேகரன், வரதசேகரன் (United Tamil Sports Club), வாகினி, Dr. சிவசேகரன், சாயிலதா, நளாயினி (சூட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருச்செல்வநாதன், நித்தியானந்தன், செல்வமலர், விஜிதா, சிவகரன், கேதீஸ்வரன், லேகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,

காலஞ்சென்ற பூபாலசிங்கம், பத்மநாதபிள்ளை, விமலாதேவி, காலஞ்சென்ற பொன்னையா, சந்திரவதனா ஆகியோரின் மைத்துனியும்,

றஜீவன், காண்டீபன், மயூரன், ஜிந்துயா, காயத்திரி, அகல்யா, பிரித்தீப், Dr. சுவேதிகா, Dr. ஹரீஷ், அகிம்சன், அக்சயன், சகானா, ஆஹாஸ், ஆதவன், அனோஜ், ஆரணி, கிருத்திகா, ராகினி, சங்கீதா, Dr. நிரோசாந், பிரித்தீபராஜ், கௌசிகா, ஸ்ரீதாஸ் ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,

ஆதித்தியன், அஞ்சனா, அர்ஜன், அகிலன், ருத்திரதேவா, திருவ், அமாரா, அகாணா, ஆகியோரின் அருமை பூட்டியும் ஆவார்.

***அன்னாரின் பூதவுடல் 29-04-2023 சனிக்கிழமை மாலை 5:00 மணி தொடக்கம் 9:00 மணிவரை, 30-04-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணி தொடக்கம் 9:30 மணிவரையும் Chapel Ridge Funeral Home & Cremation Centre (8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1) இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னர் 30-04-2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 தொடக்கம் 11:30 வரை கிரியைகள் நடைபெற்று பி.ப. 12:00 மணிக்கு Highland Hills Crematorium (12492 Woodbine Ave., Gormley, ON L0H 1G0) இல் தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு: ரஜனி (மகள்): (416) 433-9812
விஜயன் (மகன்): (416) 984-8288 | வரதன் (மகன்): (416) 838-3999
வாகினி (மகள்): (416) 500-1157 | நளாயினி (சூட்டி, மகள்): (416) 824-5002
சிவா (மகன்): +13528958633 | சாயிலதா (மகள்): +447730344935


SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO
LET LOVE BIND US ALL TOGETHER
416-291-8500
ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
இணைந்து வழங்கும்
மேமாதம் 13 சனிக்கிழமை
17ம் ஆண்டு
சிவத்தமிழ் விழா
மாலை 3 மணிக்கு
அனுமதி இலவசம்
பாடல்
காவடி
வேதபாராயணம்
பட்டிமன்றம்
கவிதை
நாடகம்
தேவாரம்
வழக்காடுமன்றம்
வில்லுப்பாட்டு
நடனம்
கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில்
733 Birchmount Road, Scarborough
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி தமிழ், சமய, பண்ணிசை
ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும்
முத்தமிழ் விழா
அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி 416.291.7900, 647.336.3333 www.varasiththi.com


Tasty தமிழா TM
தமிழ் மண்ணிலிருந்து
நேரடியாக உலகெங்கும்...
பனை வெல்லம்
தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்
சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்
இலங்கை
மற்றும்
தென்னிந்திய
மசாலா
பொருட்கள்
பாரம்பரிய உணவு
வகைகள்..
கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..
MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.
Call:
416 293 4010
MAHAANS
PICK & PRESS OIL MILL INC


REALTOR PRABA BALSUBRAMANIAM
ஆதரவில்
கனேடிய TMS V.S.தெய்வேந்திரனின்
RAJAGEETHAMS
SPB யின் பாடல்களை அதே குரலில் பாடவருகிறார்
SURESH FROM USA
SEVENOTES
இசையில்
UNPLUGGED
647-768-4845
Shagana Rangan
Nilshika Suvaminathan
Harshitha Sivakaran
Ganisha Rasendrakumar
Rithika Jeristus
Maya Jeristus
Svaramy Thusitharan
Tuthunaya Thusitharan
Harshini Kengeswaran
Sinduja Sundararajan
Keneesha Uthayakumaran
Ashvina Aruran
Mathanki Thirugnanasampanthan
MIDDLEFIELD COLLEGIATE INSTITUTE
APRIL - 29TH SATURDAY - 6.30PM
PURCHASE TICKETS : NEW SPICY LAND VIDEO கனடா 416-520-9072
ERRA SUPER MARKET அருகில் SAI ELANTHALIR 416-471-1002 / 416-220-6966
KUMAR VIDEO MARKHAM & SHEPPARD 416-292-9043
MAIN SPONSOR
TITLE SPONSORS
TITLE SPONSORS
RE/MAX
Jayasaji JEWELLERY
JRB
R.R.Rajkumar 647-289-6164
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
Ruban Sivapathasunthara
MATT MATHISAYAN
CENTURY 21
DEVADAS LAW
TEMPLE OF SAREES
MARK FLORIST
SkyRoute
KALAVIYAM VOICE ACADEMY

# தமிழ் அறிஞர் ஜி. யு. போப்பிற்கு அவர் பிறந்த கனடிய மண்ணில் உருவச் சிலை

நாகநாதன் வீரசிங்கம் M.A (தமிழ்)
செயலாளர், கனடியத் தமிழர் பேரவை

உலகின் மூத்தமொழி என மொழியியல் ஆய்வாளரால் கொண்டாடப்படுவது தமிழ் மொழி. இது நீண்ட வரலாற்றைக் கொண்டது. இலக்கிய இலக்கணம் செறிந்தது. சங்ககாலத்தில் தோன்றிய தொல்காப்பியமும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டும் தமிழின் உன்னத நிலைக்குச் சான்றாகும். தமிழ் அரசுகள் தொய்வுற்று அந்நிய சக்திகள் தமிழ் நாட்டிற்குள் புகுந்து தமிழர் நிலைகுலைந்தபோது தோன்றிய திருக்குறள் முதலான நீதி நூல்களும் சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற இரட்டைக் காப்பியங்களும் தமிழுக்கு மேலும் மேலும் மெருகூட்டின. பல்லவர் காலத்தில் வடமொழி ஆதிக்கம் செலுத்தியது. தமிழில் வடமொழிச் சொற்கள் கலந்து மணிப்பிரவாள நடை என்ற மொழிநடை உருவாக்கம் பெற்றது. தமிழ் சிறுமைப் படுத்தப்பட்டது இக்காலத்தில் தோன்றியவையே பக்தி இலக்கியங்கள். சைவசமய நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் ஆயிரக்கணக்கான பக்திப் பாடல்களை இயற்றினார்கள். கம்ப இராமாயணம், பெரிய புராணம் என்ற காப்பியங்களும் இக்காலத்தில் உருவாகின. தமிழ் மீண்டும் சிறப்புறத் தொடங்கியது.

கிறிஸ்தவமத போதகர்களாக தமிழ் நாட்டிற்கு வந்த ஐரோப்பியர்கள் தமிழைக் கற்று தமிழின் பெருமையை உலகறியச் செய்தார்கள். ஏட்டில் இருந்த இலக்கியங்கள் அச்சுவடிவம் பெற காரணமானவர்களும், இன்றைய தமிழ் உரைநடைவழக்கைத் தொடக்கி வைத்தவர்களும் இவர்களே. இவர்களின் வரிசையில் தெ நோபிலி (De Nobili), பெஸ்கி என்னும் வீரமாமுனிவர், இரேனியஸ் (C.T.E Rhenius) கால்டுவெல் மற்றும் ஜி. யு. போப் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

**ஜி. யு. போப்**

தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களில் ஒருவரான டாக்டர் ஜி.யு. போப் கனடா நாட்டின் பிரின்ஸ் எட்வர்ட் தீவு என்ற மாநிலத்தில், பெடக்யூ என்ற நகரில் 1820-ம் ஆண்டு ஏப்ரல் 24-ந்தேதி பிறந்தார். இவர் தந்தை பெயர் ஜான் போப். தாயார் கேதரின். போப்புக்கு ஆறு வயதானபோது பெற்றோருடன் இங்கிலாந்து நாட்டுக்கு சென்றார். பத்தொன்பது வயது வரை ஹாக்ஸ்டன் கல்லூரியில் கல்வி பயின்றார்.

இவர் தனது இளம் வயதிலேயே இறை பணியில் ஆர்வம் கொண்டிருந்த காரணத்தால் கிறிஸ்தவ சமயப்பணிக்காக அவரது பத்தொன்பதாவது வயதில் இங்கிலாந்து கிறிஸ்தவ திருச்சபை அவரை தென்இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது. இவர் தனது எட்டு மாத கடல் பயணத்தின் போது தமிழ் மொழியை கற்றுக்கொண்டார். இவர் தூத்துக்குடி அருகே சிறு கிராமமாக இருந்த சாயர்புரத்தில் குடியேறினார்.

கிறிஸ்தவ சமயப் பணியாற்றியதுடன் கல்விச்சாலை அமைக்கவும் நூல் நிலையம் உருவாக்கவும் பாடுபட்டார். இவரது கல்விச்சாலையில் கல்வி கற்ற மாணவர்களுக்கு மேல் நாட்டு அறிவுத்துறைகளாகிய உளவியல், தத்துவம், கணிதம், அளவை நூல் முதலியவற்றை தமிழில் கற்பித்தார். சாயர்புரத்தில் தங்கியிருந்த காலத்தில் ஆரியைகாவுப்பிள்ளை, இராமானுசக்கவிராயர் ஆகியோரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். தமிழ் தவிர தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளையும் கற்று தேர்ந்தார்.

1849-ல் திருமணம் செய்துகொண்டபின் இங்கிலாந்துக்கு சென்று 1851ல் தன் மனைவியுடன் தமிழகத்திற்கு திரும்பி வந்து தஞ்சாவூரில் தங்கினார். அங்கு சமயப்பணியை தொடர்ந்தார். தொல்காப்பியம், நன்னூல் போன்ற நூல்களை மாணவர்கள் கற்பதற்கு கடினமாக இருந்ததால், எளிய தமிழில் இலக்கண நூல்களை எழுதி வெளியிட்டார்.

திருக்குறள் மற்றும் நாலடியார் போன்ற நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவர் திருக்குறளை "Kural of Thiruvalluvanayanar" (1889) என்ற பெயரில் மொழிபெயர்த்தர். உலகப் பொது மறையாம் திருக்குறளை மேலை நாடுகளுக்கு எடுத்துச் சென்ற பெருமை திரு போப் அவர்களையே சாரும். இன்று திருக்குறளுக்கு ஐம்பதிற்கு மேற்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்புகளும் நாற்பதுக்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும் காணப்படுகின்றது. இதனை ஆரம்பித்து வைத்தவர் திரு போப் அவர்களே.

"தமிழ் இலக்கியங்கள் மனிதனை நெறிப்படுத்தவே உருவானவை. அதற்கோர் எடுத்துக்காட்டு திருக்குறள். உயர்ந்த அறநெறியும், உயிரினும் சிறந்த ஒழுக்கத்தையும் பேணும் மக்கள் வாழும் நாட்டில் தான் திருக்குறள் போன்ற நீதிநூல் உருவாகும். உருவாக இயலும். அழுக்கு இல்லாத தூய நீரூற்றுப் போல திருக்குறள் தோற்றம் தருகிறது. ஆம், உலகின் அழுக்கினை போக்க வந்த உயர்தனித் திருநூல் திருக்குறள்" என்று போப் தனது திருக்குறள் மொழிபெயர்ப்பு நூலின் முகவுரையில் கூறியுள்ளார்.



தஞ்சையிலிருந்து ஊட்டிக்குச் சென்று வாழ்ந்த போப் இந்திய நாட்டு வரலாறு பற்றி இரண்டு நூல்களை வெளியிட்டார். 1871-ல் பெங்களூர் சென்று அங்கு கல்விப் பணியும், சமயப் பணியும் ஆற்றினார்.

42 ஆண்டுகள் இந்தியாவில் வாழ்ந்த போப் 1882-ம் ஆண்டு தனது 62-வது வயதில் இந்தியாவில் இருந்து இங்கிலாந்துக்கு புறப்பட்டு சென்றார். 1885-ல் இங்கிலாந்தில் உள்ள ஆக்ஸ்போட்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியாற்றினார். அங்கு மாணவர்களுக்குத் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளைக் கற்றுக்கொடுத்தார். போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திருவாசக நூல் அவருடைய 80-வது பிறந்தநாளில் வெளியிடப்பட்டது. புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் போன்ற நூல்களைப் பதிப்பித்தார்.

போப் அவர்கள் பிறப்பால் ஐரோப்பியராக இருந்தாலும் உள்ளத்தால் தமிழராய் வாழ்ந்து தனது வாழ் நாள் முழுவதும் தமிழுக்காக உழைதார். ஜி.யு.போப் அவர்கள் 1908-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ந்தேதி இவ்வுலகைத் துறந்தார். ஜி.யு.போப், இறப்பதற்கு முன் தன் நன்பர்களிடம் தனது கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான் என்ற வாசகம் இடம்பெற வேண்டும் என்றும், தமது கல்லறைக்குச் செலவிடும் தொகையில் ஒரு சிறுபகுதியாவது தமிழ் மக்களின் நன்கொடையால் அமைய வேண்டும் என்றும், கல்லறையில் தம்மை அடக்கம் செய்யும் போது தான் மொழிபெயர்த்து வெளியிட்ட திருக்குறள் மற்றும் திருவாசகத்தையும் உடன் வைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஆக்ஸ்போர்டில் வால்டன் தெரு என்ற வீதியில் உள்ள கல்லறைத்தோட்டத்தில் இவரது கல்லறை உள்ளது. அதில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டவாசகத்தின் தமிழ் ஆக்கம் பின்வருமாறு.

"தென்னிந்தியாவை சேர்ந்த ஜார்ஜ் உக்ளோ போப் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்கு மொழிகளை போதிக்கும் பேராசிரியராக பணியாற்றினார். மொழிக்காகவும், சமயப்பணிக்காகவும் வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட போப் மீது பற்றுதல் கொண்ட தென்னிந்தியாவை சேர்ந்த அவருடைய தமிழ் அன்பர்களும், அவருடைய குடும்பத்தினரும் சேர்ந்து அமைத்த கல்லறை இது." என்பதாம்,

இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு சென்னையிலே நடந்த போது பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ் ஆய்ந்த தமிழ் அறிஞர்களை மேம்படுத்துவதற்காக அவர்களது சிலைகளை தமிழகத்தின் சென்னையிலே நிறுவினார். ஔவைக்கும் அறம் வளர்த்த கண்ணகிக்கும் வளையா நெஞ்சப் பாரதிக்கும் வணங்காமுடி பாரதிதாசனுக்கும் கால்டுவல் மற்றும் ஜி.யு. போப்பிற்கும் வீரமாமுனிவர்க்கும் கம்பனிற்கும் கப்பலோட்டிய தமிழன் பா.ஊ. சிதம்பரனாருக்கும் திருவள்ளுவனுக்கும் என பத்து சிலைகளை நிறுவினார். கம்பன், ஔவை. பாரதி, வள்ளுவன் வரிசையிலே ஜி யு போப்பும் இடம்பெறுகின்றார் என்றால் அவர் ஆற்றலையும் தமிழுக்கு ஆற்றிய தொண்டின் பெருமையையும் நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது.

ஜி.யு, போப் அவர்களது தந்தையார் ஜோன் போப் மற்றும் அவரது சகோதரன் ஜோசெப் போப் இருவரும் பிரின்ஸ் எட்வார்ட் தீவில் பெரும் வணிகர்களாகத் திகழ்ந்தவர்கள். ஜோசெப் போப் அரசியலிலும் ஈடுபட்டு மாகாண சட்டமன்ற உறப்பினராகவும் சபாநாயகராகவும் இருந்துள்ளார். இவரது இரண்டு பிள்ளைகளில் ஒருவரான வில்லியம் ஹென்றி போப் சிறந்த அரசியல்வாதியாகவும், பிரபல்யமான வக்கீலாகவும் எழுத்தாளராகவும், நீதிபதியாகவும் கடமையாக்கியவர். மற்றய மகனான ஜேம்ஸ் கொலேட் போப் மாகாணத்தின் முதல்வர்களாக மூன்று தடவைகள் சேவையாற்றினார். இத்தகைய குடும்பப் பின்னணியைக் கொண்ட ஜி யு போப் அவர்கள் இவற்றை எல்லாம் பின்தள்ளி தமிழுக்காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துள்ளார்.

தமிழுக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்த போப் அவர்களது தமிழ்த்தொண்டை எமது வருங்காலச் சந்ததியினரும் பிற இனத்தவரும் அறியச்செய்யவும் தமிழ் வாழும் வரை இவரது புகழ் நிலைக்கவும் இவர் பிறந்த கனடிய மண்ணிலே, பிரின்ஸ் எட்வர்ட் தீவு என்ற மாநிலத்தில், பெடக்யூ என்ற நகரில், இவரதஉருவச்சிலையை 2023 யூலை மாதம் 15 திகதி நிறுவுவதற்குரிய செயற்பாட்டினை கனடியத் தமிழர் பேரவை மேற்கொண்டுள்ளது.

இந்நிகழ்விலே அனேகமான மக்கள் பங்கு கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றன. பிரன்ஸ் எட்வேட் தீவு மாநில அரசு மற்றும் கனடிய மத்திய அரசு, பெடக்யூ நகர சபை அங்கத்தவர்கள் என பல அரசியல் பிரமுகர்களுக்கும் பங்கு கொள்ளவுள்ளனர். அத்துடன் கனடாவில் பல பாகத்திலும் இருந்து ஜி. யு. போப் அவர்களது உறவினர்களும் பங்குகொள்ளவுள்ளனர். ரொரண்டோவில் இருந்து செல்வதற்கான பஸ் வண்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வில் பங்குகொண்டு சிறப்பிக்க வேண்டியது ஒவ்வொரு தமிழனதும் கடமையாகும்.

**தொடர்புகளுக்கு:** (416) 240-0078
or info@canadiantamilcongress.ca

(8 பக்கத் தொடர்ச்சி)

## பொருளாதார நெருக்கடியால் கேள்விக்குள்ளாகி உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் கல்வி நிலை

றொசாந்தனின் தாயாரும் முன்னாள் போராளியுமான வசந்தி, தனது மனதில் இருந்தவற்றை பேச ஆரம்பித்தால்,



"நான் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி. 15 வயதில் இணைந்து கொண்டேன். 1998 ஆம் ஆண்டு எனது கண், முகம், காது போன்றவை பாதிக்கப்பட்டது. தற்போது நான் குடும்பத்துடன் இணைந்து வாழ்ந்து வருகின்றேன். என்னை பார்க்க ஒருவரும் இல்லை. நான் வீடு வீடாக சென்று வீட்டு வேலை பார்ப்பது, தேங்காய் துருவி கொடுப்பது எனது வேலை.

எனக்கு 250 ரூபாய் பணம் தருவார்கள். அந்த பணம் போக்குவரத்திற்கு காணாது.எனது தாய் தந்தையர்கள் வயது போனவர்கள். தந்தைக்கு 85 வயது. அவர் படுக்கையில் உள்ளார். வீட்டு வேலை செய்து கிடைக்கின்ற பணத்தை வைத்து அவர்களையும் நான் தான் பார்க்கின்றேன். எனது உடலில் பல காயங்கள் உள்ளது. வெயிலில் சென்று வேலை செய்ய முடியாத நிலை உள்ளது. இருந்தும் எனது பிள்ளைகளையும் படிக்க வைக்கிறேன். நான் வீட்டில் இருந்தே சுயதொழில் செய்ய வேண்டும். ஆனால் அவ்வாறான சுய தொழிலை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது. எனக்கு வீட்டில் இருந்து தொழிலை மேற்கொள்ள உதவி செய்தால் எனது பிரச்சனைகள் ஓரளவுக்கு தீரும். தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக நான் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளேன். எவ்வித கொடுப்பனவுகளும் அரசாங்கத்தால் இதுவரை எனக்கு கிடைக்கவில்லை. எனவே எனக்கு சுய தொழில் மேற்கொள்ள அரசாங்கமும் சரி, அரச சார்பற்ற நிறுவனங்களாக இருந்தாலும் சரி உதவி புரிந்தால் எனது வாழ்க்கையை முன்னோக்கி கொண்டு சென்று எனது பிள்ளைகளின் கல்வியை இடை இன்றி கொண்டு செல்ல முடியும்.

எங்களுக்கு தாய் தந்தை இல்லை. எனக்கு ஐந்து சகோதரிகள் உள்ளனர். எனது கணவர் கூலி வேலை செய்து வருகிறார். எனது சகோதரிகளை நானே பார்க்கிறேன்.படிக்க வைக்கிறேன்.

அவர்கள் 5 பேரையும் படிக்க வைக்க முடியாத நிலையில் இருக்கிறேன். எனவே எங்களுக்கு வாழ்வாதாரத்திற்கான உதவிகளை மேற்கொண்டு வழங்கினால் எனது சகோதரிகளை படிக்க வைக்க முடியும்.



என மட்டக்களப்பு வந்தாறுமூலை பகுதியைச் சேர்ந்த ரஞ்சன் டிசாந்தினி கூறுகிறார்.

ரஞ்சனியின் அரவணைப்பில் உள்ள தனுஷ் கூறுகையில்,



எனது தாய் மரணித்து விட்டார். நான் மூத்த சகோதரியின் அரவணைப்பில் வாழ்ந்து வருகின்றேன். நான் தரம் 6 இல் கல்வி கற்று வருகிறேன். தற்போது பாடசாலை கற்றல் உபகரணங்களின் விலை அதிகரித்துள்ளமையினால் எங்களுக்கு போதிய அளவு பாடசாலை உபகரணங்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை என தெரிவித்தார்.

லோஜினன் என்ற மாணவன் தெரிவிக்கையில்,



"நான் சித்தாண்டி ம.வி பாடசாலையில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கிறேன். நான் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வருகின்றேன். அம்மா தோட்டம் செய்து என்னை பார்த்து வருகிறார். எனது குடும்பத்திற்கு போதிய வருமானம் இல்லை. பாடசாலைக்கு பேருந்தில் சென்று வர வேண்டியுள்ளது. நாளாந்தம் பயணச் செலவை ஈடு செய்ய முடியாத நிலை உள்ளது. வீட்டில் இருந்து படிக்க முடியாத நிலை. வீடு சேதமடைந்துள்ளது. மழைக்காலத்தில் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுக்கிறேன். என தெரிவித்தார்.

கண்டி ஹந்தானை தோட்டத்தில் லயன் குடியிருப்பு 8 ல் சுமார் 17 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

அக் குடியிருப்பாளர்களில் ஒருவரான 40 வயதுடைய ஜெயமலர் தானும் மகளும் தனது தாயாருடன் வசித்து வருவதாகவும். வாழ்வாதாரத்திற்காக கூலித் தொழில் கிடைப்பதில்லை என்றும் தேயிலை கொழுந்து பறிக்கும் வேலையும் குறை வந்தமையினால் பொருளாதார ரீதியில் கடுமையாக பாதிக்கப்பட்டோம் என கஷ்டங்களைப் பகிர்ந்தார்.



குடும்ப வாழ்வாதாரம் மகளின் படிப்பு ஆகியவற்றிற்கு ஈடு கொடுக்க முடியாத நிலையில் கொழும்பிற்கு தொழில் வாய்ப்பை தேடி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.மகளை அம்மம்மாவின் அரவணைப்பில் விட்டுச் சென்றுள்ளேன். நாளாந்தம் 1000 ரூபாய் வருமானம்.அதனை வைத்து எனது குடும்பச் செலவை கவனிக்கிறேன். மகள் உரிய கல்வியை கற்க வேண்டும் என்ற எண்ணத்தில் இரவு, பகல் பாராது கூலி வேலை செய்து வருவதாக மிகுந்த களைப்போடு பேசினார்.



இவரது மகள் அனுஷா, கண்டி மகாசிங்க ம.வி பாடசாலையில் தரம் 8 இல் கல்வி கற்று வருகின்றாள். தோட்டத்தில் இருந்து நாளாந்தம் பாடசாலைக்கு முச்சக்கர வண்டியில் செல்கின்றாள். முச்சக்கர வண்டிக்கான கட்டணமாக மாதம் 5000 ரூபா செலுத்த வேண்டிய நிலையில் தனது தாயார் காணப்படுகிறார் என்ற விடயத்தைச் சுட்டிக்காட்டியவாறு பேச ஆரம்பித்தாள்.

"அம்மா சிந்தும் ஒரு துளி வியர்வையும் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்ற வைராக்கியத்தோடு, எனது கல்வி நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றேன்.

தமிழரான நான் எனது கல்வியை சிங்கள மொழி மூலம் கற்று வருகிறேன். தற்போது தமிழை விட சிங்களத்தையோ அதிகம் கதைக்க எழுத கற்றுக் கொண்டுள்ளேன். எதிர் காலத்தில் இந்த நாட்டில் சிங்கள மொழி தெரிந்து இருந்தால் தான் "அரச வேலை வாய்ப்புக்களை" பெற்றுக்கொள்ள முடியும் என்ற எதிர்பார்ப்புடன் எனது கல்வியை முன்னெடுத்து வருகின்றேன். எனது தாயின் கூலி தொழிலிலேயே எனது கல்வி தங்கி இருக்கிறது. என தாயின் அர்ப்பணிப்பையும் கல்வி மீதான நம்பிக்கையையும் பகிர்ந்தாள்.

வடக்கில் மாகாணத்தில் உள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களில் உள்ள பெண் முயற்சியாளர்கள் குறித்து மாகாண தொழில்துறை திணைக்கள பணிப்பாளர் திருமதி. வனஜா செல்வரட்ணத்தை தொடர்பு கொண்டபோது,



"வடக்கில் தற்போது வரை 3514 பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த பெண் முயற்சியாளர்கள் பதிவு செய்துள்ளனர். பலர் பதிவுகள் இன்றி தன்னிச்சையாக இயங்கக் கூடும்.என தெரிவித்தார்.

ஏனையவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது என்றும் கூறினார்.

வடக்கு கிழக்கு பகுதிகளில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த சுயதொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடேவிடம் வினவியபோது.

"கொரோனா பரவலை தொடர்ந்து நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்த நிலையில் காணப்பட்டது. இதனால் பொருட்களின் விலையேற்றம் அதிகரித்து, பாதிக்கப்படுவது பெண் தலைமைத்துவ குடும்பங்களும் குறித்த




குடும்பத்தில் உள்ள மாணவர்களுமே.

பிள்ளைகளுக்கான உணவு மற்றும் பாடசாலை கற்றல் உபகரணங்களை கொள்வனவு செய்ய என பாரிய பொருளாதார நெருக்கடியை சந்திக்கின்றனர். பாடசாலை அதிக காலம் மூடப்பட்ட மையினால் அவற்றை மீள பெற்றுக்கொள்ள அவர்கள் தனியார் கல்வியையும் அதிக அளவில் கற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் இவற்றை ஈடு செய்ய பெண் தலைமைத்துவ குடும்ப பெண்களுக்கு நாட்டில் உரிய தொழில் வாய்ப்பு இல்லை. தமது பிள்ளைகளின் கல்வி செலவு உள்ளடங்களாக ஏனைய தேவைகளை பூர்த்தி செய்ய இவர்களிடம் நிதி வசதி இல்லை. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அடையாளம் கண்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்சார்பு பொருளாதாரத்தை மேம்படுத்த சுய தொழில் நடவடிக்கைகளுக்கு அவர்களை உள்வாங்கி வருகின்றனர்.

மெசிடோ நிறுவனம் வடக்கு கிழக்கு உள்ளடங்களாக நாட்டில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு தற்சார்பு பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில் சுய தொழில் உற்பத்தியை ஊக்கப்படுத்தி வருகிறது.

கருவாடு பதனிடுதல், சவர்க்கார உற்பத்தி, வீட்டுத்தோட்டம் சேதனைப் பசளை பயன்படுத்தி, நஞ்சற்ற நெல் உற்பத்தி, கோழி வளர்ப்பு உள்ளிட்ட சுயதொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகிறோம்.

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அடையாளப் படுத்தப்பட்டால் அவர்கள் பெண்கள் குழுக்கள் ஊடாக அவர்களுக்கு பொருளாதாரத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் தற்சார்பு பொருளாதார சுயதொழில் நடவடிக்கையை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்" என்றார்.

"பொருளாதார நெருக்கடியை முற்றிலுமாக சமாளிக்க கூடிய நிலையில் நடுத்தர குடும்பங்களோ வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களோ இல்லை" என்பதே உண்மை.அரசாங்கம் இக் குடும்பங்கள் மீள் எழுச்சி பெறுவதற்கான நடை முறையான துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இவர்களின் குடும்பங்களில் முன்னேற்றம் காணும் பட்சத்தில் குறித்த குடும்பங்களில் உள்ள பாடசாலை செல்லும் மாணவர்களின் கல்வியில் ஒளி வீசும்.

எனவே இவ்வாறான குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரச அரச சார்பற்ற அமைப்புக்களும் கைகொடுக்க வேண்டும். என்பதே பாதிக்கப்பட்ட மக்களினதும், குறிப்பாக கல்விக்காக ஏங்குகின்ற மாணவர்களின் எதிர் பார்ப்பாகவும் அமைந்துள்ளது.

## மரத்தின் கேள்வி?

நீதங்கி இளைப்பாற நல்நிழல் தருகின்றேன்
பசியாறப் பதமான பழங்கள் கொடுக்கிறேன்
சுவாசிக்கக் காற்றைச் சுத்திகரித்து வழங்குறேன்
மழையை உண்டாக்க மனமார உதவுகிறேன்
வீட்டைக் கப்பாயும் வளையாயும் தாங்குகிறேன்
நீடடுத்து உறங்கக் கட்டிலாய் இருக்கிறேன்
உனது பிள்ளைக்குத் தொட்டிலாய் ஆடுகிறேன்
இருப்பதற்கும் படிப்பதற்கும் கதிரைமேசை ஆகிறேன்
கதவாய் மாறிக் காவல் காக்கிறேன்
இறுதியில் உன்னைச் சுமப்பதற்கும் வருகிறேன்
நான் இறந்த பின்னும் உந்தன்
வீட்டுச் சமையலுக்கு விறகாய் உதவுகிறேன்
உனது இறுதிச் சடங்குக்கும் பயன்படுகிறேன்
ஆனால் நீ
என்னை வெட்டுவதைத் தவிர வேறென்ன செய்தாய்?

பூமி நாள் 23--- 04

மரங்கள் நடுவோம், மரங்களைக் காப்போம்.

ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453



# SJV Father of Tamil Nationalism

## Expansion of speech by V. Thangavelu, President Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto

**தந்தை செல்வநாயகத்தின் குடும்பத்தாருக்கும் அவையோர்க்கும் மாலை வணக்கம்!**

**த**ந்தை செல்வாவின் 125 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் முகமாக இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்த Chelvanayakam Memorial Trust (CMT) (செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை) மற்றும் Chelvanayakam Charitable Foundation (CCF) (செல்வநாயகம் அறக்கட்டளை) இரண்டுக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்குறளில் மகன் தந்தைக்கு ஆற்றும் உதவிபற்றி ஒரு குறள் இருக்கிறது.

*மகன்தந்தைக்குக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை*
*என்னோற்றான் கொல்எனும் சொல்*
*(அதிகாரம் மக்கட் பேறு, குறள் 70)*

மகன் தன் தந்தைக்குச் செய்யத் தக்க கைம்மாறு, இவன் தந்தை இவனை மகனாகப் பெற என்ன தவம் செய்தானோ என்று பிறர் புகழ்ந்து சொல்லும் சொல்லாகும்.

தந்தை செல்வநாயக்தின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் தந்தைதாயார்களது பெயரில் ஒன்றுக்கு இரண்டு அறக்கட்டளைகளை நிறுவி அறப்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த நிகழ்வில் ஒரு பேச்சாளனாக எனது பெயரை என்னைக் கேட்காமலேயே இதன் ஒழுங்கமைப்பாளர் மைதிலி வில்சன் நிகழ்ச்சி நிரலில் போட்டுவிட்டார்.

நான் தமிழில் பேசுவேன் என்று சொன்னேன். இல்லை, இல்லை சிலருக்குத் தமிழ் தெரியாது, பாதி தமிழ் மீதி ஆங்கிலத்தில் பேசுங்கள் எனக் கேட்டுக் கொண்டார். ஆங்கிலத்தில் பேசுவதில் சிக்கலில்லை. ஆனால் ஆங்கிலத்தில் பேசினால் தமிழ் படிக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு வராது. கனடாவுக்குப் புலம் பெயர்ந்த இளையோர் அல்லது இங்கேயே பிறந்த பிள்ளைகளில் 90 விழுக்காட்டினர் வீட்டில் ஆங்கிலேய மொழியிலேயே பேசுகிறார்கள். தாய் தந்தையர்களுக்கு முற்றாக ஆங்கிலம் தெரியாது போது மட்டும் அவர்கள் தமிழில் பேசுகிறார்கள். ஆனால் தமிழைப் படிக்க எழுதத் தெரியாது. விதிவிலக்கு உண்டு.

ஒன்றை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். தமிழ்மொழி வெறுமனே ஒருவரோடு ஒருவர் கருத்தைப் பரிமாறிக் கொள்வதற்கான கருவி அல்ல. அது மனித பாரம்பரியத்தின் கடத்தல் (அடையாளம், வரலாற்று, கலாச்சார மற்றும் மொழியியல் பொருள்) கருவியாகும்.

தமிழ் மூவாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த மொழி. உலகில் 2021 இல் எடுத்த கணக்கின்படி 7,139 மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றுள் 293 மொழிகளுக்கு மட்டும் வரிவடிவு (script) உண்டு. இந்த மொழிகளில் செம்மொழி எனத் தகுதி பெற்ற 7 மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. மற்றவை அரபு, இலத்தீன், கிரேக்கம், சீனம், கீப்புரு மற்றும் பாரசீகம் ஆகியவை. இந்த ஏழு செம்மொழிகளிலும் தமிழ்மொழி மட்டுமே உயிர்ப்போடு வாழும் மொழியாகும்.

தமிழ் புரியாதவர்களுக்கும், தமிழ் தெரியாதவர்களுக்கும் ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். உலகில் உயிரோடு இருக்கும் மொழிகளில் தமிழ்மொழி முதல் இடத்தில் உள்ளது. தமிழ் மொழி உலகம் முழுவதும் 9 கோடி மக்களால் பேசப்படுகிறது. இது இந்தியா, குறிப்பாக தமிழ்நாடு, இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், ரீயூனியன், கனடா, பிரிட்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் பரவலாகப் பேசப்படுகிறது. தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழியாகும்.

எனவே தமிழ்மொழியில் பயிற்சி இல்லாதவர்கள் அந்த மொழியில் உள்ள இலக்கிய வளத்தை, வாழ்வியல் நெறிகளை, அறங்களை அறிந்து கொள்ள முடியாமல் போய்விடும். மனித வாழ்க்கைக்கு இவை மிகவும் அவசியமானவை.

தந்தை செல்வநாயகம் அவர்கள் ஒரு அபூர்வபிறவி. மனிதருக்குள் ஒரு மாணிக்கம். வாய்மை, நேர்மை, பற்றுறுதி படைத்தவர். தமிழ்மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்காக விளங்கியவர். மொத்தம் ஒரு 12 ஆண்டுகள் அவரோடு நெருங்கிப் பழகியவன். அவர் தொடக்கிய இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வளர்ச்சிக்கு துணையாக இருந்தவன். அன்றைய காலகட்டத்தில் அரச ஊழியர்களுக்கு அரசியல் உரிமை இருக்கவில்லை. இருந்தும் அரசாங்க ஊழியனாக இருந்தாலும் மறைமுக அரசியலில் தீவிரமாக ஈடுபட்டவன். இந்த இடத்தில் எனது தமிழ் உரையை நிறுத்தி ஆங்கிலத்தில் உரையாற்ற விரும்புகிறேன்.

As I was saying in Tamil firstly, I would like to express my appreciation to Chelvanayakam Memorial Trust (CMT) and Chelvanayakam Charitable Foundation (CCF) Chelvanayakam Charitable Foundation (CCF) for organizing this program to celebrate Thanthai Chelvanayakam's 125th birth anniversary.

In Thirukkural there is a Kural about father-son relationship.

*To sire, what best requital can by grateful child be done?*
*To make men say, 'What merit gained the father such a son?'* (Kural 70)

The way of showing filial devotion is to make others exclaim within the hearing of the father what penance the father must have performed to beget such a son. What is said about the son applies equally to daughters as well.

Thanthai Chelvanayakam children and grandchildren have established not one but two Charities to engage in charitable activities in his name.

Maithili, the organizer of this event, put my name as a speaker on the agenda without asking me. In Tamil there is a proverb that in a village where there is no sugar mill, then the flowers of Iluppai tree (Butter tree) will be called as sugar.

I told Maithili that I will speak in Tamil, since Prof. Chandrakanthan will be speaking in English. She said some people are not proficient in Tamil, they don't know Tamil, speak half in Tamil and the rest in English. I have no problem is speaking in English, but if I speak in English, they want think of studying Tamil. A majority of young people who migrated to Canada when they were in their teens or those second generation born and bred in Canada speak English at home. They speak in Tamil only when their parents do not know English at all. Even then the children do not know how to read and write Tamil. There are exceptions. A few do speak fluent Tamil.

In this respect I just want to say one thing. Tamil is not just a tool for communicating with others and exchanging information between two or more people. Tamil is at least two thousand five-hundred-year-old language. We have a grammar book Tholkappiyam which is about 2,200 yeas old. As of 2021.

There are 7,139 languages spoken all over the world. Among them only 293 languages have script. And Tamil is one of the 6 languages that are recognized as classical languages along with Arabic, Latin, Greek, Chinese and Persian.

According to Prof. George Hart Tamil is a classical language based on 4 criteria among others.

(1) Considerable antiquity, it predates the literatures of other modern Indian languages by more than a thousand years.

(2) It has its own poetic theory, its own grammatical tradition, its own esthetics, and, above all, a large body of literature that is quite unique.

(3) The quality of classical Tamil literature is such that it is fit to stand beside the great literatures of Sanskrit, Greek, Latin, Chinese, Persian and Arabic. and

(4) Tamil is one of the primary independent sources of modern Indian culture and tradition.

Language is a carrier of human heritage (in identity, historical, cultural and linguistic material. Language is the instrument of transmission of human heritage (identity, historical, cultural and linguistic material).

For those who are not proficient in Tamil or don't know to speak Tamil, I would like to say they are losing a part of the rich Tamil heritage. Tamil Language is the oldest living language in the world. Tamil language is spoken by 9 crores of people all over the world. It is widely spoken in countries like India, especially Tamil Nadu, Ceylon, India, Singapore, Reunion, Canada, Britain, USA, Australia etc. Tamil belongs to the Dravidian language family.

My first brush with politics and political parties was during the elections for the first parliament in 1947. In the Jaffna electorate there was battle royal between the All-Ceylon Congress Party (ACTC) and the United National Party. The contestants were the charismatic and popular leader GG Ponnambalam, QC the leader of the of the ACTC and Arunachalam Mahadeva contesting on the UNP platform. A. Mahadeva, Home Minister in the DS Senanayake is the son of Ponnambalam Arunachalam, brother of Ponnambalam Ramanathan. The battle cry was "Down with Mahadeva, the traitor who killed Kandasamy!" (*"கந்தசாமியைக் கொன்ற துரோகி மகாதேவா ஒழிக"*).

On 05, June 1947 Kandasamy a young member of the GCSU, was killed while participating in a demonstration called by the left parties. The Police fired several rounds at the demonstrators injuring quite a few and killing Kandasamy. A bullet went through his left eye to shatter his brain.

ACTC leader GG Ponnambalam lost no time to exploit the brutal death of Kandasamy. He carried his body to the Fort railway station and flew to Jaffna to receive the remains of Kandasamy. Unfortunately, Mahadeva has to accept responsibility since he was the Home Minister in charge of law and order.

*(To be continued...)*


J DEVELOPMENT INC

றொறன்ரோ பெரும்பாகத்தில் அனுபவசாலிகளினால் நிர்வகிக்கப்படும் நிறுவனம்

எமது சேவைகள் பின்வருமாறு:

Residential & Commercial Renovations and Custom Build Services:
Exterior and Interior upgrades for Home & Repair services
Commercial Build - Design - Remodel
Home Renovations:
Basement, Bathroom, Kitchen,Flooring, Accent walls, Glass Doors and Windows, Electric, plumbing



சட்டரீதியான அனுமதிப் பத்திரங்களைப் பெற்று உங்களுக்கு தேவையான அனைத்து வேலைகளும் செய்து தரப்படும்



Serving area: Around GTA

Free Estimate - இலவச மதிப்பீடு
Flexible Payment Methods
உங்கள் வசதிக்கேற்ப கட்டணங்களைச் செலுத்த வசதிகள் செய்து தரப்படும்

தொடர்புகளுக்கு: (647) 568-0954
என்னும் இலக்கத்தில் JAY ஐ அழைக்கவும்
Email: jdevelopmentinc@hotmail.com



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

## (கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 12)

**- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி**



**இந்திய ரூபாயயை மட்டுமல்ல ஆபத்தில் உதவிய இந்தியாவையும் இலங்கை மதிக்க வேண்டும்.**

அதாகப்பட்டது மகாஜனங்களே இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்தியக்குடிமக்கள் யாவரும் இனிமேல் இந்திய ரூபாய்களிலேயே இலங்கையில் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யலாம் என்று இத்தால் அறிவிக்கப்படுகிறது... டும்...டும்.

இலங்கை மத்திய வங்கி ஆளுநர் இந்திய வர்த்தக கைத்தொழில் சம்மேளனம் இலங்கையில் நடத்திய கலந்துரையாடல் ஒன்றில் தலைமைக் கருத்துத் தெரிவித்தபோது இவ்வாறு கூறியதாகத் தெரிகிறது. இதே டும் டும் மை கடந்த வருடம் ஜுலை மாதம் இந்தியாவின் மத்திய வங்கியும் கொட்டியிருந்தது. அதாவது இந்திய ரூபாவை இலங்கையுடன் இடம் பெறும் வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்த அனுமதிக்கப்படுள்ளதாகவும் இலங்கைப்பிரஜைகள் பத்தாயிரம் அமெரிக்க டொலர்கள் (826823 இந்திய ரூபா) பெறுமதியான இந்திய ரூபா தாள்களை தம்வசம் வைத்திருக்கலாம் எனவும் இலங்கையர்கள் இந்தியாவுக்குப் பயணங்கள் மேற்கொள்ளும் போது ஐயாயிரம் டொலர்கள் பெறுமதியான இந்திய ரூபா நாணயத்தைக் கொண்டு செல்லலாம் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இலங்கை மத்திய வங்கியிடமிருந்து இதுபற்றிய உத்தியோக பூர்வ செய்திகள் எதனையும் வாசித்ததாக நினைவில் இல்லை. இப்போது தான் இலங்கையின் மத்தியவங்கி ஆளுநர் இலங்கைக்கு வரும் இந்தியப்பிரஜைகள் இந்திய ரூபாவிலேயே கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்திருக்கிறார். இதுவரை விசேட இடங்கள் தவிர்ந்த ஏனைய பொதுவெளியில் இலங்கை ரூபாவைத்தவிர வேறெந்த நாணயமும் சட்டரீதியிலான புழக்கப்பணமாக அனுமதிக்கப்படவில்லை. இப்போது இந்திய ரூபாவை புழக்கப்பணமாக ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டுளதாகவே கொள்ளலாம்.



இந்திய மத்திய வங்கியின் அறிக்கையில் இலங்கை கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே இந்திய ரூபாவை வர்த்தகக் கொடுக்கல்-வாங்கல்களில் பயன்படுத்த முடியும் என அறிவிப்பதாகவும் கூறப்பட்டது. அத்துடன் இலங்கை ரூபாவை இந்திய ரூபாவுக்கு மாற்றி அதைக்கொண்டு ஏனைய நாடுகளின் நாணயங்களில் வர்த்தகக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது. இது டொலர் நெருக்கடியில் பாதிக்கப்பட்டிருந்த இலங்கைக்கு சற்று ஆறுதல் தருவதாக அமையும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

2021 2022 காலப்பகுதியில் இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான வர்த்தகத்தின் பெறுமதி 6.81 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது. அது மட்டுமன்றி இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகளில் மிகக் கணிசமான எண்ணிக்கையில் இந்தியக் குடிமக்களே வந்து செல்கின்றனர். அதே போல் இலங்கையில் இருந்தும் கணிசமான எண்ணிக்கையினர் இந்தியாவுக்குச் செல்கின்றனர். ஆகவே இந்திய ரூபாவை நேரடியாகப் பயன்படுத்தலாம் என்ற ஏற்பாடு இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களையும் பயணிகள் போக்குவரத்தையும் அதிகரிக்க உதவும்.

வர்த்தக் கொடுக்கல் வாங்கல்களில் இந்திய ரூபாவைப் பயன்படுத்தலாம் என்ற ஏற்பாடு இலங்கைக்கு மாத்திரம் வழங்கப்பட்ட ஒரு ஏற்பாடோ அல்லது சலுகையோ அல்ல இலங்கை உட்பட பொத்சுவானா, பிஜி, ஜேர்மனி, கயானா, இஸ்ரேல், கென்யா, மலேஷியா, மொரிஷியஸ், மியன்மார், நியூஸிலாந்து, ஓமான், ரஷ்யா, சிஷெல்ஸ், சிங்கப்பூர், தன்சானியா, உகண்டா மற்றும் இங்கிலாந்து ஆகிய பதினெட்டு நாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. தஜிகிஸ்தான் கியூபா லக்ஸம்பேர்க் மற்றும் சூடான் ஆகிய நான்கு நாடுகள் இதில் இணைந்து கொளவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிகிறது.

ஆகவே இருபதிற்கும் மேற்பட்ட நாடுகள் இந்திய ரூபாவை தமது வெளிநாட்டு வர்த்தகத்தில் பயன்படுத்த ஆர்வம் காட்டியுள்ளன. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடிய சாத்தியங்கள் உள்ளன. உலக வர்த்தகத்திலே சுமார் 88 சதவீதம் அமெரிக்க டொலரிலேயே நடைபெறுகிறது. உலகளாவிய ரீதியில் 60 சதவீதமான வைப்புகளும் கடன்களும் அமெரிக்க டொலரிலேயே இடம் பெறுகின்றன. சர்வதேச வெளிநாட்டு நாணயச் சொத்து ஒதுக்குகளில் 59 சதவீதம் அமெரிக்க டொலரிலேயே பேணப்படுகின்றன. ஆகவே உலகின் முதன்மை நாணயமாக ஐக்கிய அமெரிக்க டொலரே உள்ளது. அதன் மூலம் அமெரிக்கா உலக நாடுகளைக் கட்டுப்படுத்துவதாக குற்றச்சாட்டுகள் எழுகின்றன. அமெரிக்கா தனது எதிராளிகளுக்கு எதிராக தனது நாணயத்தை பயன்படுத்துவது ரகசியமான ஒன்றல்ல. உதாரணமாக கடந்த ஆண்டு ரஷ்யா யுக்ரேனை ஆக்கிரமித்த போது அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும் ரஷ்யாவின் வெளிநாட்டுச் சொத்து ஒதுக்குகளில் அரைப்பங்களவிலான 640 பில்லியன் டொலர்களை ரஷ்யா பயன்படுத்த முடியாதவாறு உறைய வைத்துள்ளன.

அதேபோல SWIFT-Society for Worldwide Interbank Financial Telecommunication என அழைக்கப்படும் உலகலளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதிசார் தொலைத்தொடர்பாடலுக்கான சமூகத்தின் ஊடாக ரஷ்யா வர்த்தக செலுத்தல்கைச் செய்வதிலும் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதேபோல் ஆப்கானிஸதான், ஈரான், வெனிசுவேலா, போன்ற நாடுகளின் டொலர் வடிவிலான சொத்துகளை அமெரிக்கா இலக்கு வைத்து வருகின்றமை புதிதான விடயமல்ல. உலகின் முதன்மை நாணயமாக டொலர் இருப்பதனாலேயே அது சாத்தியமாகிறது. இதனால் ரஸ்யா போன்ற பெரிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டுள்ள இந்தியா, ஜேர்மனி போன்ற நாடுகள் தமது எரிபொருள் தேவைக்கு ரஷ்யாவைப் பெரிதும் நம்பியுள்ளன. அமெரிக்காவின் ரஷ்யா மீதான தடைகளும் நெருக்குவாரங்களும் இந்நாடுகளில் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளன. அமெரிக்க டொலருக்குப் பதிலாக இந்திய ரூபாவைப் பயன்படுத்த முடியுமாயின் டொலரில் தங்கியிருப்பதைக் குறைக்கலாம். இந்திய ரூபாவை வர்த்தகத்தில் பயன்படுத்த அனுமதிப்பதன் மூலம் இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகத்தை விரிவாக்குவதே அதன் தேவையாக உள்ளது.



குறிப்பாக ஆசிய வட்டகையில் இந்திய ரூபாவைப் பிரபலப்படுத்துவதே முக்கியமான நோக்கமாக இருக்கிறது. ஆனால் இதுவரை அனுமதி வழங்கப்பட்டுள்ள நாடுகளை நோக்குமிடத்து அவை உலகின் எல்லாப்பகுதிகளிலும் அமைந்துள்ளன. அமெரிக்காவுடனும் மேற்குலக நாடுகளுடனும் முரண்பட்டுள்ள நாடுகள் வர்த்தகத்தில் ஈடுபட இதனை ஒரு மாற்று வழியாக அந்நாடுகள் பயன்படுத்தும். குறிப்பாக மேலே சொல்லப்பட்ட நாடுகளில் ரஷ்யாவே கூடிய அக்கறையுடன் இந்திய ரூபாவில் வர்த்தகம் செய்வதில் ஆர்வம் காட்டுவதாகக் இந்தியப்பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது. ஆகவே அமெரிக்கா இந்தியாவின் இந்த நகர்வை எவ்வாறு நோக்கும் என்பதில் நாம் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை.

இந்திய ரூபாவை சர்வதேச கொடுக்கல் வாங்கல்களில் பயன்படுத்தப்படும் ஒரு வெளிநாட்டு நாணயமாக அறிவித்த பின்னர் அதன் மூலம் கொடுக்கல்-வாங்கல்களும் தீர்ப்பனவகளும் செய்யப்படவேண்டுமாயின் ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டுள்ள 18 நாடுகளிலும் உள்ள வங்கிகள் இந்தியாவில் உள்ள வங்கிகளில் SRVA என அழைக்கப்படும் Special Rupee Vostro Account ரூபாக் கணக்குகளை ஆரம்பிக்க வேண்டும். ஏற்கெனவே 60 வெளிநாட்டு வங்கிகள் இந்திய வங்கிகளில் அவ்வகை VOSTRO கணக்குகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கப்பட்டு விட்டது. இவ்வகையில் 60 ரஷ்யவங்கிகள் இக்கணக்குகளை ஆரம்பித்து விட்டதாகத் தெரிகிறது. இலங்கையின் மூன்று வங்கிகள் மும்பையில் உள்ள இந்தியன் வங்கியில் அக்கணக்குகளை ஆரம்பிக்க ஆனுமதி வழங்கப்பட்டது.

அண்மையில் இலங்கையின் செலான் வங்கி அக்கணக்கை ஆரம்பித்துள்ளது. இலங்கை வங்கி கணக்கை ஆரம்பித்து கோடுக்கல்-வாங்கல்களை ஆரம்பித்து விட்டதாகவம் செய்திக்குறிப்பொன்று கூறுகிறது. இவ்வாறு இலங்கையில் உள்ள வங்கிகள் இந்தியாவில் இந்திய ரூபாவில் கணக்குகளை ஆரம்பிக்கும் போது இந்தியாவின் பார்வையில் அது VOSTRO கணக்கு ஆகும். VOSTRO என்பதன் அர்த்தம் எங்களிடம் உள்ள உங்கள் பணம் என்பதாகும். ஆனால் அதே கணக்கு இலங்கையின் பார்வையில் NOSTRO கணக்கு என அழைக்கப்படும். NOSTRO என்பதன் அர்த்தம் உங்களிடம் உள்ள எங்கள் பணம் என்பதாகும். அதேபோல இலங்கை மற்றும் இந்தியா தவிர்ந்த மூன்றாவது நாடொன்றின் பார்வையில் உதாரணமாக வங்காள தேசத்தின் பார்வையில் அதே கணக்கு LORO கணக்கு என அழைக்கப்படும். LORO என்பதன் அர்த்தம் உங்களிடம் உள்ள அவர்களின் பணம் என்பதாகும்.

இப்போது இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி மேற்கொள்ளப்படுவதாகக் கருதுவோம். அதற்கான செலுத்தல் இந்தியாவில் உள்ள வங்கியில் இலங்கையைச் சேர்ந்த வங்கியின் ஏழுளுவுசுழு கணக்கில் வரவு வைக்கப்படும். இப்போது இந்தியாவிலிருந்து இறுக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான செலுத்தல்களை அதே கணக்கில் அருந்து மேற்கொள்ள முடியும். அதேபோல இந்தியாவில் உள்ள வங்கிகளும் இலங்கையில் VOSTRO கணக்குகளைத் திறப்பதன் மூலம் இந்திய ரூபாவிலான கொடுக்கல்வாங்கல்களை திறம்பட மேற்கொள்வதுடன் இலங்கை ரூபாவை இந்திய ரூபாவுக்கும் இந்திய ரூபாவை இலங்கை ரூபாவுக்கும் கொடுக்கல் வாங்கல் செலவுகள் இன்றி நேரடியாக மாற்றிக்கொள்ள முடியும். முன்னர் சட்டரீதியாக இலங்கை ரூபாவை இந்திய ரூபாவுக்கு மாற்ற வேண்டும் என்றால் முதலில் இலங்கை ரூபாவை ஐக்கிய அமெரிக்க டொலருக்கு மாற்றி டொலரை இந்திய ரூபாவுக்கு மாற்றிக்கொள்ள வேண்டும். இதற்கு கமிஷன் வேறு கொடுத்து அழவேண்டும். இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கும் பயணம் செய்வோர் இந்த மாற்றல்கள் ஊடாக தமது பணத்தில் ஒரு பகுத-ியை இழக்க நேரிடும் அதைத் தவிர்க்க கள்ளச் சந்தையில் இந்திய ரூபாவை மாற்றிக் கொண்டு செல்வதுண்டு. ஆனால் இந்தியாவிலிருந்து மீளவரும் போது இந்திய கரன்சி சற்று கூடுதலாக கொண்டுவரப்பட்டால் அங்குள்ள விமான நிலையக் காக்காய்கள் அதனைக் பிடுங்கிக் கொண்டு அனுப்பிய சம்பவங்களும் உண்டு. இப்போது வெளிவந்துள்ள உத்தியோக பூர்வ அறிக்கைகளின் படி 5000 டொலருக்கு சமமான பெறுமதியுள்ள இந்திய ரூபாவை கொண்டு செல்லவும் கொண்டு வரவும் சாத்தியப்பட வேண்டும். சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்காது என்பது போல எழுத்தில் எவ்வாறு இருந்தாலும் நமது வாலாக்கள் எப்படி நடப்பார்கள் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

இந்தியா ரூபா மட்டுமல்ல, இந்தியாவும் இலங்கைக்கு எப்போதும் உதவியாகவே இருக்கும் என்பதை கொழும்பில் ஆட்சி பீடத்தில் உள்ளவர்கள் உணர வேண்டும். இந்திய ரூபாயில் வர்த்தம் செய்வது என்பது இலங்கை இப்போது இருக்கக் கூடிய கடும் பொருளாதார நெருக்கடியில் ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். ஆனால் அரசியல் நிலைப்பாடு போன்று சொல்வதொன்று செய்வதொன்று என்றும் ஒருவருக்கும் வாலையும் மற்றவரும் தலையையும் என்று காட்டும் நிலைப்பாடு மற்றும் சுத்துமாத்து வேலைகளை பொருளாதார விடயத்திலும் இலங்கை கையாளுமாயின் ஆப்பை பிடுங்கிய குரங்கின் கதையாகிவிடும் என்பதை மனதில் கொள்வது நல்லது. "இவன் ரொம்ப நல்லவன்....எவ்வளவு அடித்தாலும் தாங்குவான்" என்கிற நிலைப்பாட்டை எடுத்து, அவன் திருப்பியடித்தால் கதை கந்தல்தான்.

ஊதுகிற சங்கை ஊதியாகிவிட்டது. இனி பிழைத்துக்கொள்வது மகனே உனது சாமர்த்தியம்.



# 'ரூ.15க்கு பெட்ரோல்' : "விருதுநகரில் ஆலை தொடங்கி மூலிகை பெட்ரோல் விற்பனை செய்யப்படும்" சொல்கிறார் ராமர் பிள்ளை

விருதுநகர் மாவட்டத்தில் உற்பத்தி ஆலை தொடங்கி ஒரு லிட்டர் மூலிகை பெட்ரோல் ரூ.15க்கு விற்பனை செய்யப்படும் என்று ராஜபாளையத்தில் செய்தியாளர்களை சந்தித்த ராமர் பிள்ளை தெரிவித்தார்.ராமர் பிள்ளை மற்றும் அவரது சட்ட ஆலோசகர் சொக்குசாமி ஆகியோர் கூட்டாக இன்று செய்தியாளர்களை சந்தித்தனர். இதில் ராமர் பிள்ளையின் சட்ட ஆலோசகர் சொக்குசாமி பாலசுப்பிரமணியம் கூறும்போது, "ராமர் பிள்ளை கண்டுபிடித்து மூலிகை பெட்ரோல் அல்ல, வேதி பொருட்களை கொண்டு போலியாக தயாரிக்கப்பட்டது எனக் கூறி கடந்த 2000ம் ஆண்டு சிபிஐ மோசடி வழக்கு பதிவு செய்தது.

இந்த வழக்கை விசாரித்த சென்னை எழும்பூர் நீதிமன்றம் 2016ம் ஆண்டு ராமர் பிள்ளைக்கு 3 ஆண்டுகள் தண்டனை மற்றும் ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து ராமர் பிள்ளை தொடர்ந்த மேல் முறையீட்டு வழக்கில் கூடுதல் அமர்வு நீதிமன்றம் ராமர் பிள்ளையை விடுதலை செய்து



தீர்ப்பளித்து உள்ளது" என்று தெரிவித்தார்.தொடர்ந்து ராமர் பிள்ளை பேசும்போது, "1999ம் ஆண்டு மூலிகை பெட்ரோல் கண்டுபிடித்து, முறையான அனுமதி பெற்று, ஆலை தொடங்கி, மூலிகை பெட்ரோல் தயாரித்து ஒவ்வொரு லிட்டருக்கும் அரசுக்கு வரி செலுத்தி பெட்ரோல் விற்பனை செய்யப்பட்டு வந்தது. அது மூலிகை பெட்ரோல் அல்ல, போலி பெட்ரோல் என வழக்கு தொடரப்பட்டது.

ராஜபாளையத்தில்தான் முதலில் இந்த மூலிகை பெட்ரோல் தயாரித்து வெளியிட்டேன். தற்போது என்மீது உள்ள குற்றச்சாட்டுகளை பொய் என நிரூபித்து விட்டேன். விரைவில் விருதுநகர் மாவட்டத்தில் பெரிய மூலிகை பெட்ரோல் உற்பத்தி ஆலை தொடங்கப்படும். அந்த ஆலையில் உற்பத்தி செய்யப்படும். மூலிகை பெட்ரோல் லிட்டருக்கு ரூ.15 க்கு வழங்க முடியும்.புகை இல்லாத பெட்ரோல் வழங்க முடியும். எங்களது கண்டுபிடிப்பை தொழிலதிபர்கள் முன் நிரூபித்து உள்ளேன். புதிய ஆலை தொடங்குவதற்கு முதலீட்டாளர்கள் முன்வந்து உள்ளனர். இன்னும் 40 நாட்களில் புதிய ஆலை அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்படும். இனி எனது கண்டுபிடிப்புக்கு எந்த பிரச்சினையும் இல்லை" என்றார். சித்த மருத்துவர் கூடலிங்கம், ஓய்வு பெற்ற சுகாதார ஆய்வாளர் கோவிந்தன், சட்ட ஆலோசகர் சொக்குசாமி பாலசுப்பிரமணியம் உட்பட பலர் உடனிருந்தனர்.

# "தமிழகத்தில் ஆக்கிரமிப்பில் உள்ள 8,366 நீர்நிலைகளை மீட்க நடவடிக்கை எடுப்பீர்" அன்புமணி



"தமிழகத்தில் ஆக்கிரமிப்பில் உள்ள 8,366 நீர்நிலைகளை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழகத்தில் மொத்தமுள்ள 1 லட்சத்து 6,957 நீர்நிலைகளில் 8366 நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பதாக மத்திய அரசு நடத்திய நீர்நிலைகள் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

பாதுகாக்கப்பட வேண்டிய நீர்நிலைகளில் கிட்டத்தட்ட 8%க்கும் கூடுதலானவை ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இதை ஏற்க முடியாது.ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நீர்நிலைகளில் 5 நீர்த்தேக்கக்கங்கள், 1458 ஏரிகள், 3565 குளங்கள் ஆகியவையும் அடங்கும். பாசன ஆதாரமாகவும், குடிநீர் ஆதாரமாகவும் திகழும் இந்த நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பு அனுமதிக்கப்பட்டது பெரும் தவறு ஆகும். ஆக்கிரமிப்பு அளவிடப்பட்ட 4933 நீர்நிலைகளில் 1328இல் 75% வரையிலும், 1009இல் 75%க்கும் அதிகமாகவும் ஆக்கிரமிப்புகள் உள்ளன.

உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படாவிட்டால் இந்த நீர்நிலைகள் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டுவிடும்.நீர்நிலைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் தேவையை உயர் நீதிமன்றம் தொடங்கி ஐ.நா. அமைப்பு வரை வலியுறுத்தி வருகின்றன. நீர்நிலைகள் பாதுகாக்கப்படவில்லை என்றால் விவசாயமும், குடிநீர் ஆதாரங்களும் முற்றிலுமாக அழிந்து விடும். இதை உணர்ந்து ஆக்கிரமிக்கப்பட்ட நீர்நிலைகளை மீட்கவும், மீதமுள்ள நீர்நிலைகளை பாதுகாக்கவும் தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

.நீர்நிலைகளுக்கான அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில் தமிழக சட்டப்பேரவையில் ''தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு சிறப்புத் திட்டங்களுக்கான சட்டம் (Tamil Nadu Land Consolidation (for Special Projects) Act, 2023)" இயற்றப்பட்டிருப்பது நிலைமையை மேலும் மோசமாக்கி விடும். நீர்நிலைகளை பாதுகாப்பதற்காக அந்த சட்டத்தை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும்" என்று அதில் கூறியுள்ளார்.

# தமிழகத்தில் கரோனா பாதிப்பு படிப்படியாக குறைந்து வருகிறது: அமைச்சர் மா.சுப்பிரமணியன்



தமிழகத்தில் கரோனா பாதிப்பு படிப்படியாக குறைந்து வருவதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் மருத்துவமனைக்கு 68 லட்சம் ரூபாய் மதிப்பிலான மருத்துவ உபகரணங்கள் ரோட்டரி சங்கம் சார்பில் வழங்கப்பட்டது. இதனை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெற்றுக்கொண்டு, மருத்துவமனை நிர்வாகத்திடம் ஒப்படைத்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன், "எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் சிறுநீரகம், கல்லீரல், மஞ்சை மாற்று அறுவை சிகிச்சை போன்ற உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளுக்கான புதிய பிரிவு விரைவில் துவங்கப்பட உள்ளது. பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் சிசிச்சைக்காக சென்னையில் உள்ள மருத்துவமனைக்கு வருகின்றனர்.

ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கு 65 கோடி மதிப்பில் புதிய நரம்பியல் துறை கட்டிடம், கேஎம்சியில் 114 கோடியில் புதிய கட்டிடம், ஸ்டான்லி மருத்துவமனையில் 147 கோடியில் செவிலியர்களுக்கான தங்கும் விடுதி மற்றும் புதிய கட்டிடம், பல் மருத்துவ கல்லூரிக்கு புதிய மாணவியர் தங்கும் விடுதி, ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் 100 படுக்கைகள் கொண்ட சிகிச்சை பிரிவு உள்ளிட்டவை தொடர்பாக அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதேபோல, அனைத்து பெரிய மருத்துவமனைகளிலும் கட்டமைப்பை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் கரோனா தொற்று 500க்கும் மேல் பதிவாகி இருந்தது. தற்பொழுது படிப்படியாக குறைந்து வருகிறது. இதனால் மக்கள் அச்சப்பட தேவையில்லை" என தெரிவித்தார்.

# வெளிநாட்டுக்கு கடத்தப்பட்ட 1415ம் நூற்றாண்டு சோழர் கால ஹனுமன் சிலை மீட்பு

வெளிநாட்டுக்கு கடத்தப்பட்ட சோழர் காலத்தைச் சேர்ந்த ஹனுமன் சிலை மீட்கப்பட்டு, அது தமிழ்நாடு சிலை கடத்தல் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.இது தொடர்பாக மத்திய கலாச்சாரத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: அரியலூர் மாவட்டம் பொட்டவெளி வெள்ளூர் ஸ்ரீவரதராஜ பெருமாள் விஷ்ணு ஆலயத்திலிருந்து பகவான் ஹனுமன் சிலை கடத்தப்பட்டது.

அந்த சிலை 1415ம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட சோழர் காலத்தைச் சேர்ந்த சிலையாகும். இது 1961ம் ஆண்டு புதுச்சேரி பிரான்ஸ் நிறுவனத்தின் மூலம் ஆவணப்படுத்தப்பட்டது.2012ம் ஆண்டு கடத்தப்பட்ட இந்த சிலை, ஆஸ்திரேலியாவில் மீட்கப்பட்டு கேன்பராவில் உள்ள இந்திய துணை தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 2023



பிப்ரவரி மாதத்தின் கடைசி வாரத்தில் அந்த சிலை இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டு, அது 18.04.2023 அன்று வழக்கு சொத்தாக தமிழ்நாடு சிலை கடத்தல் தடுப்புப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. மத்திய அரசு நாட்டின் பழங்கால பாரம்பரியத்தை பாதுகாக்கவும், கடந்த காலங்களில் வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ட பாரம்பரிய சின்னங்களை மீட்கவும் உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.

தற்போது வரை மொத்தம் 251 பழங்கால பாரம்பரிய சின்னங்கள் மற்றும் சிலைகள் மீட்கப்பட்டுள்ளன. இதில் 2014ம் ஆண்டுக்கு பின்னர் தற்போது வரை 238 சிலைகளும், பாரம்பரிய சின்னனங்களும் மீட்கப்பட்டுள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198







# இலங்கையில் சீனத் தொலைக்காட்சியின் ஒளிபரப்பு நிறுத்தம்

- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்




இலங்கையில் பரீட்சார்த்தமாக ஒளிபரப்பான சீனத் தொலைக்காட்சி சேவை இம்மாதம் 27ஆம் திகதி வியாழக்கிழமை முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் எந்தவொரு அறிவிப்பும் இன்றி கடந்த 10 தினங்களாக ஒளிபரப்பான சீனத் தொலைக்காட்சியே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தீவு நாடான இலங்கையின் தொலைக்காட்சிகளில் சீன அலைவரிசை ஒன்று இலவசமாக பரீட்சார்த்த ஒளிபரப்பு சேவையை அண்மையில் ஆரம்பித்திருந்தது. இந்த சோதனை முறையிலான ஒளிபரப்பிற்கு இலங்கை அரசிடமிருந்து முறையான அனுமதி பெறப்பட்டதா என்பது மர்மாகவே உள்ளது. எனினும் நாட்டின் அரச தொலைக்காட்சியின் அலைவரிசைகளில் சீனாவின் இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி “சோதனை முறையில்” என்று கூறப்பட்டு ஒளிபரப்பானது.

அந்த சோதனை ஒளிபரப்பில் பன்னாட்டுச் செய்திகள் மட்டுமே இடம்பெற்றாலும், அது தொடர்ந்து முறையான ஒளிபரப்பாகத் தொடங்கும் போது, இலங்கை சார்ந்த விடயங்களும் ஒளிபரப்பாகும் என்றும் அவை தமிழ் மக்களிறிகு பாதகமாக அமையக்கூடும் என்ற கவலைகளும் இருந்தன.




இதில் முக்கியமாக கவனிப்பட வேண்டிய ஒன்று யாதெனில்-சீன ஒளிபரப்பு சேவையான சைனிஸ் குளோபல் ரெலிவிசன் நெற்வேற் அலைவரிசை- கேபிள் இணைப்பு இன்றி ஒளிபரப்பாகியது. அதன் காரணமாக அது நாட்டிலுள்ள அனைவரையும் சென்றடையும் வகையில் இருந்தது.

இலங்கை அரச தொலைக்காட்சிகளான ரூபவாகினி, ஐ ரீவி மற்றும் நேத்ரா ஆகிய ஒரே குழும ரீவிகள் நாட்டில் யூ.எச்.எவ் இல் வெளிவருகின்றன.

இவ்வாறு வெளிவரும் ஒளிபரப்பு சேவையானது கடந்த பெப்ரவரியில் இருந்து அலைவரிசை பங்காளிகளை கோரியிருந்தனர். இதன்போது இந்த சீன ஒளிபரப்பு சேவை அதனை பற்றியிருக்கலாம் என நம்பப்பட்டது.

இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபன அலைவரிசைகளிற்கு 5 இடத்தில் அலைவரிசை கோபுரங்கள் உண்டு அவை, கொழும்பு, மடேல்சிம் (ஊவா) கொக்காவில். முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அதற்கான அன்டனா அமைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே இவ்வாறு இடம்பெற்ற பரீட்சார்த்த ஒளிபரப்பு தெளிவாக இயங்கியது.

இவ்வாறு இயங்கிய சைனிஸ் குளோபல் ரெலிவிசன் நெற்வேர்க் முன்னர் ஓர் தொலைபேசி நிறுவன இணைப்பு மூலம் கட்டண சேவையில் இயங்கியபோதும் இவை அனைத்தும் தற்போது முழுமையாக தடைப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வெளியே புற நாடு ஒன்றில் இருந்து ஒளிபரப்பாகும் சமயம் செய்மதி அலைவரிசெயூடாக இலங்கைக்கும் கடத்தப்பட்டு இங்கே ஒளிபரப்பப்பியதாக தெரியவரும் இச்சேவை தொடர்பில் இந்தியா அதிக கரிசணை கோண்டு நோக்கிய சமயம் தற்போது அச்சேவை முழுமையாக நிறுத்தப்பட்டு அதே அலைவரிசையில் ஏஸ்.பி.சி என்னும் தொலைக்காட்சி சேவை ஒன்று ஒளிபரப்பாகின்றது.

எனினும் சீனத் தொலைக்காட்சியின் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதா அல்லது நிரந்தரமாக நிறுத்தப்பட்டுள்ளதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இந்த விடயம் தொடர்பில் கடந்த வாரம் கனடா உதயன் பத்திரிகையின் இணையதளத்திலும், அச்சுப்பதிப்பிலும் விரிவான செய்தி வெளியாகியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# அன்பின் தொனி - 689

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

## ஜெபம்

### ஆபிரகாமின் ஊழியக்காரனின் ஜெபம்

ஆபிரகாம் வயதுசென்று முதிர்ந்தவனானான். கர்த்தர் ஆபிரகாமைச் சகல காரியங்களிலும் ஆசீர்வதித்தார். அப்பொழுது ஆபிரகாம் தன் வீட்டிலுள்ளவர்களில் வயதில் மூத்தவனும், தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் அதிகாரியுமாகிய தன் ஊழியக்காரனை நோக்கி: நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண் கொள்ளாமல், நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண்கொள்வேன் என்று, வானத்துக்குத் தேவனும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டுக்கொடுக்கும்படிக்கு, நீ உன் கையை என் தொடையின்கீழ் வை என்றான். அதற்கு அந்த ஊழிக்காரன்: அவ்விடத்துப் பெண் என் பின்னே இந்தத் தேசத்துக்கு வர மனதில்லாதிருந்தால், நீர் விட்டுவந்த தேசத்திற்குத்தானே உம்முடைய குமாரனை மறு படியும் அழைத்துப்போகவேண்டுமோ என்று கேட்டான். அதற்கு ஆபிரகாம்: நீ என் குமாரனை மறுபடியும் அங்கே அழைத்துக்கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. என்னை என் தகப்பனுடைய வீட்டிலும் என் இனத்தார் இருக்கிற தேசத்திலுமிருந்து அழைத்து வந்தவரும், உன் சந்ததிக்கு இந்த தேசத்தைத் தருவேன் என்று எனக்குச் சொல்லி ஆணையிட்டவருமான வானத்துக்குத் தேவனாகிய கர்த்தர், நீ அங்கேயிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண் டுவரும்படிக்கு, தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார். பெண் உன் பின்னே வர மனதில்லாதிருந்தாளே யாகில், அப்பொழுது நீ இந்த என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய், அங்கேமாத்திரம் என் குமாரனை மறுபடியும் அழைத் துக்கொண்டு போகவேண்டாம் என்றான். அப்பொழுது அந்த ஊழியக்காரன் தன் கையைத் தன் எஜமானாகிய ஆபிரகா முடைய தொடையின்கீழ் வைத்து, இந்தக் காரியத்தைக்குறித்து அவனுக்கு ஆணையிட்டுக்கொடுத்தான்.

பின்பு அந்த ஊழியக்காரன் தன் எஜமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைத் தன்னுடனே கொண்டுபோனான், தன் எஜமானுடைய சகலவித உச்சிதமான பொருள்களும் அவன் கையில் இருந்தன, அவன் எழுந்து புறப்பட்டுப்போய், மெசொப்பொத்தாமியாவிலே நாகோருடைய ஊரில் சேர்ந்து, ஊருக்குப் புறம்பே ஒரு தண்ணீர்த் துரவண்டையிலே, தண் ணீர் மொள்ள ஸ்திரீகள் புறப்படுகிற சாயங்கால வேளையிலே, ஒட்டகங்களை மடக்கி, தனக்குள்ளே சொல்லிக்கொண்டது என்னவென்றால்: என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவுசெய்தருளும். இதோ, நான் இந்தத் தண்ணீர்த்துரவண்டையில் நிற்கிறேன், இந்த ஊராருடைய பெண்கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டு வருவார்களே. நான் குடிக்க உன் குடத் தைச் சாய்க்க வேண்டும் என்று நான் சொல்லும்போது: குடி என்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எஜமானுக்கு அநுக்கிரகம் செய்தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும் என்றான். அவன் இப்படிச் சொல்லி முடிக்கும் முன்னே, இதோ, ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோரின் மனைவி மில்க்காளுடைய குமாரனாயி ருக்கிற பெத்தவேலுக்குப் பிறந்த ரெபெக்காள் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டுவந்தாள். அந்தப் பெண் மகா ரூபவதியும், புருஷனை அறியாத கன்னிகையுமாய் இருந்தாள், அவள் துரவில் இறங்கி, தன் குடத்தை நிரப் பிக்கொண்டு ஏறிவந்தாள். அப்பொழுது அந்த ஊழியக்காரன், அவளுக்கு எதிர்கொண்டோடி: உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்றான். அதற்கு அவள்: குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிரமாய்க் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். கொடுத்தபின், உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொல்லி, சீக்கிரமாய்த் தன் குடத்துத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி, அவனுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொண்டு வார்த்தாள். அந்த மனிதன் அவளைக்குறித்து ஆச்சரியப்பட்டு, கர்த்தர் தன் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணினாரோ இல்லையோ என்று அறியும்பொருட்டு மவுனமாயிருந்தான். ஒட்டகங்கள் குடித்துத் தீர்ந்தபின், அந்த மனிதன் அரைச் சேக்கல் எடையுள்ள பொற்காதணியையும், அவள் கைகளுக்குப் பத்துச் சேக்கல் எடைப் பொன்னுள்ள இரண்டு கடகங் களையும் எடுத்துக்கொடுத்து, நீ யாருடைய மகள், எனக்குச் சொல்லவேண்டும், நாங்கள் உன் தகப்பன் வீட்டில் இராத் தங்க இடம் உண்டா என்றான். அதற்கு அவள்: நாகோருக்கு மில்க்காள் பெற்ற குமாரனாகிய பெத்துவேலின் மகள் என்று சொன்னதுமன்றி, எங்களிடத்தில் வைக்கோலும் தீவனமும் வேண்டியமட்டும் இருக்கிறது, இராத்தங்க இடமும் உண்டு என்றாள். அப்பொழுது அந்த மனிதன் தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு, என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர் தம்முடைய கிருபையையும், தம்முடைய உண்மையையும் என் எஜமானை விட்டு நீக்கவில்லை, நான் பிரயாணம்பண்ணிவருகையில், கர்த்தர் என் எஜமானுடைய சகோதரர் வீட்டுக்கு என்னை அழைத்துக்கொண்டுவந்தார் என்றான்.

தொடரும்...



# Sri Lankan State Brutality Paralyzes a Tamil Man as he Wins a Landmark Case in the UN

- Siva Prameswaran

A former LTTE cadre who has won a landmark ruling in the UN Human Rights Committee has been told by doctors that "he will go paralyzed soon due to injuries to his backbone caused by torture in Sri Lanka" one of his attorneys has said.

Sri Lanka has come in for scathing comment from the UN Human Rights Committee when it unanimously passed a resolution stating the rights of a former LTTE cadre had been violated.

The said former LTTE cadre only identified as VM in the legal documents has submitted to the UN body that he was brutally tortured in 2009 before he fled to Switzerland for the safety of his life.

The committee comprising of 17 members has concluded that the victim was brutally assaulted, tortured, and subjected to inhuman treatment while in detention and was denied the right to an effective remedy.

"Covenant rights have been violated. Accordingly, the state party (Sri Lankan government - GOSL) is obligated, inter alia, to take appropriate steps to: (a) conduct a thorough, impartial, independent, and effective investigation into the facts submitted by the author; (b) prosecute, try and punish those responsible for the author's torture, and make the results of such measures public; and (c) provide adequate compensation and appropriate measures of satisfaction to the author for the violations suffered".

Commenting further the members of the committee further said "The state party (GOSL) is also under an obligation to take steps to prevent similar violations in the future". The UN committee has also stressed that GOSL should amend the legislation and statutes of limitations in accordance with international standards and by prescribing sanctions and remedies for the offence of torture commensurate with the gravity of such crimes and consistent with its obligations.

GOSL has been given 180 days to reply to the measures taken to give effect to the Committee's views. Also, any measures taken should be an effective and enforceable remedy, when it has been determined that a violation has occurred.

Apart from replying to them within the stipulated period, GOSL has also been directed to publish their views and have them disseminated in the official languages-Sinhala and Tamil.

The committee has also gone on record citing "Lack of cooperation by the state party".

In spite of constant reminders in 2018, 2019, and 2020 for the GOSL to submit its observations on the admissibility and merits of the complaint there was no response. Even subsequent reminders to the State party to reply on time were ignored the committee has regretted.

"The Committee regrets that the State party has failed to timely respond to these requests and to provide any information with regard to the merits of the author's allegations".

The fact is the GOSL was not even prepared to look into the merits of the complaint when it was requested to examine all the allegations brought against them in good faith; which is obligatory under the accepted international norms (4(2) of the Optional Protocol on such issues where allegations are made against the state.

In the absence of a reply from the GOSL seeking to make available to the Committee all the information at their disposal, the 17 members unanimously decided that "due weight must be given to the author's allegations, to the extent they are sufficiently substantiated".

Geeth Kulasegaram, a London-based Attorney who was part of the legal team of VM tweeted "Ex LTTE cadre won case @UN HRC (International Covenant on Civil and Political Rights) 17 Judges found Sri Lanka guilty of torture, rape. Order to punish perpetrators & pay compensation".

Human Rights activists point out that even a UN body has taken 9 years to arrive at a decision in a clear case of severe torture and abuse by the state, in this case, GOSL. VM filed his case with the Human Rights Committee in 2014.

VM filed a case alleging that he was abducted in January 2009 and subsequently tortured for his connection with the LTTE. Also, he was told by the Criminal Investigation Department (CID) that he needed to work for the authorities to work as an 'LTTE informant', which he refused to do so. Following his refusal, the brutality of the torture increased to inhuman levels. His statement that he left the LTTE in 2000 was not in contact with them for over 9 years at that time, the CID did not believe him and continued with their 'usual treatment'.

The victim in his testimony to the UN has stated that the CID officers hit him with a cricket bat and wickets on his hip and shoulders, inserted pins through his nipples, tied a nylon rope around his toes and pulled him upside down, and submerged his head under water up to ten minutes.

As the alleged torture continued over the next day, he was forced by a CID officer to sign a statement in Sinhalese, which he could not understand. While the victim continued to deny any current link with the LTTE the torture by the CID continued unabated according to the UN documents. In his complaint, the victim VM has spoken about the brutalities he continued to endure in the custody of the CID. According to him, he was hit with pipes, had sharp objects inserted into his anus, was forced into a freezer room apart from being subjected to electric shocks, and in sadistic brutality by the CID inserted a metal rod into his penis.

Taken to a military hospital he had 18 stitches to his intestines. VM further alleges that even the doctor warned him not to say he was tortured. Denied a Tamil interpreter, he was ultimately released after paying a bribe, the documents say. After seven months, in July 2009, he was granted an entry visa to Switzerland and subsequently became a permanent resident and was granted refugee status.

Swiss doctors diagnosed him with Post-Traumatic Stress Disorder and erectile dysfunction and incontinence as a result of the torture and rape he endured in Sri Lanka.




# அதிலிங்கேஸ்வரருக்கு அனுமதி... ஆனால் குறுந்தூர் ஐயனாருக்கு...

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**

கனடாவிலுள்ள எமது தமிழ் உறவுகள் வெள்ளிக்கிழமை (28) அன்று காலை கண் விழிக்கும் (அல்லது சற்று தாமதமாக எழுந்து இந்த வார உதயன் பத்திரிகையை வாசிக்கும்) நேரத்தில், வவுனியா வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் மீண்டும் தனது இடத்தில் வீற்றிருப்பார். பல வாரங்களாக மன உளைச்சலில் இருந்த தமிழர்களிற்கு இது சற்று மனதிற்கு ஆறுதல் அளிக்கும் செய்தியாக இருக்குமென்று நம்புகிறேன்.

வவுனியா மாவட்டம் நெடுங்கேணி வெடுக்குநாறியில் விசமிகளால் திட்டமிட்டு உடைக்கப்பட்ட ஆலய விக்கிரகங்களை அதே இடத்தில் மீண்டும் நிறுவிட வவுனியா நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

வவுனியா வடக்கு நெடுங்கேணியில் ஒலுடுக் கிராமத்தில் அமைந்திருந்த ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் மார்ச் மாதம் இனம் தெரியாத விசமிகளால் உடைக்கப்பட்டமை தொடர்பில் ஆலய நிர்வாகம் நெடுங்கேணிப் பொலிசில் மேற்கொண்ட முறைப்பாடு தொடர்பில் நெடுங்கேணிப் பொலிசாரினால் வவுணியா நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு நேற்று நீதவான் சுபாஜினி தேவாராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்படி கட்டளையை நீதவான் வழங்கினார்.



ஒலுமடு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு மன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது "எவரும் அங்கே வழிபட முடியும்" என மன்று ஏப்பிரல் மாதம் 24ஆம் திகதி கட்டளையிட்டதோடு வழக்கை வியாழக்கிழமை (27) தினத்திற்கும் திகதியிடப்பட்டது.

இருந்தபோதும் ஆலய நிர்வாகிகள் சிலர் வலிந்து நாசம் செய்யப்பட்ட அந்த ஆலயப் பகுதியில் வழிபாட்டில் ஈடுபட்டாலும், துரதிஷ்டவசமாக, மிகவும் மன வருத்தத்துடன், அங்கே எந்தவொரு விக்கிரகங்களும் இன்றியே வழிபாட்டில் ஈடுபட்டனர். விக்கிரகம் இல்லாத ஆலயத்தில் பூசை அல்லது வழிபாடு என்பது மிகவும் வருத்தமளிக்கும் செயல் என்றாலும், தமது இறை கடமைகளை நிறுத்துவது முறையல்ல என்பதால், கடும் மன வேதனையுடன் ஆலய நிர்வாகத்தினர் அங்கு சென்று பெயரளவில் வழிபாட்டில் ஈடுபாட்டு வந்தனர்.

அதனால், அங்கே முன்பிருந்தமை போன்று அந்த விக்கிரகங்களை பிரதிஸ்டை செய்ய நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இன்று நேரில் பிரசன்னமாகி மன்றில் சமர்ப்பணம் செய்தார்.

இதன்போது சட்டத்தரணி சுமந்திரனுடன் வவுனியாவைச் சேர்ந்த மேலும் 12 சட்டத்தரணிகள் மன்றில் ஆஜராகினர். வியாழக்கிழமை வழக்கு விசாரணைக்கு வந்த போது, வவுனியா பொலிஸ் தரப்பில் ஆஜராகியிருந்தாலும், இரண்டாவது முறையாக தொல்லியல் திணைக்களத்தின் சார்பில் யாரும் சமூகமளிக்கவில்லை என்பது நீதிமன்றத்தால் குறித்துக்கொள்ளப்பட்டது.

எனினும் தொல்லியல் திணைக்களம் சார்பில் ஏன் யாரும் நீதிமன்றத்தில் சமூகமளிக்கவில்லை என்பது தொடர்பில் எந்த விளக்கங்களும் நீதவான் முன்னர் வைக்கப்படவில்லை.

இந்த வழக்கினை ஆராய்ந்த நீதிபதி தனது கட்டளையில் இன்றைய தினம் (வியாழக்கிழமை 27 ஆம் திகதி) பொலிசார் தமது பொறுப்பில் உள்ள ஆலய விக்கிரகங்களை ஆலய நிர்வாகத்தினரிடம் கையளிக்க வேண்டும். நிர்வாகத்தினர் வெள்ளிக்கிழமை 28ஆம் திகதி காலையில் அவற்றினை ஏற்கனவே இருந்த இடத்தில் பிரதிஸ்டை செய்யலாம் என்று உத்தரவிட்டார்.

கடந்த மார்ச் மாதம் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இருந்த விக்கிரகங்கள் அடித்து நொறுக்கி சேதமாக்கப்பட்ட பிறகு, மன வருத்தமடைந்திருந்த ஆலய நிர்வாகத்தினர் மற்றும் பக்தர்கள், அங்கு புதிய விக்கிரகங்களை பிரதிஸ்டை செய்ய ஏற்பாடு செய்தனர். எனினும் அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோரின் முன்னிலையில் அவை மீண்டும் பிரதிஸ்டை செய்யப்படவிருந்த நேரத்தில் தொல்லியல் திணைக்களத்தின் தலையீட்டால், பொலிசார் அந்த நிகழ்வை நிறுத்தி, அங்கு வைக்கப்படவிருந்த புதிய விக்கிரகங்களை தமது பொறுப்பில் எடுத்தனர்.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை (28) அன்று நீதிமன்ற உத்தரவின்படி புதிய விக்கிரகங்களின் பிரதிஸ்டை இடம்பெறும்போது தொல்லியல்த் திணைக்களமும் பிரசன்னமாக முடியும் எனவும், எனினும் அவர்கள் அந்த நிகழ்விற்கு தடை ஏதும் ஏற்படுத்தக் கூடாது என்றும் வவுனியா நீதவான் கட்டளையிட்டதோடு வழக்கை மேலதிக விசாரணைக்காக எதிர் வரும் மே 17ஆம் திகதிக்கும் ஒத்தி வைத்தார்.

நீண்டகால வரலாற்றைக்கொண்ட ஆதிலிங்கேஸ்வரர் ஆலயப் பகுதியில் பூசை வழிபாடுகளை மேற்கொள்ள தொல்லியல்த் திணைக்களம் தடைவிதித்து வந்ததோடு 2019ஆம் ஆண்டின் பின்பு அங்கு பொதுமக்கள் செல்வதற்கும் தடை விதித்து வந்தனர். இந்த தடையின் காரணமாக பூசைகள் தடைப்பட்டதோடு எவரும் ஆலயப் பகுதிக்கு செல்ல முடியாத சூழலும் சுமார் நான்கு ஆண்டுகளாக நிலவி வந்தது.

இந்த நிலையிலேயே வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் அனைத்தும் உடைக்கப்பட்டுள்ளதான தகவல் ஆலய நிர்வாகத்திற்கு கிட்டியது. இந்த தகவலையடுத்து மார்ச் மாதம் 26ஆம் திகதி ஆலயப் பகுதிக்குச் சென்ற ஆலய நிர்வாகத்தினர் இது தொடர்பில் மறுநாள் நெடுங்கேணிப் பொலிசிலும் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்திருந்தனர். இந்த விடயம் பெரும் சர்ச்சையாக உருவெடுத்து வவுனியாவில் பொதுமக்கள் வீதியில் இறங்கும் ஆர்ப்பாட்டம் வரை சென்றது. ஆர்ப்பாட்டம் நடாத்த வேண்டாம் விக்கிரகங்களை மீள வைக்க முடியும் என மாவட்ட ஆரச அதிபர் மற்றும் அமைச்சர்கள் வாய்வழியாக கூறியபோதும் அதனை எழுத்தில் வழங்க மறுத்தமையால் வவுனியாவில் மிகப்பெரும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்த ஆலயத்தின் மீதான தாக்குதல் மற்றும் அங்கு மக்கள் சென்று வழிபடுவதற்கான தடையை மதத் தலைவர்களும், சிவில் சமூகத்தினரும், மாணவர் அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் கண்டித்திருந்தன என்பது நினைவூட்டத்தக்கது.

சற்று பின்னோக்கிப் பார்த்தால், ஏப்பிரல் மாதம் 2ஆம் திகதி மீண்டும் ஆலய விக்கிரகங்கள் அதே இடத்தில் பிரதிஸ்டை இடம்பெறும் என அமைச்சர்களான டக்ளஸ் தேவானாந்தா மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கூறி இரண்டாம் திகதி ஆலய விக்கிரகங்களை பிரதிஸ்டை செய்ய முற்பட்ட சமயம் அமைச்சர் ஒருவரின் கட்சியை சேர்ந்த ஒருவர் சிலரை அழைத்து வந்து தமது இஸ்டத்திற்கு சிலை வைக்க முயன்றதாக கூறப்பட்டதை அடுத்து தொல்லியல்த் திணைக்களம் கடவுள்களின் திருச்சொரூபங்களை மீண்டும் அங்கு பிரதிஸ்டை செய்ய தடைபோட்டது. இதனால் ஆலய சூழல்வரை சென்ற அமைச்சர்கள் ஆலய வளாகத்திற்குச் சென்றபோதும் ஆலய விடயம் நீதிமன்றில் இருப்பதனால் தற்போது பிரதிஸ்டை செய்ய முடியாது எனத் தெரிவித்த அமைச்சர்கள் இருவரும் அங்கிருந்து வெளியேறிய நிலையிலேயே மேற்படி வழக்கு இடம்பெற்றது.

இதையடுத்து இனிமேல் நாம் அமைச்சர்களையோ அதிகாரிகளையோ நம்பவில்லை நீதிமன்றத்தையே நம்பி நிற்கின்றோம் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்திருந்தனர்.

தற்போது வெடுக்குநாறி மலையில், இடித்தழிக்கப்பட்ட விக்கிரகங்களை மீண்டும் பிரதிஸ்டை செய்ய தடைகள் ஏதுமில்லை என்று வவுனியா நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், சிவபெருமான் அந்த மலையில் மீண்டும் எழுந்தருளி அவரது பக்தர்களுக்கு அருள்பாலிப்பார் என்று சைவர்கள் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.

இதேநேரம் முல்லைத்தீவு மாவட்டத்தின் குறுந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயம் தொடர்பிலும் வியாழனன்று முல்லைத்தீவு நீதிமன்றில் நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு 2023-03-02 அன்று சட்டத்தரணி தனஞ்சயன், கெங்காதரன் ஊடாக வடக்கு மாகாண சபையின. முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனால் வழக்கு தொடுக்கப்பட்டு அந்த வழக்கு 2023-03-30 இற்கு தவணை இடப்பட்டது. 2023-03-30 அன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் அநுர மணதுங்க சார்பில் சட்டமா அதபர் திணைக்கள சட்டத்தரணியும் முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி அமரதுங்க ஆகியோர் தவணை கோரியதற்கு அமைய வியாழக்கிழமை திகதியிடப்பட்டிருந்த வழக்கு அன்றைய தினம் விளக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.



அவ்வகையில் 27ஆம் திகதி வியாழனன்று வழக்கு விசாரணையின் போது சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி விகாரை கட்டப்பட்டுள்ளதனை ஏற்றபோதும் அதன் நியாயப்படுகளை விளக்கினார். இதேநேரம் வழக்காளர் தரப்பு சட்டத்தரணிகளும் விவாதங்களை முன்வைத்த நிலையில் இரு தரப்பு விவாதங்களையும. கேட்டறிந்த நீதிபதி ரி.சரவணராஜா வழக்கை யூலை மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

குறுந்தூர் மலையிலுள்ள ஆதிசிவன் அய்யனார் ஆலயத்தில் பன்னெடுங்காலமாக தாங்கள் வழிபட்டு வந்ததாக தமிழர்கள் கூறுகின்றனர். அங்கு சென்று வழிபட முடியாமல் தடுப்பது மட்டுமின்றி, அங்கு நீதிமன்ற உத்தரவொன்றயும் மீறி புதிய பௌத்த விகாரை ஒன்று கட்டப்படுவது ஏற்றுக்கொள முடியாதது என்று தமிழ் மக்கள் உறுதியாக கூறுகின்றனர். எனினும் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், அதன் முடிவிற்காக காத்திருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

வவுனியா ஆதிலிங்கேஸ்வரர் ஆலய வழிபாடு மற்றும் அங்கு உடைத்தழிக்கப்பட்ட விக்கிரகங்களிற்கு பதிலாக புதியவற்றை மீண்டும் பிரதிஸ்டை செய்ய அனுமதிவழங்கியது போன்று நீதிமன்றம் குறுந்தூர்மலை விடயத்திலும் நல்லதொரு தீர்ப்பை வழங்கும் என்று தாங்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.



வெடுக்குநாறி ஆலய வழக்குகளின் பின்னர் நெடுங்கேணிப் பிரதேச செயலாளர் பிரிவின் ஒலுமடுவில் உள்ள வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் நிர்வாகிகளில் ஒருவரான வை. பூபாலசிங்கத்திடம் ஆலய விக்கிரகங்களின் பிரதிஸ்டை தொடர்பில் கேட்டபோது:

"எமது ஆலய லிங்கம் உள்ளிட்ட விக்கிரகங்களை மீண்டும் பிரதிஸ்டை செய்ய நீதிமன்றமே அனுமதி வழங்கிய வகையில் உடனடியாக வெள்ளிக் கிழமை பகல் 12 மணிக்கு அந்தப் புண்ணிய காரியம் இடம்பெறும் அதற்கான ஏற்பாடுகளை மிகத் துரிதமாக மேற்கொள்வோம்" என்றார்.

இதற்கமைய இன்றைய தினம் ஒலுமடு ஆதிலிங்கேஸ்வரர் மீண்டும் பீடத்தில் அமர அனுமதி கிட்டிய நிலையில் பிரதிஸ்டை இடம்பெறுகின்றதா என ஆவலுடன் எதிர்பார்க்கப்படுவதோடு பலரும் ஆலயத்தை நோக்கிச் செல்ல தயாராகியுள்ளனர்.

வெடுக்குநாறி மலையிலுள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இருந்த இடத்தில் இறைவனின் புதிய திருவுருவச் சிலைகளை மீண்டும் பிரதிஸ்டை செய்யப்பட அனுமதி கிடைத்துள்ளது என்றாலு, குறுந்தூர்மலை தொடர்பில் எவ்விதமான தீர்ப்பும் இதுவரை கிட்டவில்லை. ஆனால் அங்கு நீதிமன்ற உத்தரவையும் மீறி அங்கு மிகப்பெரிய பௌத்த விகாரை ஒன்று கட்டப்பட்டு வருவதும் அது முடிவடையும் நிலையில் உள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது. நீதிமன்ற உத்தரவையும் மீறி எவ்வாறு அவ்வளவு பெரிய விகாரை கட்டப்படுகிறது என்பதற்கு மௌனமே பதிலாக உள்ளது.



# இவ்வார ராசிபலன்

**28-04-2023 வெள்ளி தொடக்கம் 04-05-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** உடல்நலத்தில் ஷேமம் கிடைக்கும் வாரம். ஆலய தரிசனம் அமைதியை தரும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். பண நடமாட்டம் கூடும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். கடன் சுமை குறையும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். பூமியால் லாபம் உண்டு. செய்த்தொழில் வியாபாரம் செழிக்கும். இல்வாழ்வில் இனிமை கூடும். தென்றல் வீசும். எதிர்ப்புக்கள் விலகும். நோய், நொடிகள் அகலும். பெயர் புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். விரும்பியது நிறைவேறும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். நட்பு வட்டம் விரிவடையும். பாராட்டுக்கள் கூடும். வேண்டும் வரம் கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். அரசியல்வாதிகள் ஆன்மீக வாதிகள் உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். பழைய கடன் அடையும். பங்குச்சந்தை லாபம் தரும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். கலை ஆர்வம் பெருகும். பொறுப்புக்கள் சிறப்பு சேரும். ஆதாயம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி வரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 4,3,9,1*
*அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* X,H




**ரிஷபம்:** கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும் வாரம். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். முகப்பொலிவு கூடும். உடல் நலம் சிறக்கும். மனதில் தெம்பும் தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். திருமண பாக்கியம் கூடி வரும். கொடுக்கல் வாங்கலில் சுமூக நிலை காணப்படும். செல்வாக்கு உயரும். உத்தியோக பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். நவகிரஹ அனுகிரஹம் நன்மை அளிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பந்தாவும் குறையாது. பாக்கெட்டில் காசும் கரையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப்பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். குழப்பங்கள் நீங்கும். குதூகலம் கூடும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கடன் கச்சைகள் தீரும். குடும்ப மேன்மை அதிகரிக்கும். தொட்டக் காரியம் ஜெயமாகும். பொருளாதார நிலை உயரும். தேவைகள் பூர்த்தியாகும். தேக பலம் கூடும். தொழில் போட்டி மறையும். புதிய முயற்சிகள் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் செலுத்துவது நல்லது.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பச்சையம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,5,1*
*அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* I,P




**மிதுனம்:** மதிநுட்பத்தோடு செயல்படும் வாரம். வியாபாரம் வெற்றி தரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு வளரும். சொந்த பந்தங்களால் உதவி உண்டு. பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். தந்தை உடல் நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. பால் தானம் பாவம் போக்கும். வம்பு தும்புகள் ஒழியும். மேலதிகாரியின் பாராட்டுக் கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழிலில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் கைகூடி வரும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து அலைமோதும். புதிய வாய்ப்புக்கள் பயன் தரும். புத்தி சாதுர்யம் பெருகும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர்கள் ஒற்றுமை அதிகரிக்கும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. வரவுகள் பெருகும். வழக்குகள் முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காளம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,4,3*
*அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* D,K




**கடகம்:** ஆசைகள் நிறைவேறும் வாரம். கட்டிடத்தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். பயண முயற்சி பலன் தரும். முன்கோபத்தை குறைக்க வேண்டும். ஆபத்துக்கள் விலகும். அதிகாரம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. வாகன யோகம் உண்டு. வரவுகள் திருப்தி தரும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் நிதானம் தேவை. பொருளாதாரம் மேம்படும். தோதான வாழ்வமையும். இல்லம் தேடி வாய்ப்புகள் வரும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். புதிய தொழில் மாற்றம் ஏற்படும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். அணிமணிகள் சேரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதாரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு இனிக்கும். ஏற்றமான தருணம் அமையும். தொழில் அபிவிருத்தி உண்டு. மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் வரும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் புரளும். திடீர் பயணம் உற்சாகம் தரும். கர்ம வினைகள் அகலும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பவானி அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,4*
*அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* E,T




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
9940431377
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 /





**சிம்மம்:** அதிகார பேச்சுக்கள் அரங்கேறும் வாரம். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். ஆரோக்யம் சீராகும். தன வரவுகள் பெருகும். நிர்வாகப் பொறுப்புக்கள் கூடும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் உண்டு. நீண்ட நாள் பிரச்சினை முடிவிற்கு வரும். நல்லோர்கள் வாழ்த்து கிடைக்கும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல் நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் அதிகரிக்கும். அன்னதானம் செய்து ஆனந்தம் அடையலாம். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தொழில் இடமாற்றம் நன்மை தரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். எதிரிகள் உதிரியாவார்கள். செல்வாக்கு கூடும். சொல்வாக்கு மேம்படும். பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. "ஆலய தரிசனம் பாவ விமோசனம்" "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" மாற்றம் ஏற்படும். புதுமையை விரும்புவீர்கள்.

*வழிபட வேண்டிய தெய்வம்: யானை பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3*
*அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* Q,J




**கன்னி:** வரவுகள் அதிகரிக்கும் வாரம். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். உறவினர் வருகை உண்டு. புதிய நட்பு ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன யோகம் உண்டு. வெற்றியை எட்டும் காலம். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். குடும்பத்தினர்களிடம் அனுசரிப்பு ஏற்படும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். மகிழ்ச்சியான செய்தி வரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெண்களின் ஆலோசனை ஆதாயம் தரும். இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். குடும்பத்தில் மேன்மைகள் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய கடன் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பேச்சில் பணிவு தேவை. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மேன்மைகள் அதிகரிக்கும். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மன நிம்மதி அதிகரிக்கும். விவேகமான பேச்சுக்களால் வீண் பழி அகலும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை.

*வழிபட வேண்டிய தெய்வம்: அய்யனார் சுவாமி, அதிர்ஷ்ட எண்: 4,9,6,2*
*அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* J,L




**துலாம்:** சாதகமான சூழ்நிலைகள் அமையும் வாரம். தொட்டது துலங்கும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ண மயமாகும். உறவினரால் உதவி கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிடைக்கும். பணியாட்களின் ஆதரவு பெருகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். தொழிலின் ரகசியம் காப்பாற்றப்படுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்கள் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டு. தேக ஆரோக்கியம் திருப்தி தரும். தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சொத்துக்களால் லாபம் கிடைக்கம். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய் வழி உறவில் கவனம் தேவை. மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். கலவரமான சூழ்நிலை காணப்படும். போட்டி, பொறாமைகள் விலகும். பாகப்பிரிவினை ஏற்படும். மனை வாங்கும் யோகம் உண்டு. மன நெருக்கடிகள் தீரும். ஊக்கம் அதிகரிக்கும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மருத காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,6,4,9*
*அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* H,K




**விருச்சிகம்:** தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் வாரம். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். பயணம் லாபம் தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். வாழ்வில் வசந்தம் கூடும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மைகள் அதிகரிக்கும். சூழ்நிலைகள் சாதகமாகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. அந்நிய தேசப் பயணம் உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். புண்ணியம் சேரும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். வீண் பிரச்சனைகள் அகலும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். ஆசைகள் பூர்த்தியாகும். வாயில் தேடி வரன் வரும். வியாபாரத்தில் வேகம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். வரவுகள் திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். தாய் வழி தகராறுகள் குறையும். குடும்ப கௌரவம் உயரும். காதல் கைகூடும். கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். விரக்திகள் மறையும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் உயரும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். தேக ஆரோக்யம் மிளிரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும். விரோதங்கள் விலகும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: அன்னமாரி சுவாமி, அதிர்ஷ்ட எண்: 6,3,9,1*
*அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* K,P

**(தொடர்ச்சி *30* பக்கம்)**

# ஈழத்துத் திருக்கோயில்கள் 1045



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கருமாரி அம்மன் ஆலயம் புத்தளம்

*“ கல்லாத மாந்தரின் கண்ணீரை நீக்கிடும்*
*கருவண்ண அன்னை நீயே*
*கற்றோரின் நெஞ்சத்தில் கலங்கரை விளக்கான*
*காவியச் சுடரும் நீயே*
*வில்லாக வேலாக வினை தீர்க்கும் மருந்தாக*
*விளங்கிடும் சக்தி நீயே*
*வேண்டிடும் நல்வரம் விரைவாகத் தந்திடும்*
*கருமாரி அம்மன் தாயே உமையே.”*

ஆதியிலே திராவிட இனத்தவர்கள் அம்மை வழிபாட்டுக்காரராக இருந்துள்ளனர் என அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். அம்மை வழிபாடு என்ற பதமே மக்கள் வாய்மொழியில் அம்மன் வழிபாடென மருவிற்று. மானிட பண்பாட்டு வளர்ச்சியின் ஒரு காலப்பகுதியில், பெண்களே முதன்மை பெற்றவராக விளங்கியுள்ளனர். இக்காரணத்தினால் அக்காலப்பகுதியில் பெண்தெய்வ வழிபாடும் முதன்மை பெற்றுக் காணப்பட்டுள்ளது. இவ்வாறான நிலை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலே காணப்பட்டிருக்க வேண்டும்.

இந்தியாவின் வடமேற்கிலே சுமார் 4500 வருடங்களுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் இந்துநாகரிகம், திராவிடருடைய நாகரிகம் என்பது பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்நாகரிகத்திலே அம்மை வழிபாடு காணப்பட்டமைக்கான சான்றுகள் உண்டு. பழமையான சிந்துவெளி நாகரிகத்திற்கு முற்பட்ட கிராமிய நாகரிகங்களிலேயும் அம்மை வழிபாடு நிலவியுள்ளது.

சக்தியை பல்வேறு நிலையிலே வழிபடும் வழக்கம் இந்துக்களிடையே காணப்படுகின்றது. இவற்றுள் மாரியம்மன் வழிபாடு மிகத் தொன்மை மிக்கது. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மாரியம்மனுக்குத் தனிக்கோயில்கள் காணப்படுகின்றன. மாரியம்மனை பல்வேறு திரு நாமங்களுடன் கோயில்களிலே எழுந்தருளச் செய்துள்ளார்கள். மகாமாரி, கருமாரி, எல்லையம்மன், செல்லிஅம்மன், அங்காளம்மன், சீதளாதேவி, இரேணுகாதேவி, போன்ற திருநாமங்கள் அனைத்தும் மாரியம்மன் அம்சமாகவே போற்றப்படுகின்றது.

கிராமிய வழிபாட்டின் ஒரு நிலையாகக் கருதப்படுவதோடு சிறுதெய்வ வழிபாட்டின்பாற்படும் மாரியம்மன் வழிபாடு, கிராமிய மக்களிடையே தோன்றிய அச்சத்தின் வெளிப்பாடு என்பது ஆய்வாளர் கருத்து. சிலப்பதிகாரத்திலே இடம்பெற்ற கண்ணகி வழிபாடே மழைதரும் தெய்வம் என்ற பொருளில், மாரிஅம்மன் வழிபாடாக உருப்பெற்றது என்ற கருத்தும் நிலவுகின்றது.

மாரிஅம்மனுக்குப் பெருங்கோயில்கள் அமையாது சிறுகோயில்களில் வழிபாடு நடைபெற்றுவந்த காலத்தில், மாரி அம்மனுக்குத் தனிக்கோயில் அமைக்க வழிகாட்டியவர்களாக சோழமன்னர்கள் விளங்கியுள்ளனர். தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பிற்காலச் சோழ மரபினரே மாரியம்மனுக்குத் தனிக் கோயில்கள் எடுத்துள்ளனர். கோயில்பெயரும், ஊர்பெயரும் ஒன்றாகக்கொண்ட மாரியம்மன் கோயில் என்ற ஊர், தஞ்சாவூருக்குக் கிழக்கே காணப்படுகின்றது. இங்குள்ள ஆலயம் கி.பி 10 ஆம் நூற்றாண்டில் தோன்றியதென்பர்.

அம்மை வழிபாடு உயரியமட்டத்தில் ஆகம வழிபாடு சார்ந்ததாக விளங்குகின்றது. இவ்வழிபாட்டில் ஸ்ரீசக்கரபூசை முதலிடம் பெறும். அம்பிகையை நவசக்திகளாகப் பாவனைபண்ணி இடம்பெறும் நவசக்தி வழிபாடு, சக்திவழிபாட்டின் முக்கிய அம்சமாகும். ஆகமமுறைகளை அநுசரியாது கிராமிய மட்டத்தில் நாட்டார் வழிபாடாகவும் அம்பிகையை வழிபடும்மரபு காணப்படுகின்றது. இவ்வழிபாட்டில் இடம்பெறும் தெய்வ வழிபாட்டில், மாரியம்மன் வழிபாடு குறிப்பிடத்தக்கதாகும். கிராமிய வழிபாட்டில் ஆத்மார்த்தமான ஒரு நிலையை, வெளிப்பாட்டினை உணரமுடியும். உண்மையோடு வழிபடும் அடியவர்களில் அம்மை வெளிப்பட்டு வழிகாட்டும் என்பதில், நிலையான நம்பிக்கையை கிராமிய வழிபாட்டிலே காணமுடியும்.

இவ்வாறு அம்பிகை வெளிப்பட்டு நிற்கும் அடியார்கள் கூறும் வாக்கினை, அருள் வாக்காகக் கொண்டு அதனைச் செயற்படுத்தும் மனநிலையை, கிராமிய வழிபாடு மக்களுக்கு அளித்துள்ளது. இந்தியாவிலும், இலங்கையிலும் மிகச் சிலவாகவே கருமாரியம்மன் கோயில்கள் காணப்படுகின்றன. மாரிஅம்மனுடைய தோற்றப்பாட்டினின்றும் கருமாரியம்மன் அம்சம் வேறுபட்ட நிலையிலே காணப்படுகின்றது. கருமாரியம்மனை எதற்காக இவ்வாறு அழைக்கின்றார்கள் என்பதற்குரிய கதை புராண வரலாற்றிலே கூறப்பட்டுள்ளது.

**- வளரும்...**

## இவ்வார ராசிபலன்

*(29 பக்கத் தொடர்ச்சி)*





**தனுசு:** *கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும் வாரம். எடுத்த தொழில் முயற்சியில் வெற்றி உண்டாகும். உள்ளம் மகிழும். பொல்லாதவர்கள் தொல்லைகள் ஒழியும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். உறவுகளால் நன்மை ஏற்படும். பயணம் வெற்றி தரும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. கல்வியில் மேன்மைகள் உண்டாகும். துயரம் இல்லாத உயரங்களை சந்திப்பீர்கள். முன்னோர்கள் ஆசீர்வாதம் உண்டு. முன்னேற்றங்கள் அதிகரிக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். அனுகூலச் செய்திகள் வந்து சேரும். ஆபரணப் பொருள் களவுப்போகும். சுபச்செய்தி தேடி வரும். பாராட்டுக்கள் உயரும். அலைச்சல் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிட்டும். வியாபாரம் சுமாராக இருக்கும். வாகன மாற்றம் ஏற்படும். கடன்சுமை குறையும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மாலை நேரத்தில் இனிய தகவல் வந்து சேரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பணியாட்கள் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். வளமான சிந்தனை உதயமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். தீமைகள் விலகும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். பயணங்களால் வெகுமதி கூடும். கூட்டுப்பிரார்த்தனை நன்மை தரும். இடையூறுகள் அகலும். பெண்களுக்கு பெருமை சேரும். பொது வாழ்வில் புகழ் கூடும். தொழில் வளர்ச்சி பெருகும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். ஆன்மீக நாட்டம் ஏற்படும். வறுமையின் வாட்டம் குறையும். அவமானங்கள் அகலும். உதவிகள் கிடைக்கும். வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வெகுமானம் கிடைக்கும்.*
*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பிரம்மசக்தி, அதிர்ஷ்ட எண்: 2,4,9,6*
*அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,Z*




**மகரம்:** *கர்ஜனையோடு வலம் வரும் வாரம். பிரிந்த கணவன், மனைவி ஒன்று சேர்வார்கள். பெற்றோர்கள் உதவி கிடைக்கும். விவேகம் வெற்றி தரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எண்ணங்களால் ஏற்றம் பெருகும். உடல்பொலிவு கூடும். பணப்பற்றாக்குறை நீங்கும். கல்வியில் கவனம் தேவை. பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உறவினர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டாகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். விறுவிறுப்பாக செயல்படுவீர்கள். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் தொடரும். வெளிவட்டாரத் தொடர்பு பெருகும். வேண்டாத நபர்கள் விலகுவர். வினைகள் அகலும். புதுமைகள் நிறைந்த காலம். நல்லச்செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் அகலும். உயர் பதவி யோகம் உண்டு. மன உற்சாகம் களை கட்டும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வ திருப்பணிகளில் ஆர்வம் கூடும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். பொருள் வரவு இருக்கும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பணியில் பாராட்டு கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வயிறு உபாதைகள் வந்து போகும். வார்த்தைகளில் சற்று கவனம் தேவை. நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். வியாபாரம் சிறக்கும். மனைவி பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். திடீர் பயணம் ஏற்படும்.*
*வழிபட வேண்டிய தெய்வம்: ஈசான்ய லிங்கம், அதிர்ஷ்ட எண்: 4,9,2,3*
*அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J*




**கும்பம்:** *மாங்கல்ய பாக்கியம் அமையும் வாரம். பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். காரிய வெற்றி கிட்டும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். ஆடம்பர பொருள் சேரும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். குடும்ப குழப்பங்கள் அகலும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். கடன் பாக்கிகள் வசூலாகும். பணவரவு திருப்தி தரும். குடும்ப குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோ'ம் அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். சகோதர ஒற்றுமை உண்டு. ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். உழைப்பு கடுமையாக இருக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய தொழில் அமையும். பெருமைகள் சேரும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். பயணம் அனுகூலம் தரும். மனம் மகிழ்ச்சி அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கலில் திருப்தி ஏற்படும். சகோதர ஒற்றுமை பலப்படும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் வாயில் தேடி வரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். ஆண்களின் அதிகாரம் உயரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். சுப விரயம் உண்டு. குடும்ப மேன்மைகள் உண்டாகும்.*
*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வைகுண்ட நாதர், அதிர்ஷ்ட எண்: 9,7,5,4*
*அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N*




**மீனம்:** *இனிய நட்புக்களால் பெரிய வெற்றி கிடைக்கும் வாரம். உண்மைகள் வெளிப்படும். உறவுகள் தாமதமாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தன சேர்க்கையுண்டு. மன நிம்மதி குறையும். அலைச்சல் அதிகரிக்கும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். வாகனச் செலவு ஏற்படும். பணியில் பாராட்டுக் கிட்டும். சிக்கனத்தை கையாள வேண்டும். பொறுப்புக்கள் கூடும். சேமிப்பு அதிகமாகும். புதிய சிந்தனை உதயமாகும். அணிகலன்கள் சேர்க்கை ஏற்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் உண்டாகும். கௌரவத்தில் கவனம் தேவை. கலக்கமான மனநிலை காணப்படும். பயணம் அனுகூலம் தரும். வரவுகள் திருப்தி தரும். உதவிகள் குவியும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். அத்தியாவசிய தேவைககள் பூர்த்தியாகும். போதிய தனவரவு இருக்கும். மாலை நேரத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு ஆபரணம் சேரும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். எதிர்ப்புக்கள் தவிடுப்*
*பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். அதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பெருமைகள் கூடும். செல்வாக்கு உயரும். குடும்ப அன்யோன்யம் சிறக்கும். நல்லச் செய்திகள் நாடி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் பிடிப்பு ஏற்படும். முயற்சிகளில் வளர்ச்சியடையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். தொழில் ரகசியம் காப்பது நல்லது. உறவினர்களிடம் சஞ்சலம் ஏற்பட்டு மறையும்.*
*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ செல்வநாயகி, அதிர்ஷ்ட எண்: 7,4,1,2*
*அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R*

# MORTGAGE FINANCIAL

RESIDENTIAL · COMMERCIAL · INDUSTRIAL · VACANT LAND · CONSTRUCTION




SUBRA MORTGAGE SOLUTIONS

## NESAN

416-908-5656

| 1st & 2nd Mortgages | Purchase | Refinance
| Renewal | Switches | Equity lind of Credit
| Pre-approvals | Self-employed | Multi-rental properties
| New immigrants

**WE DEAL WITH ALL BANKS** Brokerage #10530

**Powered By**

Mortgage Alliance · Scotiabank · radius financial · TD Canada Trust · Home Trust · Equitable Bank · RFA Bank of Canada · MCAP · First National Financial LP · RMG mortgages

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd,
Unit #406,
Toronto, ON.
Canada M1B 2W1

www.subra.com

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்... 26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

Lanka லங்கா
Salon & Spa சலூன்
Haircut | Hair Styling | Shaving
Men's Hair Cut
Beard Lineup
Kid's Hair Cut
Hair Oil Massage
Baby Shave
Hair Colouring
Facial
BARBER SHOP
905-808-9930 5 MCMURCHY AVE N, UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
905-783-1895 3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1412 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 28, 2023

## "கலைவேந்தன்" கணபதி ரவீந்திரன் அவர்களின் அகவை எழுபது பெருவிழாவில் மண்டபத்தை நிறைந்து மகிழ்வித்தபல்துறை சார்ந்த தமிழன்பர்கள்



தாயகத்தில் எழுத்தாளனாகவும் ஊடகவியலா-ளராகவும் பணியாற்ற ஆரம்பித்து கனடாவிலும் பத்திரிகை. வானொலி. தொலைக் காட்சி மற்றும் நாடகம் எழுத்து கவிதை என பல துறைகளில் கால்பதித்து தன் கலைப் பணியைத் தொடர்பவர் “கலைவேந்தன்“ கணபதி ரவீந்திரன் ஆவார். அன்னாரின் அகவை எழுபது பெருவிழா கடந்த சனிக்கிழமையன்று ஸ்காபுறோ ஜேசி விழா மண்பத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மொன்றியால் வாழ் கலைஞரும் அறிவிப்பாளருமான அர்யுன் அவர்கள் நிகழ்ச்சிகள் அனைத்தையும் அழகாகத் தொகுத்து வழங்கினார். அன்றைய தினம் மண்டபத்தை நிறைந்து விழாவை அழகுறச் செய்த பல்துறை சார்ந்த தமிழன்பர்கள் நண்பர்கள் மற்றும் யுகம் வானொலி நிலையத்தின் அறிவிப்பாளர்கள் மற்றும் கலைஞர்கள் மிகுந்த உற்சாகத்தோடு விழா நாயகனான கணபதி ரவீந்திரன் அவர்களை வாழ்த்தியும் போற்றியும் சென்றார்கள்.


(உள்ளே தொடர்ச்சி 12ம் பக்கத்தில்)

## வவுனியாவில் மறைந்த பத்திரிகையாளர் மாணிக்கவாசகம் அவர்களின் இல்லத்தில் அஞ்சலி செலுத்திய கனடா உதயன் குழுவினர்



அண்மையில் வவுனியாவில் மறைந்த பத்திரிகையாளர் மாணிக்கவாசகம் அவர்களின் இல்லத்திற்கு சென்ற கனடா உதயன் குழுவினர் மறைந்த மாணிக்கவாசனம் அவர்களின் துணைவியாரை சந்தித்து அஞ்சலி செலுத்தினர்.

மேற்படி கனடா உதயன் குழுவில் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம், அவரது துணைவியார், இலங்கயில் மூத்த பத்திரிகையாளர் தேவராஜ், கனடா உதயன் சென்னைப் பிரதிநிதி அருண் கதாகரன் மற்றும் நா. சிவராமன் ஆகி-யோர் அடங்கியிருந்தனர். மறைந்த பத்திரிகையாளர் மாணிக்கவாசகத்தின் துணைவியார் ஓய்வுபெற்ற அதிபர் நாகேஸ்வரி அவர்கள் மேற்படி குழுவினரோடு உரையாடி தனது மறைந்த கணவரின் பத்திரிகை துறை பங்களிப்பையும் உழைப்பையும் பற்றி நினைவுகளையும் பற்றி பகிர்ந்துகொண்டுள்ளார்.



## யாழ் பல்கலைக் கழகத்தில் சிவாஜி கணேசன் வரலாற்று நூல் வெளியீட்டு விழாவில் கனடா "வீணைமைந்தன்" எழுதிய "சிவாஜி கணேசனும் சினிமாவும்" நூல் சிவாஜி கணேசனின் மூத்த மகன் ராம்குமாருக்கு வழங்கப்பெற்றது

கடந்த ஞாயிற்றுக்கிழமை 23ம் திகதி யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற சிவாஜி கணேசன் வரலாற்று நூல் வெளியீட்டு விழா மேடையில் கனடா எழுத்தாளர் வீணைமைந்தன் எழுதிய “சிவாஜி கணேசனும் சினிமாவும்“ என்னும் நூல் சிவாஜி கணேசனின் மூத்த மகன் ராம்குமாருக்கு வழங்கப்பெற்றது.

மேற்படி விழாவிற்கு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் உயர்திரு ஸ்ரீசற்குணராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். அதில் கலந்து கொள்வதற்காக விசேடமாக யாழ்ப்பாணத்திற்கு அழைக்கப்பெற்ற சிவாஜி கணேசனின் மூத்த மகன் ராம்குமாருக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பெற்றது.

(உள்ளே தொடர்ச்சி 11ம் பக்கத்தில்)

## மொன்றியால் மாநகரிலும் சிறப்பாக நடைபெற்ற எழுத்தாளர் சபிதா செல்வராஜா கோகுலன் அவர்களின் "ஒருத்தி" ஆங்கில நூல் வெளியீட்டு விழா



கனடா வாழ் எழுத்தாளர் சபிதா செல்வராஜா கோகுலன் அவர்களின் “ஒருத்தி“ ஆங்கில நூல் வெளியீட்டு விழா மொன்றியால் மாநகரிலும் கடந்த வாரம் சிறப்பாக நடைபெற்றது

கனடா வாழ் எழுத்தாளர் சபிதா செல்வராஜா கோகுலன் அவர்களின் “ஒருத்தி“ ஆங்கில நூல் வெளியீட்டு விழா மொன்றியால் மாநகரிலும் கடந்த வாரம் சிறப்பாக நடைபெற்றது அண்மையில் கனடாவிலும் எமது தாயகத்திலும் படமாக்கப்பெற்ற “ஒருத்தி“ தமிழ்த் திரைப்படத்தை தயாரித்த பி. எஸ் .சுதாகரன் அவர்களின் கதையைத் தழுவி ஆங்கிலத்தில் திரைப்படத்தின் கதை ஆக்கித் தந்த எழுத்தாளர் திருமதி சபிதா செல்வராஜா கோகுலன் இந்த நூலைப் படைத்திருந்தார்.

(உள்ளே தொடர்ச்சி 14ம் பக்கத்தில்)

## கலைவேந்தன்" கணபதி ரவீந்திரனுக்கு அகவை எழுபது வாழ்த்துக்களைத் தெரிவித்த ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக்போர்ட்



கனடா வாழ் கலைஞரும் “யுகம்“ வானொலி நிலையத்தின் அதிபருமான “கலைவேந்தன்“ கணபதி ரவீந்திரன் கடந்த வாரம் தனது அகவை எழுபது கொண்டாட்டத்தை தனது நண்பர்கள் மற்றும் கலைஞர்கள் சகிதம் நடத்தினார். அவருக்கு சிறப்பைத் தரும் வகையில் ஒன்றாரியோ மாகாண பாராளுமன்ற உறுப்பினர் நண்பர் லோகன் கணபதி அவர்கள் மிகவும் உற்சாகத்துடன் பாராளுமன்ற வளாகத்திற்கு அழைத்து அவருக்கு வாழ்த்துக்கத் தெரிவித்ததோடு

ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக்போர்ட் அவர்களின் வாழ்த்துக்களை நேரடியாகப் பெறவும் வழி செய்தார். இங்கே காணப்படும் படத்தில் கலைவேந்தன்“ கணபதி ரவீந்திரனுக்கு அகவை எழுபது வாழ்த்துக்களைத் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக்போர்ட் அவர்கள் தெரிவிப்பதைக் காணலாம்.